
தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் மாநாடு

மகளிர் மேம்பாட்டு மலர்




காரைக்கால் அம்மையார்

3,4,5-5-2002 கோவிலூர்



தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் மாநாடு

மகளிர் மேம்பாட்டு மலர்



மலர் வெளியிடப்பட்ட ஞானபீடம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307
சிவகங்கை மாவட்டம்

முதற் பதிப்பு: மே 2002

❑

மக்கள் பதிப்பு மலிவு விலை : ரூ. 15

மொத்த பக்கங்கள்: 36 + 96 = 132

❑

ஓவியங்கள் : பத்மவாசன்

❑


மலர் வெளியீடு:

மதிநிலையம்
4(39) தணிகாசலம் சாலை,
பிருந்தாவன் அடுக்ககம்,
தியாகராய நகர்,
சென்னை- 600 017
✆ 4311838

❑

Laser Type set and Designed by
Mathi Nilayam
Chennai - 17
Ph : 4311838

Printed at :
SELVA VINAYAGA OFFSET,
Chennai - 5.
Ph :848 7933.



கோவிலூர் ஆதீனம் ஆசியுரை

நகரத்தார் குருபீடம் கோவிலூர் ஆதீனம்
தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் ஆசியுரை:

முன்னோர் பின்னோர் என்று பெருமை பெற்ற குலம் நகரத்தார் குலம். தொண்ணூற்றாறு ஊர்களில் தொன்று தொட்டு வாழும் பெருமக்கள், திரைகடலோடித் திரவியம் தேடிச் செய்த அறப்பணிகள், கல்விப் பணிகள், சமூகப் பணிகள் ஏராளம். வரலாற்றுப் புகழுடையது.

சிவத் ஸ்தலங்கள், முருகன் தலங்கள், வைணவ தலங்கள் முதலிய இடங்களில் சத்திரங்கள் கட்டி, கோயில் தரும காரியங்களுடன், அன்னதானங்கள் செய்து மற்றோரும் போற்ற பெருமை பெற்றனர். தொடர்ந்தும் நகரத்தார்கள் இன்னும் அத்தகைய பணிகளை வெளிநாட்டு வாணிபம் சுருங்கிய போதும், இப் பணிகள் சுருங்காது பெருக்கி வருகின்றனர்.

நகரத்தார்கள் தாம் வாழும் இடங்களிலும் நகரத்தார் சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், முதியோர் இல்லங்கள், முதலியன நடத்தி வருகின்றனர்.

இப் பெருங் குலத்தைக் கட்டிடக் காத்த பெருமை பெண்டிருக்கு உண்டு. இல்லத்தில் நிருவாகிகளாக இருந்து பண்பாடு, பொருளாதாரம், உறவுகள் இவைகளைக் காத்து வந்த



பெருமை நம் நகரத்தார் பெண்களுக்கு என்றும் உண்டு.

ஒரு சமூகம் சீர்குலைந்த இடைக்காலத்தில், பெரியவர்கள் தோன்றி சீர்திருத்துவதனை விட, தொடக்க காலம் முதல் அச் சமூகத்தில் உள்ள இளம் சிறுவர்களுக்கு, சிறுமியருக்கு, தொடக்க முதல் நல்ல கருத்துக்களைக் கூறிவந்தால் சமூகம் என்றும் சுபிட்சமாக இருக்கும். மேலும் அக்குலம் தொடக்க முதல் மேம்பாட்டினை அடையும். எனவே தாய்மார்கள் தம் பிள்ளைகளை வளர்ப்பதில், தொடக்கமுதல், இறைப்பற்று, இனப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று முதலிய நற்பண்புகளைப் போதிக்க வேண்டும்.

பெண்குலமும் வளரும் சமுதாயத்தின் போக்கினை உணர்ந்து, பழம் பெருமைகளைக் கட்டிக் காத்து புதிய உலகத்திற்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ள வேண்டும். அனைத்து வெற்றிக்கும் பின் 'சக்தி' தான் இருக்கிறாள்.

பல நல்ல காரியங்களைச் செய்யக் கோவிலூரில் 96 ஊர் மாநாடு கூட்டும்பொழுது நகரத்தார் பெண்கள் மேலும் மேலும் மேம்பாடடைய ஓர் மலரினை மதி நிலையம் திரு. சுப. மெய்யப்பன், பேராசிரியர் ஆறு. அழகப்பன், கா. சந்திரசேகரன் முயற்சிகளால் வெளியிடுவது பெரிதும் பாராட்டத் தக்கது.


ஐம்பெரும் நாயன்மார்கள், பட்டினத்தார் வழிவந்த நகரத்தார்கள் மென்மேலும் திருநெல்லை நாயகி உடனாய கொற்றவாள் ஈசுவரர் அருளால் வளமுடன் வாழ்வார்களாக.

ஓம் தத் சத் ஸ்ரீ சற்குருநாதன் துணை



மலர்க்குழு

30-1



முனைவர் ஆறு.அழகப்பன்
மகளிர் மேம்பாட்டு மலர்
ஆசிரியர்



கா.சந்திரசேகரன்
மகளிர் மேம்பாட்டு மலர்
இணை ஆசிரியர்



சுப.மெய்யப்பன்
மகளிர் மேம்பாட்டு மலர்
வெளியீட்டாளர்



மலரின் உள்ளே...

❑ ❑ ❑

மலர் மணம்

இறைவன் படைத்த மலர்களில் வண்ணமும் மணமும் மிகவும் அதிசயிதக்கன.

மரிக்கொழுந்து மணம் மல்லிகைக்கு இல்லை!

மல்லிகையின் மணம் முல்லைக்கு இல்லை!

முல்லையின் மணம் சம்பங்கிக்கு இல்லை!

சம்பங்கியின் மணம் சாமந்திக்கு இல்லை!


சாமந்தியின் மணம் செண்பகப் பூவுக்கு இல்லை!

செண்பகப் பூவின் மணம் தாழம்பூவுக்கு இல்லை!

தாழம்பூவின் மணம் ஜாதிமல்லிக்கு இல்லை!

இதுபோல மக்களின் மனமும் குணமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இனத்துக்குத் தக மக்களின் மனமும் குணமும் மாறுபாடுகள் கொண்டதாக இருக்கும். இதனை நாம் பல இன மக்களோடு பழகும்போது அறியலாம்.

செட்டிநாட்டுச் சீமையைச் சேர்ந்த தாய்க்குலம் பிற இனத்தவர் போற்றும் பண்புகளைக் கொண்டு வாழும் குலமாக இருந்து வருகிறது. நகரத்தார்களும், அயலவர்களும் போற்றிப் புகழ்ந்திடும் ஆச்சிமார்களின் பல பண்புகளும் குணங்களும் அரசியல், பொருளாதாரம் சமூகச் சூழல்களால் மாறுபடுவதுண்டு. அதனால் வாழ்வில் ஏற்றம், இறக்கம் இருப்பதும் தவிர்க்க இயலாததே! நவீன உலகில் பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தேச தலைவர்களும் ஆன்மீக அடியார்களும்,




அறநெறியாளர்களும், எத்தனையோ கருத்துக்களைக் கூறிவருகின்றனர். மகளிர் ஆண்டு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு தேர்தல்களில் குறிப்பிட்ட பதவிகளுக்குப் பெண்கள் வரவேண்டும். மகளிர் காவல் நிலையம் முதலிய பல அமைப்புகள் பெண்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்பதால் உருவாக்கப்பட்டவையாகும். இத்தகைய எண்ண அலைகளால் நாட்டுக் கோட்டை நகரத்தார் மகளிர் மேலும் மேலும் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கில் வரும் இம்மலர் கோவிலூர் ஆதீன திருமடத்திற்கு 12 வது பீடாதிபதியாக எழுந்தருளியுள்ள **தவத்திரு சீர் வளர்சீர் நாச்சியப்ப சுவாமிகள்** கோவிலூரில் மே 3, 4, 5 (2002) ஆகிய தினங்களில் தொண்ணுற்றாறு ஊர் நகரத்தார்கள் மாநாடு கூட்டிடும் வேளையில் இம்மலரும் வெளிவர எங்களால் எண்ணப்பட்டது.

தவத்திரு ஆதீனம் பட்டத்திற்கு வந்த பிறகு அவர்களின் திருப்பணிகள் இந்தியா மட்டுமல்லாமல், அமெரிக்க நாட்டிலும் விரிந்தது. ஆதீனம் கலந்து கொண்ட பல சங்கங்களின் ஆண்டு விழாக்களில் அச்சங்கங்கள் நற்பணிகள் செய்து வருவதனை அறிந்து ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூபாய் இலட்சம் அல்லது அதற்கு மேல் அளித்துள்ளார்கள். பம்பாய், அம்பத்தூர், திருவெற்றியூர், தஞ்சாவூர், சேலம் முதலிய ஊர்களில் உள்ள நகரத்தார் சங்கங்களுக்கு வாரி வழங்கியுள்ளார்கள். நகரத்தார்கள் முதியோர்களுக்கு ஓய்வு ஊதிய உதவிப் பணங்கள், எண்ணற்றவர்களுக்கு அளிப்பதோடு நில்லாமல், சென்னையில் உள்ள அடைக்காத்தாள் முதியோர் இல்லத்திற்கும் நல்உதவித் தொகை நல்கியுள்ளார்கள்.

புத்தம் புதிய கலை நுட்பத்தோடு கட்டிடங்கள், மண்டபங்கள் மனம் மகிழ எழுப்பியுள்ளார்கள். ரிஷிகேஷில் நாற்பது அறைகள் கொண்ட கட்டிடம், மண்டபங்கள், திருவண்ணாமலை, கோவிலூர் முதலிய இடங்களில் தங்கிட அறைகள், கோவிலூரில் விருந்தினர் விடுதி, திருமண மண்டபம் முதலியன நிர்மாணித்துள்ளார்கள்.

அமெரிக்காவில் நிலம் வாங்கி விடுதி, பண்பாட்டுக் கலைக்கூட மையம் அமைத்திடக் கட்டிடங்கள் எழுப்பிவருகிறார்கள்.



சனாதன உலகப் பல்கலைக்கழகம் உருவாக்கிடும் பெருமுயற்சியில் இறங்கி வெற்றிபெற்று வருகிறார்கள்.

நகரத்தார்கள் - படிப்பு உதவி கேட்டுவந்தால் தட்டாது, தயங்காது உதவிட வேண்டும் என்று 7 கோடி ரூபாய் அளவில் அறக்கட்டளை நிதியம் உருவாக்கியும் வருகிறார்கள். முதியோர் உதவி, நிலையாகச் செய்திட ஒரு கோடி வைப்புநிதி உருவாக்கிடத் திட்டம் வகுத்துள்ளார்கள்.

தம் வாழ்நாளில் ஈட்டிய கோடிக்கணக்கான தொகைகளை மடத்திற்கு அளித்து, அயராது அரும்பணியாற்றி வரும் இத் தியாகத் தொண்டுத் திலகமாக விளங்கும் **தவத்திரு. நாச்சியப்ப சுவாமிகளை** குருபீடமாக கொண்டுள்ள நகரத்தார் குலம் செய்த தவப்பயனே காரணம் எனலாம்.

கோவிலூர் மாநாட்டில் ஏழு பொருள்கள் விவாதிக்கப்படுகின்றன.

அவை :

1. கல்வி மேம்பாட்டுக்கு உதவிகள்.
2. வேலை வாய்ப்புகள்.
3. மணமுறிவைத் தவிர்த்தல்.
4. முதியோருக்கு உதவி
5. நலிவடைந்த நகரவிடுதிகளின் சீரமைப்பும் வெளிநாடுகளில் உள்ள தருமங்களும்.
6. மகளிர் மேம்பாடு.
7. திருமண நடைமுறைகள்.

இவைகளில் தனியாக ஒரு பொருள் மகளிர் மேம்பாடு என்று உள்ளது குறிப்பிடத்தக்கது. 5-வது பொருளைத் தவிர மற்ற பொருள்கள் மகளிரோடு தொடர்புடைய பொருள்களாகும். எனவே மங்கையர் குல மேம்பாட்டு மாநாடு என்று கூறினாலும் பொருத்தமுடையதே.

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின் பெண் இருக்கின்றாள் என்று சொல்வார்கள். இம்மொழி செட்டிநாட்டு ஆச்சிமார்களுக்கு எவ்வளவு பொருந்துகிறது என்பதை அவர்களுக்கே விட்டுவிடுகின்றேன். ஆனால் ஒரு சமூகத்தின் மிகப்பெரிய வெற்றி அச்சமூகத்தின் அடித்தளமான பெண்கள் கையில்தான் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. வள்ளுவரும் குடும்ப பெண்களை மனையாள், இல்லாள், வாழ்க்கைத் துணைநலம் என்றெல்லாம் குறிப்பிடுகின்றார். நாட்டுக்கோட்டை நகர மங்கையர் பல வகைகளில் நலிந்து வருகின்றார்கள் என்று அறிவதால் அவர்கள் மேலும் நலிவடையாமல் இருக்க வரப்பெற்ற கட்டுரைகளையும், கவிதைகளையும் குறுஞ் செய்திகளையும் இம்மலரில் இடம் பெறச் செய்துள்ளோம். மேலும் மலர், மணமாக இருக்க வேண்டும் என்பதற்காக, தனவணிகன், நகரத்தார் மலர், நகரத்தார் இதழ், ஆச்சி வந்தாச்சு, நகரத்தார் கலைக்களஞ்சியம் முதலிய இதழ்களில் இருந்தும் சில தொடர்புடைய பகுதிகளையும் மலரில் சேர்த்துள்ளோம். இந்த மலரின் வனப்பு கூடுவதற்கு உதவியாக இருந்த மீனாட்சி மைந்தர் வி. என். சிதம்பரம், சமூகநேயர்


நா. இளங்கோவன், அயராக் கொள்கையாளர் சுப. செந்தமிழ்ச் செல்வன் ஆக்கச்செம்மல் முனைவர் ச. மெய்யப்பன் முதலியவர்களுக்கு மலர் குழுவின் சார்பாக நன்றி மலரைக் காணிக்கை ஆக்குகிறேன்.

இம்மலர் குறுகிய காலத்தில், ஆனால் 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரைப் போல் இருக்க வேண்டும் என்று விரும்பிய வேளையில் வரலாற்றில் இடம் பெறத்தக்க பல பெருந்தமிழ்ப் பணிகளையும், தமிழ் இசைப் பணிகளையும் செய்த ஆத்தன்குடி திரு. கா. அரு. கா. காடப்ப செட்டியாரின் மக்கள் செல்வங்களின் தொண்டர் திலகமாகத் திகழும் கா. சந்திரசேகரன் அவர்கள் இணை ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் செய்த உதவிகள் சொல்லிச் சொல்லி மகிழத்தக்கது. அதே போல் வற்றாத கங்கைபோல் புத்தக உலகில் வித்தகங்கள் பல செய்ய வேண்டும் என்று வாழ்ந்து காட்டித் 'தெய்வம் பேசுகிறது' ஆசிரியராக முத்திரை பதித்த தேவ கோட்டை வளர்மதி ஆவார்கள். அன்னாரின் தொடர் பணியாளராகத் திகழும் அவர் மைந்தர் எஸ்.பி. மெய்யப்பன் அவர்கள் இம்மலரினை வெளியிடும் பொறுப்பினை வினாடி கூடச் சிந்திக்காது ஏற்றுக் கொண்டார். நம் சமூகத்திற்கு இவ்வாறு செய்ய வாய்ப்புக் கிடைத்தது என்று சொல்லிக் குறுகிய காலத்தில் நேர்த்தியாக அச்சிட்டும் தந்துள்ளார். இவ்விரட்டையர்கள் இம்மலர் மணக்க உரமாகவும், நீராகவும் விளங்கினார்கள். இம்மலர் மலரும் வேளையில் உற்றுழி உதவும் கரமாக இருந்த ஆத்தன்குடி. அழ. தெட்சணாமூர்த்தியும் மிகவும் பாராட்டுக்குரியவர். இவர்களுக்குக் கோவிலூர் ஆதீனத்தின் அருளாசி மேலும் மேலும் கிடைக்க வேண்டி இந்த நன்றி மலரினையும் ஆதீனத்தின் பாதகமலத்தில் காணிக்கை ஆக்குகிறேன்.

நம் சமூகத்தில் அறப்பணிமலர், கல்வி மலர், நூற்றாண்டு மலர், சங்க ஆண்டு விழா மலர்கள், கும்பாபிஷேக மலர் என்று பல மலர்கள் வந்துள்ளன. மகளிர் மேம்பாட்டு மலர் என்று முதன் முதலாக வருவது இம்மலரே! இம்மலரை நகரத்தார்கள் பொன்மலராகப் போற்ற வேண்டும். தங்கத்தைப் பாதுகாக்கும் மனப்பான்மை போல இம்மலரையும் பாதுகாக்க வேண்டும்.

-முனைவர் ஆறு. அழகப்பன்

மகளிர் மேம்பாட்டு மலர்க்குழு ஆசிரியர்.



கோவிலூர் மடம்

கோவிலூர்

சைவ வழக்கில் கோவில் என்பது சிதம்பரத்தைக் குறிக்கும். நகரத்தார்களின் தலை நகராய், அவர்களுடைய சமயத் தலைவராய் உள்ள கோவிலூர் மகா சந்நிதானம் கொலு வீற்றிருக்கும் தலமாய் விளங்குவது கோவிலூர். இது காரைக்குடி நகர் அருகே அமைந்த சிற்றூர். இங்குள்ள கொற்றவாளீசுவரர் கோவிலும் திருநெல்லை அம்மன் கோவிலும் சிறப்புச் சிறப்பும் தோற்றப் பொலிவும் உடையன.

கோவிலூர் மடம்

வேதாந்த மடங்களில் மிகவும் சீரும் சிறப்பும் பெற்றது கோவிலூர் மடம். இது 1818-ல் ஏற்பட்டது. வேதாந்தப் புலமையும் அருளும் ஆற்றலும் நிறைந்த பெரியோர்கள் இங்கு செங்கோல் ஓச்சி வந்துள்ளனர். இவர்கள் ஆதரவில் வெளிவந்த நூல்கள், மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள், தொடங்கப் பெற்ற கிளை மடங்கள், பயிற்சி பெற்ற மாணவர்கள் - துறவிகள் எண்ணிக்கை பெரிது.

முத்து இராமலிங்க ஞான தேசிகர் (ஆண்டவர்)

இவர்கள் காரைக்குடியில் மெய்யப்ப செட்டியார் - வள்ளியம்மை ஆச்சி என்னும் பெருமக்கட்குப் பிறந்து, இளமையிலேயே சிவ பக்தியில் திளைத்தார்கள். கந்தப்ப சுவாமிகள் என்னும் பெரியாரால் அருள் ஒளி பெற்றார்கள். பிறகு சிக்கலுக்கு அருகேயுள்ள (புறவச்சேரி என மருவி வழங்கும்) பொருள் வைத்த சேரிக்குச் சென்று, கந்தகுரு சாமிகளிடம் 13 வயதில் அருள் பெற்று ஞான வாசிட்டம் முதலிய சமய நூல்களைக் கற்று, 16 வயதில் கோவிலூரை அடைந்து மடத்தை நிறுவி மாணவர் பலருக்கு ஞானாசிரியர் ஆனார்கள். பல திருப்பணிகள் செய்தும் செய்வித்தும் கி.பி. 1847-ல் 29 ஆண்டுகள் அருளாட்சி செய்த பின் சமாதி நிலை அடைந்தார்கள்.

அருணாசல ஞான தேசிகர் (துறவாண்டவர்)

இவர்கள் தேவகோட்டையில் செல்வக் குடும்பத்தில் பிறந்து, வீடும் வாசலும் மறந்து, கோவிலூரை அடைந்து வேதாந்த சாத்திரங்களைப் படித்து, திருப்பாதிரிப்புலியூர் முத்துச் சரவண சுவாமிகளிடம் பரணிப் பிரபந்தம் பாடம் கேட்டார்கள். கோவிலூரில் துறவு பூண்டு, சிதம்பரத்திற்குச் சென்று பிச்சை ஏற்று உண்டு தியானத்தில் ஆழ்ந்தார்கள். பிச்சை கேட்ட வீடொன்றில் கணிகையர் இவர் அழகில் மயங்கி, கதவைத் தாழிட்டுத் தீய தொழிலுக்கு அழைத்தனர். அன்று முதல் வீட்டினுள் சென்று பிச்சை கேட்பதைக் கைவிட்டார்கள். சிவபெருமானே ஆதிசைவர் உருவத்தில் இவருக்கு அன்னமிட்டதாகவும் ஒரு செய்தி உண்டு. இவர்கள் காலத்தில் கோவிலூர் மடத்துக்கு வந்து வேதாந்த நூல்களை ஓதி உணரும் அடியார்களின் உணவு முதலிய வசதிகளின் பொருட்டு, இவர்கள் களத்தூர் என்னும் கிராமத்தை மடத்துக்குத் தேடி வைத்தார்கள். முத்துராமலிங்க ஆண்டவர் கோவிலூரில் லிங்க வடிவாகவும், துறவாண்டவர் நந்தி வடிவாகவும் வீற்றிருக்கின்றார்கள்.

கருணாநிதி சுவாமிகள்

இவர்கள் துறவாண்டவரின் உடன் பிறந்த தம்பி ஆவார்கள். சிதம்பரத்திலும் மதுரையிலும் கோவிலூரிலும் முறையே மூலஸ்தான ஈசுவரர் கோவில், மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில், ஆண்டவர் கோவில் திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் நடத்தி வைத்தவர்கள் இவர்களே.

இராமசாமி ஞான தேசிகர்

நான்காவது பட்டமாகிய இவர்கள் ஆண்டவர் கோவில் பிரகாரங்கள், கோவிலில் அஷ்ட லட்சுமி மண்டபம், மடத்தில் உணவு படைக்கும் மண்டபம் ஆகியவற்றை அமைத்தார்கள்.

வீரசேகர ஞான தேசிகர்

புதுவயலில் பிறந்த இவர்கள் திருக்களர் ஆண்டவர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர்கள். கோவிலூர் மடத்தைப் புகழ் பெறச் செய்தவர்கள். கோவிலூரிலும் சோழ நாட்டில் திருக்களர் என்னும் பாடல்பெற்ற பதியிலும் பல திருப்பணிகளைச் செய்தும், ஏராளமான கும்பாபிஷேகங்கள் செய்தும், தல யாத்திரை செய்தும் நெற்களஞ்சியங்கள், 63-வர் மடங்கள், பசு மடங்கள் போன்ற பலவகை ஆலயப் பணிகளைச் செய்பவரைக் கொண்டு செய்வித்தும், கோவிலூர்த் திருநெல்லையம்பாள் கோவில் திருப்பணியை முடித்தும், பல அற்புதத் திருவிளையாடல்கள் செய்தும் இவர்கள் இறையுணர்வை அனைவருக்கும் காட்டியவர்கள் ஆவார்கள். சிருங்கேரி சங்கராச்சாரிய மடத்தில் சாரதாம்பாள் கோயிலைக் கருங்கல் திருப்பணியாக்க நகரத்தாரிடம் 50,000 ரூபாய் வசூலித்துக் கொடுத்தவர்களும் இவர்களே. இவர்கள் நிகழ்த்திய அருட்செயல்கள் பலவாகும்.

அண்ணாமலை ஞானதேசிகர்

இவர்கள் 16 வயதில் துறவியாகி, பின் காசி யாத்திரை செய்து, 41-வது வயதில் கோவிலூர் மடாலயத் தலைமையேற்று, திருக்களரில் தமது குருமூர்த்தியாகிய திருக்களர் ஆண்டவர் சமாதிக்குக் கருங்கல் திருப்பணி முதலியன அழகுறச் செய்துள்ளார்கள்.

மகாதேவ ஞான தேசிகர்

இவர்கள் திருவண்ணாமலை ஈசானிய மடத்தில் தலைமைபூண்டு பிறகு கோவிலூரில் தலைமை ஏற்றார்கள். திருக்களரிலும் கோவிலூரிலும் சாணான் ஏந்தலிலும் இவர்கள் பல பணிகளைச் செய்துள்ளார்கள்.

சோமசுந்தர ஞான தேசிகர்

கோவிலூர்ப் பரம்பரையில் எட்டாவது பட்டமாக வந்த இவர்கள் 1971 பிப்ரவரியில் சாதாரண மாசி 4-ஆம் நாள் விதேக கைவல்லியம் எய்தினார்கள். இவர்களுடைய ஆணையின் வண்ணம் திருவண்ணாமலை இராமநாத சுவாமிகள், கோவிலூர் மடத்தின் தலைமையை ஏற்றுள்ளார்கள்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கோவிலூர் திருக்கோயில் திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழாவை நினைவில் கொண்டு, நகரத்தார் பெருமக்களின் பேராதரவுடன் 1978 ஆம் ஆண்டு திருக்கோவிலைப் பழுது பார்த்து நன்னீராட்டு விழாவைப் பொலிவோடும் புகழோடும் நடத்திய ஒன்பதாவது ஆதீனகர்த்தர் தவத்திரு இராமநாத ஞான தேசிக சுவாமிகள் ஆண்டவர் மன்றம் உருவாக்கி, நிருவாகத்தை மன்றத்திடம் ஒப்படைத்தார். எழுத்தாளர் பி.ஸ்ரீ, கம்பனடிப்பொடி சா. கணேசன், தமிழ்க்கடல் ராய. சொ. சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா போன்ற பல அறிஞர்களோடு இளமை முதலாகவே நெருக்கம் கொண்டிருந்தார். பதினோறாவது பீடாதிபதி தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிகர், அறிஞர்களையெல்லாம் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் அழைத்து, திருமடத்தில் 'சிந்தனைப் பூங்கா' என்றொரு சீரிய நிகழ்ச்சியை நடத்திப் பெருமை பூண்டார்.

கோவிலூர் ஆதீனத் திருமடத்து அருளாட்சியை, 12-வது பீடாதிபதியாக எழுந்தருளி, மேற்கொண்டுள்ள தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், சிறப்புகள் பலபெற்ற ஞானச் செல்வராகத் திகழ்ந்து வருகிறார். திருமடத்து நிறுவனர் கோவிலூர் ஆண்டவர் தவத்திரு முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் மகன் வழி ஆறாவது தலைமுறைப் பேரன் ஆவார். இப் பெருமான். ஆண்டவரின் மரபு வழியாக, கோவிலூர் ஆதீனத்தின் பீடாதிபதியாகப் பொறுப்பேற்கும் புண்ணிய வாய்ப்புப் பெற்ற முதல்வர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகளேயாவார்.

தமிழகத்தின் தலைநகர் சென்னையில் கோவிலூர்க் கிளை மடம் என்ற ஒன்றை உருவாக்கிய சுவாமிகள், வடக்கே ரிஷிகேசத்தில், சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆசிரமத்துக்குப் பக்கத்தில் அண்மையில் கிளை மடம் ஒன்றைக் கட்டி முடித்துத் திறந்து வைத்தார். ஆண்டவர் அருளிய கோவிலூர் திருமடத்தின் திருத்தொண்டு அகிலமெங்கும் பரந்து சிறக்க வேண்டுமென உறுதி பூண்ட சுவாமிகள், அமெரிக்காவில் கிளை மடம் உருவாக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகிறார். நியூயார்க்கிலிருந்து 41 மைல் தொலைவிலுள்ள 'PRINSTON' என்னுமிடத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார். இதன் தொடர்பாக 77 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் இப்பெருமான், அளப்பரிய ஆர்வத்துடன் அமெரிக்க நாட்டிற்கு அடிக்கடி சென்று வருவது குறிப்பிடத்தக்கது.


குழந்தைகள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள், கோவிலூர் ஆதீனப் பொறுப்பை ஏற்ற அதே நாளில், ஒரு சிறுவர் பள்ளியைத் தொடங்கினார். பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கோவில் சார்ந்த கலைகள் வளர்ச்சியடைந்து, விளக்கமுற வேண்டுமெனும் நோக்கத்தில் திருமுறைக் கல்லூரி, நாதசுர, தவில் இசைக் கல்லூரி, வேதாகமப் பாடசாலை, தேர் செய்யும் பயிற்சிக் கூடம், வாகனங்கள் செய்முறைக் களம், திருவாபரணங்கள் செய்முறைப் பட்டறை. சிற்பக் கல்லூரி ஆகிய நிறுவன அமைப்புகளைக் கோவிலூரில் சுவாமிகள் தொடங்கினார்.

கோவிலூர் மடாலயம் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ, இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Indology) என்ற ஆய்வு மையத்தை நிறுவியுள்ளார். **''சனாதன தர்ம உலகப் பல்கலைக் கழகம்''** கோவிலூரில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

காரைக்குடியில் பிறந்த நாச்சியப்ப சுவாமிகள், சென்னை 'கலாக்ஷேத்ரா'வில் அருஞ்சேவை புரிந்து, உலகளாவிய புகழ் பெற்ற அன்னை ருக்மணி அருண்டேலின் அன்பிற்குரிய அருமைச் சீடராக விளங்கியவர். அச்சுக் கலையிலும், புகைப்படக் கலையிலும் புகழார்ந்த பெருமை பெற்ற சுவாமிகள், கலாக்ஷேத்ரா நாட்டியக் குழு மேலாளராக உலகம் முழுவதும் பலமுறை பயணம் செய்துள்ளார்.

1995ஆம் ஆண்டு காவி உடுத்தித் துறவு பூண்டு, கோவிலூர் ஆதீனகர்த்தராக எழுந்தருளிய தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள், போற்றத்தக்க செயல்களுக்கென மாதம் ஏறத்தாழப் பத்து லட்சம் செலவு செய்யும் வகையில், ஓர் அறக்கட்டளையை உருவாக்கிப் பத்துக் கோடி ரூபாயை வைப்பு நிதியாக்கியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு மேற்கே, இரண்டு கல் தொலைவிலுள்ள கோவிலூர் ஆதீனம் வேதாந்தத்தைப் பொதுமைப் படுத்திப் புதுமை செய்து, பெருமை கண்டு அதனால் பெரிதும் புகழ் கைக் கொண்டது.



நூல்கள்

இக்கோவிலூர் மடத்தில் நாநாசீவ வாதக் கட்டளை, கைவல்ய நவநீதம், பஞ்சதசீ, ஞானவாசிட்டம் முதலிய 16 நூல்களை அவ்வக் காலங்களில் குருபீடங்களில் அமர்ந்திருந்த குருமூர்த்திகள் போதித்துள்ளார்கள். இந்த வேதாந்த நூல்களைக் கற்பதற்கு அடிப்படையான 'பாக்களாகிய பூக்களைக் கொண்டு கும்பிடுதல்' போன்ற சிறு நூல்களும் வெளிவந்துள்ளன.

மாணவர்கள்

தமிழ் நாடெங்குமிருந்து பல நூறு மாணவர்கள் கோவிலூர் மடத்தில் தங்கி வேதாந்த நூல்களில் பயிற்சி பெற்றிருக்கின்றனர். இவ்வாறு பயின்றவர்கள் அனைவருமே துறவியாகியுள்ளனர். இதனால், கோவிலூருக்குச் சென்ற எருமை மாடுகூட வீடு திரும்பாது என்ற பழமொழி சிறப்பாகச் செட்டி நாட்டில் வழங்கிவந்தது.

கோவிலூரில் துறவறம்பூண்ட அம்மாணவர்கள் கிளை மடங்களில் தலைமைப் பொறுப்பையும் பிற பணிகளையும் ஏற்றனர். கோவிலூரில் தலைமை ஏற்பவர் நகரத்தாராகவே இருந்துவருவது மரபு.

கிளை மடங்கள்

கிளை மடங்களில் கோவில்களும் துறவிகள் தங்குவதற்கு ஆசிரமங்களும் அன்னதான மண்டபங்களும் பல லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பணி புரிந்தவர்கள் நகரத்தார்களின் உதவியுடன் ஆங்காங்கே உள்ள பாடல்பெற்ற சிவாலயங்களில் கட்டளைகள் ஏற்படுத்தியும், திருப்பணிகள் செய்தும், கும்பாபிஷேகங்கள் நடத்தியும் வந்திருக்கிறார்கள். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலைச் சீர்திருத்தியும், கோபுரத்திற்குத் தங்கப் பாளங்கள் சாத்தியும், ஆடி வீதியில் கல்தளங்கள் அமைத்தும் 25 ஆண்டுகள் பணி புரிந்தவர், மதுரை குட்டைய ஐயா மடத்தின் தலைவரும் கோவிலூர் முத்துராமலிங்க ஆண்டவரின் மாணவருமான குட்டைய சுவாமிகளே. இந்த மடம் தெற்குவெளி வீதி 164-ல் இருக்கிறது.

கோவிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த மடங்களாவன:

1. சிக்கல் பொருள் வைத்தசேரி, உகந்தலிங்க ஞானதேசிக சுவாமிகள் மடம்.
2. திருவண்ணாமலை, ஈசானிய திசையில் கந்தப்ப ஞானதேசிக சுவாமிகள் மடம்.
3. கோவிலூர், முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகள் மடம்.
4. வளவனூர், சண்முக சுவாமிகள் மடம்.

5. மதுரை, அரசப்ப சுவாமிகள் - பிரம்மானந்த சுவாமிகள் மடம்.
7. சிதம்பரம் - பொன்னம்பல சுவாமிகள் மடம்.
8. மானாமதுரை - நாராயண சுவாமிகள் மடம்.
9. சாக்கோட்டை - வீரப்ப சுவாமிகள் மடம்.
10. திருக்களர் - வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் மடம்.
11. காளையார் கோவில் - செல்லப்ப சுவாமிகள் மடம்.
12. திருப்புவனம் - காசிகானந்த ஞானாசாரிய சுவாமிகள் மடம்.
13. இறும்பூதூர் - தத்துவராய சுவாமிகள் மடம்.
14. சிதம்பரம் - மௌன சுவாமிகள் மடம்.
15. திருவாரூர், மடப்புரம் - தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடம்.
16. பசுபதி கோவில் - ஆறுமுக சுவாமிகள் மடம்.
17. திருவண்ணாமலை - பவழக்குன்று அழகானந்த சுவாமிகள் மடம்.
18. குன்றக்குடி - மேல மடம்.
19. தஞ்சாவூர், கருந்திட்டைக்குடி - பால்சாமி மடம்.
20. கோவில்பட்டி - முத்தானந்த சுவாமிகள் மடம்.

கோவிலூர் மடாலயம்


கோவிலூர் மடாலயம்
காரைக்குடி அருகில்
கோவிலூர் - 630 307
போன் : 04565 - 436846

கோவிலூர் மடாலயம்
34-36, குப்பையா செட்டி தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 33
போன் : 044 - 3716507


சுவாமி தயானந்த ஆசிரமம் அருகில்,
புரானி ஜாடி, ரிஷிகேஷ் - 24920
உத்திரபிரதேசம், இந்தியா
போன் : 0135 - 436968

கலாக்ஷேத்ரா பப்ளிகேஷன்ஸ்
84, கலாக்ஷேத்ரா ரோடு,
திருவான்மியூர், சென்னை - 41
போன் : 044 - 41 1390

Koviloor Aadeenam
Vedanta Centre Inc.
2 Sparrow Drive
Princeton Junction
New Jersey, USA
Phone (609) 443-8797
e-mail: koviloorusa@yahoo.com



திரும்பிப் பார்க்கிறோம்



30 ஆண்டுகளுக்கு முன் கோவிலூரில் 76 ஊர் நகரத்தார் மாநாட்டில் எடுத்த முடிவுகளும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும்

ஏன் இந்த மாநாடு கூட்டப்பட்டது?

நமது சமூகத்தின் சீர்திருத்தங்கள் முன்னேற்றங்கள் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கவும் சமூக சீர்திருத்தம் காணவும் சமூகம் முன்னேற்றம் அடையவும் கூட்டப்பட்டது.

முதல் கூட்டம் கூட்டப்பட்ட இடம்

22.4.73 - காரைக்குடியில் நகரச்சிவன் கோயில் அறுபத்து மூவர் குரு பூசை மண்டபம்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும், மாநாடு 16, 17-6-73ஆம் நாள்கள் நடைபெற்ற விபரங்களையும் தந்துள்ளோம்.

வரவேற்புக்குழு தலைவர் :

தேவகோட்டை AL. AR. சோமனாதன் செட்டியார்

உபதலைவர் :

புதுப்பட்டி Dr. எஸ். சண்முகம் செட்டியார் M.B.B.S., F.R.C.S., மதுரை

செயலாளர்கள் :

திரு. TR. ST. கண்ணப்பன், பாகனேரி

திரு. PL. L. பழனியப்பன், பள்ளத்தூர்

திரு. KM. சுப்பிரமணியன், கண்டனூர்

திரு. இராம. வெள்ளையன், நகரமன்றத் தலைவர், தேவகோட்டை

பொருளாளர்கள் :

திரு. வ. ராம. ராமசாமி செட்டியார் B.A., காரைக்குடி

திரு. சித. சா. கணேசன் M.C. தேவகோட்டை

மேலும் 34 அங்கத்தினர்களைச் சேர்த்து வரவேற்புக்குழு அமைக்கப்பெற்றது.

நகரத்தார்கள் வாழும் 76 ஊர்களையும் மூன்று பகுதிகளாகப் பிரித்து முதல் பகுதிக்கு செயலாளர் கண்டனூர் திரு. கே. எம். சுப்பிரமணியன் பொறுப்பு ஏற்றும், இரண்டாம் பகுதிக்கு செயலாளர் பாகனேரி திரு. டி. ஆர். எஸ்டி. கண்ணப்பன் பொறுப்பு ஏற்றும், மூன்றாம் பகுதிக்கு செயலாளர் திரு. இராம. வெள்ளையன் பொறுப்பு ஏற்றும் ஊர் ஊராகச் சென்று நகரத்தார்களையும், மாதர்களையும், இளைஞர்களையும் நேரில் பார்த்து ஊர்க் கோயில், விடுதிகளில் கூட்டங்கள் கூட்டி விரிவுரையாற்றி மகாநாட்டின் நோக்கங்களை எடுத்துக் கூறி அனைவரையும் வருகை தரும்படி அழைத்து வந்து குறிப்பிட்ட படி கோவிலூரில் பிரமாதீச வருடம் ஆனி மாதம் 2, 3, (ஜூன் 16, 17.6.73இல்) சரித்திரம் காணாத வகையில் நம் நகரத்தார் மகாநாடு கூட்டப்பெற்றது. கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ இராமனாத ஞானதேசிக சுவாமிகள் சிறந்த முறையில் ஆசியுரை வழங்கினார்கள். மகாநாட்டுத் தலைவராக குழிபிறை திரு. பெரி. சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களும் திறப்பாளராக, திரு. சேவு. அ. அண்ணாமலை செட்டியார் அவர்களும் தேசியக் கொடி ஏற்றிவைக்க, பாகனேரி திரு. வே. வேலாயுதம் செட்டியார் அவர்களும், இளைஞர் மகாநாட்டுக்கு தலைவராக மதுரை வங்கித் தலைவர் ஓ. சிறுவயல் எல். கிருஷ்ணன் அவர்களும், திறப்பாளராக காரைக்குடி நகர்மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம் அவர்களும் மாதர் மகாநாட்டுத் தலைவராக தேவகோட்டை திருமதி உமையாள்முத்து அவர்களும், திறப்பாளராக அரியக்குடி திருமதி சுலோசனா சேவுகன் செட்டி அவர்களும், சிறப்புரையாளராக தேவகோட்டை நகரமன்ற உபதலைவர் திருமதி இலக்குமி வெள்ளையன் அவர்களும், பள்ளத்தூர் திருமதி சித.உமையாள் அவர்களும், பாகனேரி திருமதி கோமதி கண்ணப்பன் அவர்களும், தேவகோட்டை செல்வி லெ. ப. உமையாள் அவர்களும், வலையபட்டி திருமதி சிகப்பி ஆச்சி அவர்களும், மானகிரி திருமதி அண. அழகம்மை அவர்களும், வலையபட்டி திருமதி அழ. மீனாட்சி அவர்களும், மானகிரி செல்வி ம. கல்யாணி அவர்களும், நாட்டரசன்கோட்டை திருமதி ஆறு. கண்ணாத்தாள் ஆச்சி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். 16.6.73 இரவு 9.00 மணிக்கு தேவகோட்டை தமிழ்ப் பேராசிரியர் திரு. சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் செட்டிமார் நாட்டின் சிறந்த கவிஞர்கள், திரு. ரெ. சிங்காரவடிவேலன், புலவர் சோம. சிவப்பிரகாசம், திரு. அரு. சோமசுந்தரம், புலவர் அண்ணாமலை, புலவர் மீனவன், தமிழாசிரியர் அரு. சோமசுந்தரம், திரு. மா. கண்ணப்பன் அவர்களும் ''நகரத்தார் குடும்பத்தில் நான்'' என்ற கவியரங்கத்தை சிறப்பான முறையில் நடத்தியும் செட்டிநாட்டின் சிறந்த சொற்பொழிவாளர்கள் பலர் பங்குபெற்று மகாநாடு சிறப்புற நடைபெற பெரிதும் உதவினார்கள். செட்டிமார் நாட்டிலிருந்து ஆண்கள் சரியாக 1880 பேரும், பெண்கள்932 பேரும் வந்து தீர்மான விவாதங்களில் கலந்து கொண்டு ஒவ்வொரு தீர்மானத்திற்கும் விளக்கம் கொடுத்து தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினார்கள்.

மாநாட்டுக்குத் தீர்மானம் அனுப்பியவர்கள்

1. குழிபிறை நகரத்தார்கள்.
2. மதுரை நகரத்தார் சங்கம்.
3. கோ. அழகாபுரி நகரத்தார்.
4. ஈரோடு நகரத்தார் சங்கம்.
5. பலவான்குடி நகரத்தார்.
6. கோயம்புத்தூர் நகரத்தார் சங்கம்.
7. குருவிக்கொண்டான்பட்டி நகரத்தார்கள்.
8. கோனாபட்டு நகரத்தார்கள்.
9. அரியக்குடி நகரத்தார்கள்
10. செவ்வூர் நகரத்தார்கள்.
11. தேவகோட்டை நகரத்தார்கள்.
12. சிறுகூடல்பட்டி நகரத்தார்கள்.
13. புதுவயல் நகரத்தார்கள்.
14. வேந்தன்பட்டி நகரத்தார்கள்.
15. கண்டனூர் நகரத்தார்கள்.
16. மேலச்சிவபுரி நகரத்தார்கள்.
17. வலையப்பட்டி நகரத்தார்கள்.
18. கண்டனூர் மாதர்கள்.
19. கடியாபட்டி நகரத்தார்கள்.
20. கோமதி கண்ணப்பன், பாகனேரி.
21. சு. கரு. பழனியப்பன் அவர்கள்.
22. கோட்டையூர் அக. அ. சித. அள. சிதம்பரம் செட்டியார்.
23. கண்டனூர் ப. ராம. லெட்சுமணன்.
24. சொ. புதூர் பழ. நா. நாராயணன்.
25. இராம. வள்ளியப்பன், மதுரை.
26. பட்டமங்கலம் வீர. அ. அடைக்கப்ப செட்டியார்.
27. சிறுகூடல்பட்டி ப. அ. கருப்பன் செட்டியார்.
28. காரைக்குடி மெ. தண்ணீர்மலை.
29. நெற்குப்பை நண்பர்கள் து. க. மு. மு. & மு. செ..
30. சென்னை சேது சுந்தரம், அன்புமணி.
31. ஹேஷாலா, சொ. வள்ளியப்பா.
32. எஸ். அண்ணாமலை, கோயம்புத்தூர்.
33. அண்ணாமலைநகர் வ.சுப. மாணிக்கம்.
34. நாகர்கோவில் கருப்பன் செட்டியார்.
35. கோட்டையூர் அழகப்பா அண்ணாமலை.
36. கண்டனூர் கே. எம். சுப்பிரமணியம்.
37. மானகிரி என். எஸ். பி. பஞ்சனதம்.
38. தேவகோட்டை இராம. வெள்ளையன்.
39. நச்சாந்துபட்டி முரு. இராமநாதன்.

40. காரைக்குடி மோகன், பழனியப்பன்.
41. மதுரை மணிமேகலை மாதவன்.
42. அரிமளம் செ. சோம. ராமசாமி.
43. பாகனேரி கண்ணப்பன்.
44. ஆத்தங்குடி நாரா. சித. நா. நாச்சியப்பன்.
45. தேவகோட்டை கே. ஆர். முத்தையா.

மேலே கண்ட தீர்மானங்கள் 45யும் 15-6-73 காலை 10 மணிக்கு கோவிலூரில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் வைத்து சகல தீர்மானங்களையும் ஆராய்ந்து முடிவாக 30 தீர்மானங்களை மட்டும் 17.6.73-ந் தேதி மகாநாட்டுக்குச் சிபாரிசு செய்தார்கள். அதை அச்சிட்டு நகரத்தார்களுக்கு வினியோகம் செய்து, அதைச் சில திருத்தங்களுடன் ஏகமனதாக ஆதரித்து அதையும் இத்துடன் பிரசுரித்துள்ளோம். இதுவே நகரத்தார் மகாநாட்டுத் தீர்மானங்கள்.

(1973ம் ஆண்டு, ஜுன் மாதம் 17)

பிரமாதீச ஆண்டு ஆனித்திங்கள் 3-ம் நாள், கோவிலூரில் நடந்த

நாட்டுக்கோட்டை நகரத்தார் மகாநாட்டுத் தீர்மானங்கள்

1. திருமணம்

1. **திருமண அழைப்பு**

அழைப்புகளை அதிகம் விரித்துக் கொடுக்காமல் சுருக்கிக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறது.

2. **திருமண நாள்**

மாப்பிள்ளை அழைப்பு உள்பட திருமண விருந்தை ஒரு வேளை பலகாரம், ஒரு வேளை சாப்பாட்டுடன் முடித்துக் கொள்ளுகிறது. பெண் அழைப்பு திருமணத்தன்றே நடத்துகிறது. பெண் அழைப்பிற்கு பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், மாமக்காரர்கள், சடங்குக்காரர்கள், மட்டும் போய் ஒரு வேளை சாப்பாடு அல்லது சிற்றுண்டியுடன் முடித்துக் கொள்ளுகிறது.

3. பெண் அழைத்துப்போன பெண்ணின் தகப்பனாருக்கு ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை பாக்குடன் ரூ. 11/- மட்டும் வைத்துக் கொடுக்கிறது, தேங்காய், பழம், ரொக்கம், வாளி, சட்டி முதலிய எந்தவிதச் சாமான்களும் உறவினர் உள்பட யாருக்கும் கொடுப்பதில்லை, வாங்குகிறதில்லை.

4. மாமாக்காரர், சடங்குக்காரர்களைத் தவிர மற்ற எல்லோரும் கால் ரூபாய் பணம் எழுதுகிறது.

5. **உணவு**

பலகாரம் மூன்று வகையும், சாப்பாட்டிற்கு ஐந்து வகைக் கறிகளும் செய்கிறது. ஐஸ்கிரீம், பாதாம் கீர், சோடாக் கலர் கொடுக்கிறதில்லை.

6. **சாமான் பரப்புதல்**

திருமண வீட்டில், பெண்ணுக்கு அளிக்கப்படும் சீர்முறைச் சாமான்கள், மாப்பிள்ளைக்குக் கொடுக்கிற சாமான்கள் ஆகியவற்றை எந்த இடத்திலும் திருமணத்திற்கு முன்போ பின்போ பரப்புகிறதில்லை. மாமியார் சாமான்கள் கொடுக்கிறதில்லை. சடங்குப் பெட்டி

வைப்பதில்லை.

7. **சீர் முறை**

எந்த விதமான முறைச்சீட்டுகளும் எழுதிக்கொள்கிறதில்லை. எந்த விதமான முறைக்கும் தொகைகள், சாமான்கள் முதலியன கொடுத்து வாங்கிக் கொள்கிறதில்லை.

8. **திருமணம்**

திருமணத்தைப் பொது இடங்களிலோ, கோயிலிலோ, மணமகள் வீட்டிலோ நடத்தலாம்.

9. செட்டிநாட்டிற்கு வெளியே நிகழும் நகரத்தார் திருமணங்களை ஆதரித்து முன்னதாகவே கோயிலில் பாக்கு வைத்து அவரவர் நகரக் கோயில்களிலே இருந்து மணமக்களுக்கு மாலைகள் வந்து திருமணத்தை நடத்திக் கொள்ளுகிறது, அதற்கு வைராவி போய்வரும் செலவை கல்யாணக்காரர் கொடுக்கிறது.

இதற்கு ஏற்றவாறு ஒன்பது நகரக் கோயில்களிலும் அட்டவணையில் எழுதிக்கொள்ளச் செய்கிறது. இந்தத் தீர்மானத்தின் நகல் 9 கோயில்களுக்கும் அனுப்புகிறது.

10. **மணச் சடங்குகள்**

திருப்பூட்டுகிறதைத் தவிர ஏனைய சடங்குகளைக் கூடிய வரை குறைத்துக் கொள்ளுகிறது. அதற்காக மேற்படி சடங்குகளுக்காகப் பணம் முதலிய எதுவும் கொடுத்து வாங்கிக் கொள்வதில்லை, குதிரை ஏறுகிறதில்லை.

11. ஒரே மண வீட்டில் பல திருமணங்களை ஒரே நேரத்தில் நடத்திக் கொள்ளலாம்.

உ. பிற விசேடங்கள்

12. மருந்து குடித்தல், தீர்த்தம் சாப்பிடுதல், விளையாட்டுப் பெட்டி வேவு, காப்புக் கட்டுப்புதுமை, கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப்புதுமை, ருது மாங்கல்ய விழா, மணமக்களுக்கு பழம் தேங்காய் கொடுத்தல் ஆகிய விசேடங்களைச் செய்கிறதில்லை.

13. எந்த விசேடத்திலும் மாப்பிள்ளைப் பலகாரம், சம்பந்தியார் பலகாரம், முதலியன வழங்குவதில்லை, அதற்காக ரூபாயும் கொடுப்பதில்லை.

14. பிள்ளை பிறந்து கூட்டி விடுவதற்கு சம்பந்தப்புரங்களுக்குச் சாமானோ, பணமோ மற்றும் உணவு வகைகளோ கொடுப்பதில்லை. பிள்ளைப் பேறு கேட்க வருபவர்களுக்கு ஒவ்வொரு மிட்டாய் கொடுப்பதைத் தவிர ரொட்டி, சோடாக், கலர், பூ, பழம் வகையராக் கொடுப்பதில்லை. அதற்காக அந்த வீதியிலுள்ளவர்களுக்கு பழங்கள், ரூபாய்கள் கொடுப்பதில்லை.

15. பேசி முடித்துக் கொள்ளுதல், கழுத்துருவிற்குப் பொன் கொடுத்தல் ஆகியவற்றிற்கு ஐயாக்கள், நெருங்கிய உறவினர்கள் வீட்டைத் தவிர வேறு யாரையும் அழைப்பதில்லை.

அவர்களுக்கும், சம்பந்தப்புரங்களுக்கும், பணம், சாமான், பழம் எதுவும் கொடுப்பதில்லை. அந்த விசேடங்களுக்குப் போகும்போது ஒரு தாம்பாளத்தில் தேங்காய் 5, வாழைப்பழம் சீப்பு 2, மஞ்சள், குங்குமம், சந்தனம், புஷ்பம், வெற்றிலை பாக்கு கொண்டுபோய்க் கொடுத்து, அதில் தேங்காய் 2, வாழைப்பழம் சீப்பு 1, வெத்திலை, பாக்குடன் திரும்ப வாங்கி வருகிறது.

16. திருமணம் ஆன பின் வேறுவைப்பதற்காகச் சாமான்களோ, பணமோ, பழங்களோ, எதுவும்

இரு வீட்டார்களும் கொடுப்பதில்லை.

3. கேதம்

17. பிரேதம் எடுக்கிற அன்று, பிரேதம் எடுத்த பிறகோ அல்லது முன்பாக வேறு வீடுகளிலோ, ஒரு பலகாரம் அல்லது ஒரு வர்க்க அன்னம் கொடுக்கிறது.

18. பங்காளிகளுக்கும், மற்றவர்களுக்கும், கேதத்திற்கு ஒரு வேளை சாப்பாட்டுடன் முடித்துக் கொள்கிறது. கேதத்திற்கு வருபவர்களுக்கு சட்டி, டப்பி, பொரி, பணம் கொடுக்கிறதில்லை.

19. பந்தல் அன்றே போட்டு பிரேதம் எடுத்தவுடன் அதில் வைத்து தாலி வாங்குகிறது. சுற்றி வந்து சேலை போடும் வழக்கத்தை தவிர்க்க வேண்டும். கணவனை இழந்த பெண்கள் எந்தக் கலர் சேலையும் அணிந்து கொள்ளலாம்.

4. பிற

20. சங்க வளர்ச்சிக்கும், சமூகப்பணிக்கும், உள் நாட்டில் நம் சமூகத்தார் நடத்திவரும் லேவாதேவி வட்டிக்கடை, வியாபாரங்கள், தொழில் நிறுவனம் முதலியவைகளில் ஒரு வருட லாபத்தொகைக்கு ஒரு சதவீதம் மகமை எழுதி வருடா வருடம் சங்கத்திற்கு அனுப்பி வைக்கும் படியும் அதுவும் பிரமாதீச வருடம் சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை உள்ள வருடம் முதல், நடை முறைக்கு கொண்டுவருவதென்றும், எல்லாக் கடைக்காரர்களையும் அவரவர்களே அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானம் செய்யப்பெற்றது.

21. **தீர்மான அமுல்**
மேற்படி தீர்மானங்கள் எல்லாம் இன்று அதாவது 17.6.73க்கு பிரமாதீச ஆண்டு ஆனித்திங்கள் 2ம் நாள் முதல் அமுலுக்கு கொண்டு வருகிறது. ஆனால் இதற்கு முன் விசேடங்கள் தேதி நிச்சயிக்கப்பெற்று சாமான்கள் வாங்கியிருந்தால் அந்தந்த ஊர் நகரத்தார்களிடம் இன்று முதல் 10 நாட்களுக்குள் தெரியப்படுத்தி ஆவணி மாதம் 31க்குள் வைத்திருக்கும் விசேடங்களைச் செய்துகொள்ள விதிவிலக்கு உண்டு. அதற்கு மேல் கட்டுப்பாட்டுப்படியே நடந்து கொள்கிறது.

5. சங்கம்

22. சீர்திருத்த தீர்மானங்களை அமுல் நடத்தவும், அவை அமுல் நடப்பதை கண்காணிக்கவும் மற்றும் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களைச் செயல்படுத்தவும், பொதுவாக நகரத்தார் முன்னேற்றத்திற்கான எல்லா நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் - **''நாட்டுக்கோட்டை நகரத்தார் மத்திய சங்கம்''** என்ற பெயரில் நிறுவப்பெறுகிறது.

23. அச்சங்கத்தின் அலுவலர்களாக கீழ் காணப்படுபவர்கள் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்கள். ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர், ஒரு பொதுச் செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர் தேர்ந்தெடுப்பதற்கு, குழிபிறை பெரி. சின்னக்கருப்பன் செட்டியாரை தலைவராகவும், பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார் அவர்களை துணைத் தலைவராகவும், கல்லல் கண்ணப்ப வள்ளியப்பாவை பொதுச் செயலாளராகவும் தேர்ந்து எடுத்து பாக்கி அலுவலர்களைக் காரியக்கமிட்டி கூடும்போது தேர்ந்தெடுப்பது என்றும்

முடிவுசெய்யப்பெற்றது. தவிர நகரத்தார் ஊர்களில் 200 புள்ளிக்குள் உள்ள ஊர்களுக்கு ஒரு பிரதிநிதியும், அதற்கு மேல் ஒவ்வொரு 200 புள்ளிக்கும் ஒரு பிரதிநிதியும் வீதாசாரப்படி இன்று முதல் ஒரு மாதத்திற்குள் நகரத்தார் கூட்டத்தில் தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்கும்படி எல்லா ஊர் நகரத்தார்களையும் கேட்டுக்கொள்வதென்றும் மாதர்களில் 15 பிரதிநிதியும் இளைஞர்களில் 15 பிரதிநிதியும், நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதியும், அவசியமான பொழுது தேவையான உறுப்பினர் 10க்குள்ளும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறது என்று தீர்மானம் செய்யப்பெற்றது. பதவிக்காலம் அலுவலர்களுக்கு ஒரு வருடம், பிரதிநிதிகளுக்கு 3 வருடம், இப்போது அலுவலர்களாக இருப்பவர்கள் உறுப்பினர்களாக 3 வருடம்வரை இருக்கலாம்.

24. இச்சங்க விதிகள் முதலியவற்றை வகுக்க 11 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கிறது.

25. நம் சமூகத்தைப் பின் தங்கிய சமூகமென அறிவிக்குமாறு தமிழக அரசை இம்மகாநாடு கேட்டுக்கொள்வதென்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதென்றும் தீர்மானித்திருக்கிறது.

26. நமது பூர்வீக நகரான பூம்புகார் (காவேரிப்பட்டணம்) சீர் கேட்டைத்திருத்திப் புதிப்பித்து கலைக்கோயில்களாக அமைத்து நமது வரலாறு நீடித்து பெருமை தர ஆக்கித் தந்த தமிழ்நாடு அரசிற்கு நம் சமூகத்தார் சார்பாக இம்மாநாடு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

27. நம் தொழில் பிரமுகர்களை அவர்கள் தொழிற்சாலைகளுக்கு தேவையான பொருட்களைத் தயாரிப்பதற்கு செட்டிநாட்டுப் பகுதியில் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவி செய்து ஆதரிக்க வேண்டும் என்றும், இப்பகுதியில் பல தொழிற்சாலைகள் நிறுவவேண்டும் என்றும், நகரத்தார் தொழில் நிலையங்களில் நகரத்தார்களுக்கு வேலை கொடுத்து உதவவேண்டும் என்றும் இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

28. நகரத்தார் கல்வி, திருமணம் ஆகியவைகளுக்கு கடன் வழங்கும் கார்ப்பரேஷன் ஒன்று நிறுவி அதன் வாயிலாக சிறந்த மாணவ மாணவியருக்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் கல்வியும் தொழில் பயிற்சியும் பெறவும், திருமணம், கடன் வழங்குதல் போன்ற உதவிகளைச் செய்யவும் பொதுப்பணம் உள்ளவர்களிடம் பெற்று நம்குல மக்களின் நன்மைக்காக பயன்படுத்த உதவுமாறு இம்மகாநாடு ஒருமனதாக வேண்டுகிறது.

6. மாதர் மகாநாட்டின் கோரிக்கை

29. நகரத்தார் சமூக மாதர் சேவைக்கு மகளிர் இல்லம் அமைப்பது. அதில் குழந்தைகளுக்கான இல்லம், முதியோர் இல்லம், மகளிர் இல்லம் ஆகியவை தொடங்கி வாழ வசதியற்ற பெண் குழந்தைகளுக்கு உபகாரக் கல்வி அளிப்பது, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், முதிய பெண் மக்கள் ஆகியோர்களுக்கு வாழ வசதியளிப்பதுடன் அவர்களுக்கு கைத்தொழில் கற்பிக்கும் பொறுப்பையும் ஏற்று மாதர் சங்கங்கள் அமைத்து பல கிளைகள் நடத்தி வருவதென்று முடிவுசெய்யப்பட்டது.

30. கணவனை இழந்த 30 வயதிற்குள்பட்ட மாதர்கள் விரும்பினால் நம் சமூகத்தில் மறுமணம் செய்து கொள்ளலாம்.

இந்தத் தீர்மானம் நகரத்தார் மகாநாட்டில் திருத்தம் செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தை

எல்லா ஊர் நகரத்தார்களும் அந்தந்த ஊரில் ஒரு மாதத்திற்குள் கூட்டம் கூடி வேணும், வேண்டாம் என்ற பெரும்பகுதி முடிவு தெரிந்து தீர்மானம் செய்ய தள்ளி வைக்கப்பெற்றது.

31. இப்பொழுது ஏற்படுத்தப்போகும் மத்திய சங்கத்தில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று வந்த தீர்மானத்தை ஆதரிக்க தீர்மானம் செய்யப்பெற்றது.

7. இளைஞர் மகாநாட்டுத் தீர்மானம்

32. வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வரும் நமது இனத்தாருக்கு வெளிநாடுகளிலுள்ள உரிமைச் சொத்துக்களுக்கு தகுந்த நஷ்டஈடு பெற்றுத்தர ஆவன செய்யவேண்டியது.

33. நிறுவ இருக்கும் புதிய சங்கத்தில் ஒரு வேலை வாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுத்தரச் செய்யவேண்டும்.

34. சங்கத்தில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

35. திருமண வீட்டில் கூடியவரை நமது இளைஞர்கள் முன்னின்று உதவிகள் செய்கிறது.

36. நகரத்தார் பெருமக்கள் முதலீடு செய்து காரைக்குடியை மையமாகக் கொண்டு நகரத்தில் சிறப்பு அங்காடி தொடங்கி நடத்துவது என்றும், நகரத்தார்கள் அனைவரும் அதை ஆதரிக்க வேண்டும் என்றும், அதில் கிடைக்கின்ற வருமானம் அனைத்தும் நமது சமுதாய வளர்ச்சிக்கு செலவிடுவது என்றும் தீர்மானிக்கிறது.

37. நகரத்தார் ஆண் பெண் உயர்படிப்புப் படிக்கவும், வெளிநாடு சென்று படிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியது. வாங்கிய தொகையினை உரிய முறையில் கொடுக்க முன்வரவேண்டும்.

38. அனைத்து ஊரிலும் ஓய்வு நேரத்தில் இளைஞர்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப முன்வரவேண்டும்.

மேற்படி தீர்மானங்களை இம்மகாநாடு ஏற்றுக் கொள்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் 76 ஊர் மக்கள் கூடி 1880 நகரத்தார்கள், பெண்கள் 932 பேர் கூடிய கூட்டத்தில் நகரத்தார்கள் அளித்த தீர்மானங்கள் 45இல் மாநாடு 38 தீர்மானங்கள் வரை ஏற்றுக் கொண்டார்கள்.

பல பின்பற்றப்பட்டு சில பின்பற்றப்படாமல் உள்ளன.


ஏன்?

ஆண்டுதோறும் மாநாடு நடத்தி நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் நிலை என்ன என்று கணக்கீடு செய்திருந்தால் அனைத்தும் பின்பற்றப்பட்டு, மேலும் தேவையான தீர்மானங்கள் புதிதாகவும் இயற்றியிருக்கலாம்.

இப்பொழுது நகரத்தார் குரு பீடம் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள் இனி இந்தக் குறைபாடு இல்லாமல் ஆண்டுதோறும் மாநாடு கூட்டி ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் நிலைப்பாடு என்ன என்று கண்டறியவும், கலைகள் தொய்வில்லாமல் நடந்திடவும் உறுதி பூண்டுள்ளார்கள்.

இனி சித்ரபானு ஆண்டு நகரத்தார்களுக்கு மனம் மகிழ்ச்சியால் துள்ளும் ஆண்டாக அமையும்.





நம்மைப் பற்றி நால்வர் கூறுகிறார்கள்

"நாட்டுக்கோட்டை நகரத்தார் இந்து மதத்திற்குக் கோட்டைக் காப்பு வீரர்கள் போல் நின்று இந்து மதத்தைக் காப்பாற்றி வருகின்றார்கள்."

– காஞ்சி மகாப் பெரியவர்

" நகரத்தார்களின் பங்கும் சேவையும் இல்லாத கோவில் தமிழகத்தில் இல்லை எனக் கூறிவிடலாம்."

– சிருங்கேரி சுவாமிகள்


"கற்புள்ள ஒரு கன்னியை மணம் முடிக்கும் வாய்ப்பு செல்வர்களைப் போல ஏழைகளுக்கும் எளிதாக இருக்கவேண்டும். மணமக்களின் ஒன்றுபட்ட அன்பும், ஒழுக்கமும் முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டும். பலர் முன் தன் ஆடம்பரங்களைக் காட்டுவது செல்வமுடைமைக்குச் சிறப்பாகாது. இச்செலவுகளை நிறுத்துவதன் மூலமாகத்தான் நீங்கள் செட்டிநாட்டைத் தேவ உலகமாக மாற்றமுடியும்."

– யங் இந்தியாவில் காந்திஜி

"உங்களையே நீங்கள் நம்புங்கள். உங்கள் பரம்பரையினர் காட்டிய விடா முயற்சியும், அறிவுக்கூர்மையும், செயல்திறனும் எங்கும் போய்விடவில்லை. விரைவிலேயே நம் நாட்டில் புதிய துறைகளில் இறங்குங்கள். புதியதோர் சமுகத்தைப் படைப்பீர்கள். உங்கள் தர்மங்கள் உங்களுக்கு நல்வழியே காட்டும்."

– ராஜாஜி

செட்டிநாட்டரசர் வேண்டுகோள்



தினம் ஒவ்வொருவரும்
சமூகத்தைப் பற்றி
ஐந்து நிமிடங்கள் சிந்தியுங்கள்

இங்கு நாம் கூடியிருப்பது முக்கியமாக இளைஞர்களுக்காகத் தான். நமது இளைஞர்கள் மேன்மேலும், கல்வி, தொழில் வகைகளில் முன்னேறும் வாய்ப்பைத் தேடித் தருவதற்காகவே இங்கு கூடியுள்ளோம். இளைஞர்களும் இதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும். இளைஞர்கள் பயப்படாமல் வெளி மாகாணங்களிலும் வெளி நாடுகளிலும் சென்று உத்தியோகம் பார்க்க, படிக்க, தொழில் புரிய முன் வரவேண்டும். இளைஞர்களை ஊக்குவிப்பதுதான் பெரியவர்களின் வேலை.

நாம் சமூகத்துக்காகத் தினம் ஐந்து நிமிஷமாவது ஒதுக்கி அதில் சமூகத்தைப் பற்றிய சிந்தனையை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் இதைச் செய்தால் சமூகம் வெகு விரைவில் முன்னேறிவிடும். இனி வெளி நாடுகளையே எண்ணியிராமல், உள் நாட்டில் புதுப் புதுத் துறைகளில் இறங்கி முன்னேற்றம் காணவேண்டும். புதிய முன்னேற்றம் இருக்கும் போதும் பழைய பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் கெடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

(1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 10, 11-ம் தேதி நகரத்தார் மாநில மாநாட்டில்)

அப்பச்சி, ஆத்தா என்று கூப்பிடுங்கள்! அரசர் வேண்டுகோள்!

பெற்றோர்களைக் குழந்தைகள் 'மம்மி டாடி' என்றழைப்பதை மேடைக்கு மேடை கண்டித்தவர் அரசர் முத்தையா செட்டியார் அவர்கள். ''அபிராமி அன்னையை ஆத்தாள் என்ற சொல்லால் பாசம் மல்கிட அழைத்தார் அபிராமி பட்டர். ஆத்தாள் என்ற சொல்லைக் கூறக்கூசி மம்மி என்று கூறலாமா? சில வீடுகளுக்குச் செல்லும் பொழுது அங்கே உள்ள மூத்த ஆச்சி வருகின்றவர்களை 'வாங்க அப்பச்சி' என்றே உயர்ந்த சொல்லால் அழைப்பார்கள். அப்பச்சியைக் கைவிடலாமா?''

ராஜா சர். முத்தையா வேள்



செம்மாந்த குலம் செட்டியார் குலம்

சிந்துவெளிப் புகழ்காத்து சீர்காத்து திறம்காத்து தென்னாடுவந்த குலமே
திருவுடைய சோழனவன் செம்மாண் புகார் நகரில் திருக்கோவில் கொண்ட குலமே
வந்தவழி மறவாது வாய்மை நெறி தவறாது வாழ்வாங்கு வாழ்ந்த குலமே
வாணிபமும் மதநெறியும் வளர்ந்தோங்கி நாள்தோறும் வளமாக நின்ற குலமே
எந்தமிழர் நாடெங்கும் இறைபணியே பெரிதென்று எந்நாளும் செய்த குலமே
என்னுடைய குலமென்பேன் எல்லாமும் நீயறிவாய் ஏற்றுக் கொள் தமிழர் நிலமே!
காவிரியின் பெருமாட்டி கவின் மதுரை நகர்தன்னைக் கனல் சூழ வைத்த கதையும்
கண்ணகி என்றால் இந்த மண்ணெல்லாம் அடிபணிய கற்போடு வாழ்ந் நிலையும்
நாவசையும் போதெல்லாம் நாடசையும்படி நின்ற நல் வளையாபதியின் கதையும்
நாடியவர் பணியது மணிமேகலை என்ற நன் மங்கை வாழ்ந்த கதையும்
காவியங்கள் ஐந்தினிலும் மூன்றினிலே தலைதூக்கிக் காட்டுவதும் எங்கள் குலமே
கடுகளவுதான் சொன்னேன் மலையளவு புகழுண்டு காண்பாய் நீ தமிழர் நிலமே!
கடலோடி மலைநாடும் பிறநாடும் சென்றார்கள் கப்பல் வராதபோதே
காற்றினிலே பாய்போட்டு கடவுளையே துணை வைத்து கலங்களெலாம் சென்றபோதே
நடமாடும் சிவமாக திருநீறும் சந்தனமும் நதிபோலப் பூசும் உடலே
'நமசிவாயம்' என்று நாள்தோறும் சொல்லுமவர் நயமான சிவந்த இதழே
தடம்பார்த்து நடைபோடும் தனிப்பண்பு மாறாத தகைமிக்க தெங்கள் குலமே
தந்தகரம் அவராகப் பெற்றவளும் நீதானே சாட்சி சொல் தமிழர் நிலமே!
ஆறாயிரம் பேர்கள் கற்கின்ற கழகத்தை அண்ணாமலை நாட்டினான்
அவனோடு போட்டியிட அத்தனையும் தான்தந்து அழகப்பன் முடிசூட்டினான்
ஓராயிரம் தடவை செட்டிமகன் நானென்று உலகெங்கும் மார்தட்டினான்
ஊனூலும் விஞ்ஞான மருத்துவமும் கற்றவர்கள் உண்டென்று பேர் காட்டினான்
சேராத செல்வத்தைச் சேர்த்தாலும் நல்லவழி செலவாக்கும் எங்கள் குலமே
செந்திருவை சரஸ்வதியை கேட்டேனும் உண்மைநிலை தெரிந்துகொள் தமிழர் நிலமே!
சாதிவெறி கொண்டேன் போல் கவிதையிதை எழுதினேன் தவறல்ல; உண்மை சொன்னேன்
தர்மத்தைப் பாடுவது சாதிவெறியாகாது தமிழுக்கே நன்மை என்பேன்
ஓதியொரு மொழி சொன்ன ஒக்கூர் மாசாத்தியுமென் உன்னதப் பாட்டியாவாள்
உயர்ந்த சீத்தலைச் சாத்தன் ஒருவகையில் வணிகனென் உத்தமப் பாட்டனாவான்
ஆதிமுதல் தமிழிலே அவர் வந்த வழியிலே அடியேனைப் பெற்ற குலமே
அளவிலே சிறிதேனும் செயலிலே பெரிதாக அறிவாய் நீ தமிழர் நிலமே!


- கவிஞர் கண்ணதாசன்

நகரத்தார் குலமுறை தருமங்கள்



1. மாதா, பிதா, குரு, தெய்வம், பிராமணர், குலதேவதை இவர்களை வணங்குதல்.
2. கோவில்களுக்கும், குருஸ்தானங்களுக்கும் உள்ள சொத்தைப் பராமரித்து அதில் வரும் ஊதியத்தை அதே தர்மங்களுக்குப் பயன்படுத்துதல்.
3. ஆண்கள் பாதரக்குடி மடத்திலும், பெண்கள் துலாவூர் மடத்திலும் உபதேசம் கேட்டுக் கொள்ளுதல்.
4. சிவ மதத்திலேயே இருத்தல்.
5. தத்தம் கோவில் மாலை பெற்றே திருமணம் செய்விப்பது.
6. ஒரே கோவில் பிரிவில் திருமணம் செய்து கொள்ளாமல் இருத்தல்.
7. சுய கோவில் பிரிவில் சுவிகாரம் செய்து கொள்ளுதல்.
8. இரணியூரும், பிள்ளையார்பட்டியும் சகோதரர்களானதால் இவர்கள் தம்முள் திருமணம் செய்யாதிருத்தல்.
9. ஜீவ வதை வியாபாரம், குதிரை வியாபாரம், வெற்றிலை போன்ற அழுகும் பொருள்களை வியாபாரம் செய்யாதிருத்தல்.
10. பணம் கொடுக்கல் வாங்கலில் தர்ம வட்டி வாங்குதல்.
11. திருட்டு வியாபாரம் செய்வதில்லை. பிறன் மனைவி சேர்வதில்லை, தாசிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை.
12. நகரமுறை தவறியவர்களையும், ராஜதண்டனை பெற்றவர்களையும், சோரம் செய்தவர்களையும் சேர்வதில்லை.
13. செட்டி நாட்டிலேயே குடியிருப்பது; விசேடங்கள் செய்வது.
14. பெண்கள் தீர்த்த யாத்திரைகளுக்குப் புருஷர்களுடன் போய்வர வேண்டும்.
15. எந்த விஷயத்திலும் முன் வழக்கப்படி நடந்து கொள்வது.
16. நகரக்கூட்டம் கோவில் வாசல் அல்லது மடத்தில் நடத்துவது.

- வேலங்குடி பட்டயம்



நாயன்மார்களில், நகரத்தார் மற்றும் சித்தரான பட்டினத்தடிகளும்



காரைக்கால் அம்மையார்

இறைவனால் 'அம்மா' என்று அழைக்கப்பெற்றவர் காரைக்கால் அம்மையார் அவர்கள். கணவன் விரும்பாத அழகு எனக்குத் தேவையில்லை என்று பேய் உருப் பெற்றவர்கள். தலையினைக் காலாக ஊன்றி நடந்து கயிலை சென்று இறைவனின் அருளைப் பெற்றவர்கள். இறைவனிடம் தான் இனி பிறவாமை வேண்டும், பிறந்தால் உன்னை மறவாமை வேண்டும் என்று வரம் வாங்கி இறைவனின் திருப்பாதங்களில் நின்று பாடிக்கொண்டே இருப்பவர்கள் காரைக்கால் அம்மையார் அவர்கள்.

மூர்த்திநாயனார்

வணிக குலத்தில் தோன்றிய மூர்த்திநாயனார் திருவாலவாயில் எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமான் திருமேனிக்கு நாள்தோறும் மெய்ப்பூச்சுக்குச் சந்தனகாப்பு அரைத்துக் கொடுக்கும் திருப்பணியைச் செய்துவந்தார்கள். அத்திருப்பணிக்கு இடையூறு வந்த நேரத்தில் திருக்கோயிலுக்குச் சென்று இன்று இறைவரது மெய்ப்பூச்சுக்குச் சந்தனம் முட்டுப்பட்டாலும் அதனைத் தேய்க்கும் இந்தக் கையினுக்கு முட்டில்லை என்று துணிந்து சந்தனப்பாறையில் தமது முழங்கையைக் குருதி வர தேய்த்து தனது பக்தியினைக் காட்டி இறைவனின் அருளைப் பெற்றவர் மூர்த்திநாயனார்.

கலிக்கம்ப நாயனார்

சிவனடியார்களுக்கு விதிப்படி திருவமுதூட்டி தொண்டு செய்து

வந்த கலிக்கம்ப நாயனாரின் துணைவியார் ஏவலராக இருந்த ஒருவர் சிவனடியாராக வந்தபோது திருவடிகளுக்கு நீர் வார்க்கத் தயங்கிய மனைவியின் சிரத்தை வாளால் வெட்டினார். இறைப்பணிக்கு வேறுபாடில்லை என்பதை உணர்த்திய கலிக்கம்ப நாயனார் இறையருளைப் பெற்றார்கள்.

அமர்நீதி நாயனார்

சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து அவர்களுக்குக் கோவணம், கந்தை உடை கொடுத்து உதவி வந்தார். அவரை சோதிக்கும்பொருட்டு இறைவன் சிவனடியாராக வந்து தமது கோவணத்தைக் கொடுத்து பிறகு வந்து வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லி சென்றார். திரும்ப வந்து கேட்டபோது கோவணம் இல்லை. மறைந்து விட்டது. இது இறைவனின் விளையாட்டு. கோவணத்திற்குப் பதில் அதற்குச் சமமான கோவணம் தரும்படி கூறினார். நாயனார் மகிழ்ந்து தண்டின் மேல் இருந்த கோவணத்தை எடையில் வைத்து மற்ற தட்டில் கோவணங்களை வைத்தார். எடை சரியாகவில்லை. அதற்கு மேலும் பொன்பொருள் அனைத்தையும் வைத்து தான் மனைவி மக்களுடன் ஏறி அமர்ந்தார். அப்பொழுது எடை சரியானது. இறைவன் அவரின் இறைத்தொண்டினைக் கண்டு மகிழ்ந்து அருள்பாலித்தார்.

இயற்பகை நாயனார்

தனது மனைவியை இறைவன் சிவனடியாராக வந்து கேட்க,சிவனடியார்க்கு எதனையும் இல்லையென்று சொல்லாத இயற்பகை நாயனார் சிவனடியாருடன் செல்ல மனைவியின் விருப்பம் கேட்க, இருவரும் மனம் மகிழ்ந்து மனைவியை சிவனடியாருடன் பாதுகாப்பாக சென்று அனுப்பி வைக்கத் துணிந்தார். அவரின் பக்தியை இறைவன் கண்டு மகிழ்ந்து அருள்பாலித்தார்.

பட்டினத்தார்



காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த சிவநேசர் ஞானகலாம்பிகை அம்மையார் ஆகியோரின் திருமகன். பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரது பெயர் திருவெண்காடர். நகரத்தார் வணிக மரபில் கோடி கோடி பொருள் தொகுத்து வாழ்ந்த இவர் துறவியானபின், இவருக்கு மக்கள் வழங்கிய ''பட்டினத்தார்'' எனும் பெயரே நிலைத்தது. பட்டினத்தடிகள் என்றும் குறிக்கப் பெறுகிறார். பட்டினத்தார் நகரத்தாரே என மெய்ப்பிக்கும் அகச் சான்றுகள் அவரது பாடல்களில் உள்ளன. பணத்திருப்பு பற்றிய குறிப்பும், ஆத்தாள், வரிசை இட்டுப்பாராமல் என்ற சொல்லாட்சிகளும் அவர் பாடல்களில் காணப்படுகின்றன. இளையாத்தங்குடி கோவிலாரில் பட்டினசாமி என்ற ஒரு பிரிவு உண்டு. ஆண்டு தோறும் பட்டினத்தார் விழா காவிரிப்பூம்பட்டினம் பல்லவனீச்சுரம் நகர விடுதியில் நகரத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது.

குலப்பெருமைகள்

சில துளிகள்



❋ ஈசனுக்கு அம்மையும் அப்பனையும் தந்த குலம் நகரத்தார் குலம்! நம் குலத்துதித்த காரைக்காலம்மையை சிவபெருமான் 'அம்மையே' என்றழைத்தார். நம் பட்டினத்தாருக்குச் சிவபெருமானே குழந்தையாக வந்து மருதவாணன் என்ற பெயரில் வளர்ந்து அவரை 'அப்பா' என்றழைத்தார்.

❋ மன்னர்களுக்குத் தலைநகரில் கோட்டை இருந்ததுபோல் அவ்வரசர்கள் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் கோட்டைகள் போல் வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்ததால் 'நாட்டுக் கோட்டையார்' என்றழைக்கப்பட்டார்கள்.

❋ காஞ்சி நகரத்திலிருந்தும் புகார் நகரத்திலிருந்தும் வந்தவரென்பதால் 'நகரத்தார்' எனப்படுகிறோம்.

❋ ஐயாயிரமாண்டுச் சரித்திரப் பெருமையோடு இதுவரை யாரும் மதம் மாறாத குலம்.

❋ பர்மாவின் அபிவிருத்திக்குச் செட்டியார்களே காரணம்.

❋ முன்பு ஏழைகளே இல்லாத ஒரே இந்திய சமூகம் தொழில் இல்லாத செட்டியாரே இல்லை.

❋ மலேயா சுல்தான், தஞ்சை சரபோஜி, புதுக்கோட்டை ராஜா போன்ற மன்னர்களுக்கே பண உதவி செய்த சமூகம்.

❋ மன்னர்களுக்கு அடுத்தபடியாக அதிகத் திருப்பணிகள் செய்தவர்கள்.

❋ அனைத்து நகரத்தார்களும் ஏதோ ஒரு கோவில் திருப்பணியில் சம்பந்தப்பட்டவர்களே.

❋ இந்தியாவில் வங்கித் தொழிலின் முன்னோடிகள், பாரின் எக்சேஞ் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்.

❋ இந்தியாவிலேயே கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம்.

❋ மூவேந்தரோடு ஒப்பிடும் அளவு தமிழிசைக்குத் தொண்டு செய்தவர்கள்.

❋ நாயன்மார் 63 பேரில் ஐவர் நகரத்தார் (இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், மூர்த்தி நாயனார், கலிப்பகை நாயனார், காரைக்கால் அம்மையார்)

❋ ஐம்பெரும் காப்பியத்தில் மூன்று நகரத்தார் பற்றியவை. (சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி)

கண்ணகி நோன்பு


முனைவர் தமிழண்ணல்

நகரத்தார் குலவிளக்கு கண்ணகி. இதனை நகரத்தார் குல மகளிர் அனைவரும் மறத்தல் கூடாது.

'செட்டியார்கள்' எனப் பெயருடையார் பலரும் கண்ணகிக்கு உறவு கொண்டாடினும், நம் குலமரபே பெரிதும் பொருந்தி வருவதாகும்.

திருமணத்திற்கு முன்பு 'மங்கல அணியை' (கழுத்துரு) நகர்வலமாக, மத்தளம், சங்கு முழங்க எடுத்துச் செல்வது, திருமணமான பின் மாமியார் மருமகளையும் மகனையும் வேண்டியன தந்து வேறுவைப்பது, தடுக்குப்போட்டுக் கணவனுக்கு உணவு படைப்பது, புனித நீராடுவது (தலைமுழுக்கு, கடை முழுக்கு), கடல் வாணிகமும், தரை வழி வாணிகமும் செய்தது, குல தெய்வ வழிபாடும் குல தெய்வப் பெயரைப் பிள்ளைகளுக்கு இடுவதும் ஆகிய வழிவழிமரபு, மன்னர் பின்னோர் எனப்படுவது - என வரும் குறிப்புகள் பலவாகும். சிலப்பதிகாரம் தரும் இச்செய்திகளால் கண்ணகி நகரத்தார் குல மகளே என்பது உறுதிப்படுகிறது.

கணவன் பிரிந்திருந்த காலத்துப் பொறுமையோடு காத்திருந்து, வரவேற்று, தன் அணிகலன்களைக் கணவனுக்குத் தந்த கண்ணகியிடம் நகரத்தார் இல்லத்தரசிகளாம் ஆச்சிமார்களின் பண்பாடு, அவ்வாறே அமைந்திருக்கக் காண்கிறோம்.



கண்ணகி கணவன் கொலையுண்டதும் அவன் 'இருந்தைக்க' எனக் கூறி உயிர்விட்டதால், சில நாட்கள் உயிருடன் இருந்தாள். மன்னனுடன் வழக்காடித் தன் கணவன் குற்றமற்றவன் என மெய்ப்பித்து, அதன் பிறகே உயிர்துறந்தாள்.

நகரத்தார் மரபில் கணவனுக்கு முன் மனைவி இறக்க நேர்ந்தால், 'வாழ்வரசியாகப்' போய்விட்டாள் (வாவரசி) என்பர். மங்கல அணியோடு மறைந்தாள் என்று கூறுவர்.

இங்கு கண்ணகி கணவனுக்குப் பிறகும் சில நாட்கள் மட்டும் உயிருடன் இருந்தது ஒரு காரணத்தின் பொருட்டேயாகும். அவ்வாறு இருந்திராவிட்டால், கணவன் குற்றவாளி, கள்வன் என்றே உலகம் நம்ப நேர்ந்திருக்கும். தன் கணவனுக்கு அக்களங்கம் ஏற்படாமல் காக்கவே, அவள் பதினான்கு நாட்கள் உயிருடன் இருந்தாள். இதனால் அவளை மக்கள் 'மங்கல மடந்தை', 'மங்கலா தேவி','மங்கல மகள்' என அழைத்தனர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இதைப் பதிவு செய்துள்ளார்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோட்டம் (கோயில்) எடுத்தான். குன்றக் குறவர்கள் அவளை வேங்கைமர நிழலில் கண்டு, அவள் துறக்கமேறியதைப் பார்த்து இவள் எங்கள் 'குலதெய்வம் ஆனாள்' எனப் போற்றி, ஆடிப் பாடினார்கள். சமணத் துறவியாகிய கவுந்தியடிகளும் 'கற்புடைத் தெய்வம்' என்றே கூறினார். சாலினி என்ற வேட்டுவப் பெண்ணும் மதுரை மக்களும் கண்ணகியைப் பார்த்ததும் 'தெய்வம்' என்றே வணங்கினார்கள்.

இவ்வாறே அன்றைய மன்னர்கள் பலரும் இலங்கைக் கயவாகு, கொங்கிளங்கோசர், பாண்டிய மன்னர் எனப் பலரும், சேரரைப் பின்பற்றிக் கண்ணகிக்குக் கோயிலெழுப்பினர். அதனால் அவர்கள் நாட்டிலெல்லாம் துன்பம் நீங்கி, வறுமை ஒழிந்து, மழை பெய்து, வளம் பெருகி, பகையும் பிணியும் பசியும் இல்லாமல் நன்மையும் இன்பமும் தழைத்தன.

இத்தகைய கண்ணகித் தெய்வத்தை - மங்கல மடந்தையை நாமும் வழிபட வேண்டும். குறிப்பாக நகரத்தார் மகளிர் அனைவரும் கும்பிடவேண்டும். இதனால் நம் நகரத்தார் குலம் தழைக்கும். நம் கன்னிப் பெண்களுக்குத் திருமணமாகும். நல்ல குழந்தைகள் பிறக்கும் செல்வம் பெருகும். துன்பம் விலகும். நாடு நலமுறும். மழைவளம் சுரக்கும்.

சிலப்பதிகாரம் கூறும் வரலாறு, கண்ணகி கதை பலரும் அறிந்ததே. இங்கு வழிபடுவதற்கான அடிப்படைகளை மட்டும் தெரிந்து கொள்வோம்.

கண்ணகி பாண்டிய மன்னனுடன் வழக்காடித் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை மெய்ப்பித்தாள். உடனே பாண்டியன் நெடுஞ்செழியனும் கோப்பெருந்தேவியும் நீதி தவறியதனால் அழிந்து போய், ஒருவர்பின் ஒருவராக உயிர் விட்டனர். இச் செய்திகளைக் கேட்ட மதுரை மாநகரமே கொதித்தெழுந்தது. தொடர்ந்து மதுரை எரியுண்டது - நெருப்புப் பற்றி எரிந்தது.

அதன் பின் கண்ணகி பதற்றமடைந்து, 'என் கணவனைக் காணச் செல்வேன்' எனப் புறப்பட்டாள். கொற்றவை கோயிலில் தன் கைவளையல்களை நொறுக்கி எறிந்தாள்.

'மதுரைக்குள் கீழ வாசல் வழியாகக் கணவனுடன் புகுந்தேன். இப்போது மேலவாசல் வழியாகத் தனியே போகிறேன்' எனச் சொல்லிப் புறப்பட்டு, வைகையாற்றின் தென்கரை வழியாகச் சேரநாடு நோக்கி நடந்தாள்.

கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்துக்
கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு ***(23:180-82)***

கண்ணகி மன உறுதி உடையவள். வைராக்கியம் மிக்கவள். உண்ணாமல் உறங்காமல்


நடந்தாள். மேடு பள்ளம் பாராமல் நடந்தாள். தான் பிறந்த சோழநாடும் தன்னை வாழவிடவில்லை. வாழலாம் எனப்புகுந்த பாண்டிய நாடும் வாழவிடவில்லை. இந்த வருத்தமும் சீற்றமும் கலந்த மனநிலையில்தான் அவள் சேரநாடு நோக்கி நடந்து, அந்த எல்லை வந்ததும், அங்கிருந்த 'நெடுவேள் குன்றம்' எனப்பட்ட செங்குன்றில் ஏறி, அயர்ந்து விழுந்து உயிர் விட்டாள். உலக வழக்கில் 'கணவன் வந்து கூட்டிப்போனதாகப்' பேசுவதுண்டல்லவா? அந்த அடிப்படையில், கோவலன் வந்து அழைத்துச் சென்றதாகக் காப்பியப் புனைவு செய்து, இந்த அவலக்கதையை இளங்கோவடிகள் நிறைவு செய்கிறார்.

இரவும் பகலும் மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை ஒருகரைக்கொண்டு ஆங்கு
அவல என்னாள் அவலித்து இழிதலின்
மிசைய என்னாள் மிசைவைத்து ஏறலின்
....
நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி
....
எழுநாள் இரட்டி எல்லை சென்றபின் (23:183-99)

கண்ணகி, கோவலன் வந்து அழைக்க அவனுடன், வானுலகம் சென்றனள். (எழுநாள் இரட்டி - பதினான்கு நாள்) கோவலன் கொலைப்படி மதுரை எரிந்தது ஆடிமாசம் அமாவாசை வெள்ளிக்கிழமையாகும். அன்றே கண்ணகியும் மதுரையை விட்டு வெளியேறினாள்.

ஆடித் திங்கள் பேர்இருள் பக்கத்து
அழல் சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து தெள்ளெரி உண்ண
(23:133-35)

ஆடிமாதம் - தேய்பிறை - எட்டாம் நாள் (அஷ்டமி) - கார்த்திகைப் பரணி நட்சத்திரம் (கார்த்திகையும் பரணியும் கூடிய நாள்), வெள்ளிக்கிழமை முதல் பதினான்கு நாள், இரவு பகல் பாராமல், பள்ளம் மேடு பாராமல், உண்ணாமல் உறங்காமல் வையையின் தென்கரை வழியே நடந்து நடந்து - செவ்வேளாம் முருகனது செங்குன்றின் மேலே, 'அடி வைத்து ஏறி (குத்துச்சாய்வான மலைமேலே அடிமேல் அடிவைத்து ஏறி) கண்ணகி உயிர்துறந்தனள். இந்தப் பதினான்கு நாட்களும், ஆண்டுதோறும் நோன்பு கொண்டாட வேண்டியவையாகும்.



எவ்வாறு நோன்பு இருப்பது, என்ன என்ன சடங்குகளை மேற்கொள்வது, எங்கு நடத்துவது என்பனபற்றிச் சமூக மக்கள் பலரும் கூடி முடிவெடுத்து, அதன்படி செய்யலாம். எவ்வாறு

கொண்டாடினாலும் தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, அடையாளம் தெரியும்படியும், நமது சமூக மக்கள் மேன்மையும் சீரும் செல்வமும் நல்வாழ்வும் பெற வேண்டியும் கொண்டாடவேண்டும்.

முன்கூட்டிச் சில யோசனைகள் - கருத்துரைகள் இங்கு தரப்படுகின்றன. மேலும் சிந்திக்க இவை வழிகாட்டும்.

கண்ணகி மழைதரும் தெய்வமாகப் போற்றப்பட்டாள். காலப்போக்கில் அது 'மாரியம்மன்' வழிபாடாக மாறியது. மாரி என்ற சொல்லுக்கு மழை என்று பொருள். மதுரையிலும் மற்ற இடங்களிலும் ஆடித் திங்கள் வெள்ளிக் கிழமைகளில், மகளிர் மாரியம்மனைச் சிறப்பாக வழிபடுவது இதன் தொடர்ச்சியாகும். சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானமும் 'ஆடிவெள்ளி' கண்ணகி வழிபாட்டு வழி'வந்ததே என்று விளக்கியுள்ளார்.

மேலே குறித்தபடி, 'ஆடித் திங்கள் - வெள்ளிக் கிழமை - அழல்சேர் குட்டத்து அட்டமியன்று (தேய்பிறையில் அட்டமியன்று) தொடங்கிப் பதினான்கு நாட்களும் நோன்பு - விரதம் கடைப்பிடிக்க வேண்டும்.'

புரட்டாசி மாதம் இராமாயணம் படித்துப் பட்டாபிஷேகம் செய்வதுபோல, ஆடிமாதம் சிலப்பதிகாரம் படித்து, கண்ணகியின் சிறிய சிலை அல்லது படத்தை வைத்து, குலதெய்வ வழிபாடு போலப் படையலிட்டுப் பூசிக்கலாம்.


நாள்தோறும் அப் பதினான்கு நாட்களும் சிலம்பு விழாவாக மகளிரும் சிறுவர் சிறுமியரும் இசைபாடி, ஆடி மகிழலாம்.

சிலப்பதிகாரப் பகுதிகளை நாட்டியமாக ஆடச் செய்யலாம்.

'கண்ணகி போற்றி' - எழுதி, 108 அல்லது 1008 போற்றிகள் சொல்லி வணங்கலாம். இப்போற்றிகள் சிலப்பதிகார அடிப்படையிலும் கண்ணகித் தெய்வத்திடம் வரம் வேண்டி நம் குலத்தைக் காக்கும்படி தொழுகின்ற முறையிலும் எழுதப்படவேண்டும்.

கம்பம் - கூடலூர் அருகே, மங்கலா தேவி கோவிலுக்கு, மதுரையிலிருந்து (பழனி நடைப் பயணம் போல) நடந்து சென்றும் வழிபடலாம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து, மதுரை வரை கண்ணகி நடந்துவந்த வழியிலேயே, நடந்தும் வழிபடலாம்.

எங்ஙனமாயினும் நகரத்தார்கள் குறிப்பாக மகளிர் இக் கண்ணகி நோன்பை - நம் மகளிர் நோன்பு, பிள்ளையார் நோன்பு போலவும் 'சஷ்டி' விரதம் போலவும் முன்னெடுத்து நடத்தவேண்டும். இதனைத் தமிழர்கள் அனைவரும் தமிழன்னை நோன்பாகவே கொண்டாட இது வழிவகுக்கும், நகரத்தார் குலமும் தழைக்கும்.



சத்தமிட்டுச் சொல்லுங்கள், "சாமான்கள் வேண்டாம்"

(SAY NO TO SAMAN)

மீனா சேது - சேலம்

ஆச்சிமார்களே, ஒரு நிமிடம்!

நீங்கள் உங்கள் மகளுக்குச் சீதனமாக ஒரு தொகையைக் கொடுக்கின்றீர்கள். அது உத்தமம்.

ஆனால் 3 நகை, கிலோ கணக்கில் வெள்ளிச் சாமான், எவர் சில்வர், அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், மெத்தை, தலையணை என்று லாரியில் ஏற்றி அனுப்புகிறீர்களே, எதற்காக?

அவள் அவற்றை பயன்படுத்தி அனுபவிப்பதற்காகவா? அவை சிறந்த முதலீடாக, மதிப்பில் பன்மடங்கு உயர்ந்து பிற்காலத்தில் கைகொடுக்கும் என்பதற்காகவா?

இல்லை வீண் பெருமைக்காகவா? இவை எல்லாமேதான் என்று சொல்வீர்கள். அப்படியானால் உண்மையை அறிந்து கொள்ள வேண்டாமா? மேலே படியுங்கள்.

ஒரு பெண் தன் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்த ஒரு அலமாரி நிறையச் சாமான் போதும். அறை கொள்ளாத அண்டாக்களையும் அடுக்குகளையும் அவள் என்று பயன்படுத்தப் போகின்றாள்?

அவள் குழந்தைகளின் திருமணத்தின் போது என்றால் எத்தனை முறை? இரண்டு அல்லது மூன்று முறை?

அதற்காகப் புத்தம் புதுச் சாமான்களைப் பயன்படுத்த மனம் ஒப்புமா? பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாமான்களை, அதுவும் மதிப்பிலும், வனப்பிலும் தேய்மானம் ஆகும் சாமான்களை வாங்கி வட்டி நட்டமாக, வருவாயோ சிறிதும் இன்றி, மேற்கொண்டு அறைக்கு வாடகையும் கொடுத்து எத்தனை வருடங்கள் காப்பது?

விளக்குமாறு, குப்பைத்தகரம் முதல் அண்டா அடுக்குகள் வரை குறைந்த விலையில் அனைத்து சாமான்களும் எளிதாக வாடகைக்கு கிடைக்கும் காலத்தில், லட்சக்கணக்கில் அதற்காக விரயம் செய்வது எந்த சமர்த்தில் சேர்த்தி?

உயர்ந்த பண்புகளையும் தூய்மைக் குணத்தையும் பெண்கள் மூலம் உலகிற் பரப்பக் கடவுள் விரும்பினார் என்று நான் கருதுகிறேன்.

- ஹென்ரிவாட்பிச்சர்

சாமான்கள் வாடகைக்கு எடுப்பதில் எந்த கவுரவக் குறைச்சலும் இல்லை. ஏன், இன்று மாவாட்ட மிஷின்கள் வாடகைக்கு எடுப்பதில்லையா? இல்லை, அதிலும் 4, 5 வாங்கி மகளுக்கு வைக்கப் போகின்றீர்களா?

அமெரிக்காவிலோ, நியூசிலாந்திலோ, அல்லது சென்னை, பெங்களூரிலோ வசிக்கும் உங்கள் மகள், முக்கியமான, பொறுப்பான உத்தியோகம் பார்க்கும் உங்கள் மகள் என்றைக்கு ஊருக்கு போய்ச் சாமான்களைப் பிரித்துப் பார்க்கப் போகிறாள்? எப்படி அவற்றைக் கரையான் தூசியிலிருந்தும் தற்காலத்துத் திருடர்களிடமிருந்தும் பாதுகாத்துப் பராமரிக்கப் போகின்றாள்? என்றைக்கு அவற்றை எல்லாம் எடுத்துப் புழங்கப் போகின்றாள்?

பாய்கள் உளுத்து, பிளாஸ்டிக் பொருட்கள் வெளுத்து, வெடித்து, சூட்கேஸ், வானிட்டி கேஸ் ஆகியவை உள்துணி வெளுத்து, நசவு விழுந்து, எலாஸ்டிக் விட்டுப்போய், மாடல் பழசாகி - ஆக, பல பொருட்கள் பயன்படுத்தாமலேயே பாழாய்ப் போகின்றன.

'எவ்வளவு பாழ்' என்று உணர்ந்து 20, 25 வருடங்கள் கழித்து உங்கள் மகள் எல்லா சாமான்களையும் விற்றுக் காசாக்கி வங்கியில் போடலாம் என்று முனையும் போதும் அவளுக்கு அதிர்ச்சி காத்திருக்கும்.

அறைகொள்ளாமல் சாமான்கள் லட்சக்கணக்கில் தேறும். விற்று, பிள்ளைகள் பேரில் ஆளுக்கு 2 லட்சம் போடலாம் என்று மனக்கோட்டைகளோடு விற்கப் போகும் போதுதான் 'சாமான்கள்' என்ற பெயரில் எவ்வளவு மோசமான ஒரு முதலீடாகத் தன் பணம் வீணாக்கப்பட்டிருக்கின்றது என்று அறிந்து கொள்வாள்.

கால் விலை, அரை விலைக்குக் கூட வாங்க ஆளில்லை என்பது மட்டுமல்லாது, அவை நல்ல விலைக்குப் போகக் கூடாது என்று மிகவும் பிரயாசைப்பட்டது போல ஒரு சின்ன ஸ்பூன் முதற்கொண்டு பேர் வெட்டி வைப்பதால் 'Resale value' என்பதே இல்லாமல் போய்விடுகின்றது.20, 25 ஆண்டுகளுக்கு முன் இந்தச் சாமான்கள் வாங்கிய செலவு அவற்றை ஊருக்குக் கொண்டு வந்த செலவு, வண்டி வாடகை, பேர் அடித்தது, சாமான் பரப்பியதற்குக் கூலி, சாப்பாட்டுச் செலவு, உறவினர்களை அழைத்து வந்த வேன் செலவு, அறை வாடகை, பராமரிப்புச் செலவு என்று பார்த்தால் 3 அல்லது 4 லட்சம் தேறும். சாமான்களை இன்று அதிகப்பட்சம் 1½ லட்சத்துக்கு விற்றால் அது நம் அதிர்ஷ்டம். இதையே அன்று சென்னை போன்ற நகரங்களில் ஒரு தனி பங்களாவாகவோ, பெரிய வீட்டு மனையாகவோ வாங்கிக் கொடுத்திருக்கலாம். அவள் வாழும் ஊரை ஒட்டிச் சில ஏக்கர்கள் விவசாய நிலமாகக் கொடுத்திருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் இன்று அவைபல மடங்கு மதிப்பில் உயர்ந்து சில கோடிகளாகியிருக்கும். சாதாரண 15 % வட்டிக்கு கொடுத்திருந்தால் கூட, இன்று 50, 60 லட்சமாகியிருக்கும்.

பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றுக்கும் விளக்கு; அவளுடைய எண்ணங்கள், ஆற்றல்கள், தைரியம் என்பன அவளுடைய அன்பு என்னும் ஆற்றலிலிருந்து தோன்றியவை.

- ஜேம்ஸ் எல்லிஸ்

கூலி, சேதாரம் கொடுத்துச் செய்யும் தங்க நகைகளும் வெள்ளிச் சாமான்களும் மீண்டும் விற்கும் போது மிகவும் குறைந்த விலையே கிடைக்கின்றது.

10 வருடங்களுக்குள் பொருட்களின் மதிப்பில் மாறுதல் எவ்வளவு என்பதற்கு ஒரு சிறு கணக்கு :

பொருள்	1992ல் விற்ற விலை	கூலி, சேதாரத் தோடு நாம் வாங்கிய விலை	இன்றைய விலை (2002)	கூலி, சேதாரம் கழித்து நாம் விற்கும் விலை	நமது முதலீட்டிற்கு இன்றைய மதிப்பில் மாற்றம்
தங்கம் 1 சவரன்	3200	3400	3600	3200	- 11.2%
வெள்ளி 1 கிலோ	7000	7350	7600	7000	- 5%
வெண்கலம் 1 கிலோ	160	-	200	125	- 22%
15% வட்டியில் வைப்புதொகை	1000			4000	+ 400%

'Penny wise & pound foolish' என்பார்கள். நம் செட்டியார்களும் ஆச்சிமார்களும் மோர், காய்கறி, பால், கரைக்கும் புளி, உடுக்கும் உடை, இருக்கும் வீடு, பயன்படுத்தும் வாகனம், செல்லும் விடுமுறைகள் எல்லாவற்றிலும் சிக்கனமாக இருந்து சேர்த்த பணத்தை இப்படி சாமானாக்கிப் பாழ் செய்வது ஏன்?

பெருமைக்கு! வீண் பெருமைக்கு!!

இதைத்தவிர என் சிற்றறிவுக்கு வேறு காரணம் புலப்படவில்லை. பொருட்காட்சி போல, ஒரு departmental store போல எல்லாச் சாமான்களையும் பரப்பி வைத்து, நகைகளை ஆடம்பரமாகக் காட்சிக்கு வைத்து, உற்றார் உறவினரை வருந்தி அழைத்து, விருந்து கொடுத்து இந்தப் பொருட்காட்சியைக் காணச் செய்வது எதனால்? Why this vulgar Display? ''ஆகா! எத்தனை சாமான்கள், எத்தனை அடுக்கு, எவ்வளவு நகைகள்!'' என்று எல்லோரும் வாய் பிளந்து பாராட்ட வேண்டும். கொடுப்பவளாகிய தாயும், வலுக்கட்டாயமாகக் கேட்டு வாங்கும் மாமியாரும் எதிர்பார்ப்பது இது ஒன்றுதான்.

அன்றையப் பெண்கள் வேறு வித முதலீடுகளைப் பராமரிக்க தெரியாதவர்கள் என்ற எண்ணத்தில், ஆண் பிள்ளைகளுக்குத் தொழில், நிலம், வீடு என்று கொடுத்த பெற்றோர், பெண் பிள்ளைகளுக்கு நகை, சாமான் என்று கொடுத்தனர். அவளும் அவற்றைப் புழங்க ஏராளமான சந்தர்ப்பங்கள், தேவைகள் இருந்தன.

ஆண் படித்தால் ஒருவன்தான் படித்தவனாவான்; பெண் படித்தால் ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததாகும்.

- சி.பி. மிக்லிவர்

இன்று நிலைமை மாறிவிட்ட து! சாமான்களுக்குத் தேவையோ, மதிப்போ இல்லை. பெண்களும் தங்கள் இயல்பான புத்திக் கூர்மையுடன், கல்வி கற்று இணைய உத்தியோகம், சிறு தொழில், கொடுத்து வாங்குவது என்று எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாகப் பொருள் ஈட்டவும், காக்கவும், வகுக்கவும் திறமை பெற்று விளங்குகின்றார்கள்.

செட்டிநாட்டில் உள்ள '3 நகை'களைப் போல வீண் செலவு ஏதுமில்லை. நல்ல வைரமா என்று நம்மில் பலருக்குத் தெரியாமலே வாங்கி ஏமாறுகிறோம். மாமியார் 3 நகை என்று நிர்ப்பந்தம் செய்யும்போது மட்டமான கல்லை வாங்கி நகை செய்கிறோம். அவற்றை வாங்கிய இடத்திலேயே பின்னால் விற்பதானால் கூடப் பாதி விலை கூடத் தேறாது. மேலும் நம் தற்காலக் கண்டசரங்கள், பூச்சரங்கள் போல கற்பனை வளமோ அழகோ இல்லாத வைர நகைகள் வேறு இல்லை. புது நிறத்தைப் பொது நிறமாக கொண்ட நமக்கு வயிரக் கண்டசரங்கள் பொருந்துவதும் இல்லை. முக்கால் பாகம் சேலைத் தலைப்புக்குள் மறைந்துவிடும். தாலிச் செயினை வைரத்தில் செய்வது தேவையா? வைர நகைகள் என்று அடித்துக் கொள்வதை விடுத்து, மெல்லிய தங்க நகைகளையும், முத்துச்சரங்களையும் இன்றைய நாகரிகத்திற்கேற்ப, தேவையான அளவு மட்டும் செய்து, மற்றவற்றிற்குப் பதில் உபயோகமுள்ள Fridge, Airconditioner, Car போன்றவற்றையோ அல்லது நிலம், flat போன்றவற்றையோ, அல்லது வங்கியில் deposit ஆகவோ கொடுப்பதே புத்திசாலித்தனம். அனைத்துக்கும் மேலாக நல்ல கல்வியை உங்கள் பெண்ணுக்கு அளிப்பதே சாலச் சிறந்தது.

ஒரு மனிதனின் சொத்து மதிப்பையோ, சம்பளத்தையோ பற்றி விசாரிப்பது அநாகரிகமான செயல் என்றால் ஒருவனிடம் அவன் மகளுக்கு எவ்வளவு கொடுக்கின்றான் என்று கேட்பது பெரும் அநாகரிகமாகும். ஒருவன் தானே "நான் இவ்வளவு கொடுக்கின்றேன்." என்று சொல்வது மிகக் கேவலமான தற்பெருமையாகும்.

ஆகவே தாய்மார்களே, வீண் பெருமைக்காக, 'சாமான்', 'நகை' என்று உங்கள் அருமை மகளுக்கு உரிய தொகையை விரயம் செய்து பாழாக்காமல், அவள் செழிப்புடன், சகல சௌகரியங்களோடு வளமாக வாழ அவளுக்குப் பயன் படக்கூடிய, விருத்தியாகக் கூடிய வகைகளில் கொடுங்கள்.

பெண்களே, இன்னும் எத்தனை காலங்களுக்கு வாய் மூடி, தாய் கொடுக்கும் சாமான்கள் என்ற பாரத்தைச் சுமந்து உங்களுக்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய செல்வத்தை, உங்கள் குடும்பத்தின் வீண் பெருமைக்காக விட்டுக் கொடுப்பீர்கள்? சாமான்களை விடச் சொத்துச் சிறந்தது; சொத்துக்களை விட அவற்றைப் பயன்படுத்தும் சிந்தனையும் பண்பாட்டுப் பாரம் பாரியமும் சிறந்தவை. எனவே முதலில் விழித்தெழுங்கள்.

உரத்த குரலில் சத்தமிடுங்கள், சாமான்கள் வேண்டாம் என்று.

வானத்தில் நட்சத்திரங்கள் பாடல்களாக விளங்குதல் போல பெண்கள் உலகின் பாடல்களாக விளங்குகின்றனர்.

- ஹார்கிரோவ்

வாட்டி வதைக்கும் வரதட்சணை



- அழ. தையல் நாயகி, இராயவரம்

பாரெல்லாம் போற்றும் வகையில் நகரத்தார் பெருமக்கள் வாழ்கிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருமைபல சேர்த்து வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனினும் நகரத்தார் சமுதாயத்தில் வரதட்சணை என்பது நம் சமுதாயத்தை வேரொடு அழிக்க உருவாகிய தீய சக்தியாகும். வரதட்சணையை ஒழிக்கச் சமுதாயத்தில் உள்ள ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் முன் வரவேண்டும். வரதட்சணைப் பிரச்சினையால் எத்தனையோ பெண்கள் எழில் நலம் நிறைந்திருந்தும், ஏழ்மை நிலையால் உரிய காலத்தில் திருமணம் நடைபெறாது அல்லல் உறுகின்றனர். நம் சமுதாயத்தில் பெண்ணைப் பெற்றவரைக் கலங்க வைக்கும் கொடிய சொல் வரதட்சணை என்பதாகும்.

மாமியார் சாமான், பின்முறை, மாப்பிள்ளை செட்டு, சாமான் பரப்புதல் என்று பெண்ணைப் பெற்றவர்கள் பெரும்பாடு படுகின்றனர். பெண் குழந்தை பிறந்தது முதல் அவள் கன்னிப்பருவம் அடைவது வரை அரும்பாடுபட்டுச் சேர்த்த பொருளை அரைநாளில் கரைத்து விடுவதுதான் இக் கொடுமை. இரண்டு மூன்று பெண்கள் அல்ல, ஒரே ஒரு பெண் பெற்றால் கூடத் திருமணம் செய்து கொடுப்பது என்பது மிகவும் கடினமான செயலாக உள்ளது.

மாப்பிள்ளையானவன் மருத்துவரானால் இவ்வளவு தொகை, பொறியாளரானால் இவ்வளவு தொகை, ஏன்? வேட்டி கட்டத் தெரிந்த ஆணாய் இருந்தால் கூட இவ்வளவு என்ற கேவலமான நிலை இன்றும் உள்ளது. இன்பமான வாழ்விலே துன்பமாய் வந்து சேர்ந்துள்ளது இவ்வரதட்சணை. இந்நிலை மறைய வேண்டும் என்று கூறாத அறவோரில்லை. நம் சமூகத்தில் இந்நிலை கண்டு மனம் நொந்த காந்தியடிகள், ''உங்களுடைய திருமண நடைமுறைகள் சில மிகவும் தீயனவாய் உள்ளன என்று நான் அறிகிறேன். ஒரு பெண்ணிற்குப் பெரும்பாலும் ரூ. 30,000 வரை செலவு செய்கிறீர்கள். நீங்கள் ஒரு திருமணத்திற்கு ரூ. 50,000 வரை செலவிடவும் பின்னடைவதில்லையென்பதை நான் அறிவேன். ஆனால் இது ஒழுங்கீனமானது என்பதே என் கருத்து. திருமணம் என்ற புனிதமான நிகழ்ச்சிக்கு இங்ஙனம் 'பெருவிலை' வைப்பது அடாத செயலாகும். கற்புள்ள கன்னியொருத்தியை

பெண் மனம் அறிவு பெறுவதைப் பொறுத்தே மனிதன் அறிவும் வளர்ச்சி பெறுகிறது.

- ஷெரிடன்

மணம் முடிக்கும் வாய்ப்பு, செல்வர்களைப் போல ஏழைக்கு எளிதாக இருக்க வேண்டும். மணமக்களிடையே ஒன்றுபட்ட அன்பும், ஒழுக்கமுமே திருமணத்திற்குக் கவனிக்கப்பட வேண்டிய முக்கியப் பொருத்தங்களாகும். திருமணங்களுக்காகச் செலவிடுதல் என்பது மிகவும் பொருந்தாததும் வீண் செலவுமாகும். செல்வம் படைத்தவர்கள் பலர் முன்னே தமது ஆடம்பரங்களைக் காட்டுவது, அச் செல்வமுடைமைக்கேற்ற சிறப்பாகாது, பெருஞ்செல்வம் சேர்த்தவர்கள் அதனை முறையாகப் பயன்படச் செலவழிக்கும் கலையையும் அறியாவிட்டால் அது அவர்களின் தரத்தைக் குறைத்துவிடும். எனவே, திருமணச் சீர்திருத்தம் மூலமாகத்தான், இச் சடங்குகளுக்குச் செலவழிக்கும் வீண் செலவுகளை நிறுத்துவதன் மூலமாகத்தான் நீங்கள் இச்செட்டி நாட்டைத் தேவ உலகமாக மாற்ற முடியும்,'' என்று 'யங்இந்தியா', பக்.334 இல் குறிப்பிடுகிறார்.

மகாகவி பாரதியாரும் வரதட்சணை பற்றி, 'மாப்பிள்ளை விலை' என்ற தலைப்பில்

''மாப்பிள்ளைகளோ உயர்ந்த கிரயங்கள் கொடுத்தாலொழிய அகப்படுவதில்லை. முக்கால்வாசி நித்திய ஜீவனத்துக்கு வழியில்லாத ஏழைகள் நாலைந்துபெண்களைப் பெற்று விட்டால் இந்த ஏழைகள் என்ன செய்வார்கள்?'' என்கிறார்.

நம் சமூகத்தில் பெரும்பாலும் பெண்கள் திருமணத்திற்காக வாழ்நாள் முழுவதும் தவம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

இருமனக் கலப்பே திருமணம்; எனவே அது ஆயிரம் காலத்துப் பயிர் என்று போற்றப்படுவது. இத்தகைய பயிருக்காக நம் சமூகத்துப் பெண்கள் சிலர்,

''அல்லிப்பூ தாமரைப்பூ
ஆயிரம்பூப் பூத்தாலும்
கல்யாணப் பூவெனக்குக்
காலமெல்லாம் பூக்கலையே!

உறக்கமில்லை என்றாலும்
ஒரு கோடி கனவிருக்கு!
இறக்கவில்லை என்றாலும்
எனக்கெங்கே உசிரிருக்கு?''

என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

விண்ணுலகின் கவிதை மலர்கள் விண்மீன்கள், மண்ணுலகின் கவிதை மலர்கள் பெண்கள்.

- ஹார்கிரேவ்

சிறு வயதுத் திருமணம் தடை செய்யப்பட்ட இன்றைய சூழலில் வயது வந்த பெண்களுக்கே திருமணம் நடப்பது கடினமாக இருக்கிறது. வரதட்சணைக் கொடுமை உச்சக்கட்ட நிலையினை அடைந்துள்ளது என்று கூறலாம். பெண்களின் துன்பங்களுக்கு இக்கொடுமையே தலையாய காரணமாக இருக்கிறது. இன்றைய சூழலில் நம் சமூகத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணுக்குத் திருமணம் செய்விக்கும் கடமைக்குப் பயந்தே கருவிலேயே பெண்ணைச் சிதைக்கின்றனர்.

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பம் நுகரவும் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு ஈடு கொடுக்கவும் ஒருவருக்கொருவர் துணையாகச் செயல்படவும் மட்டுமே நடைபெறவேண்டும்.

ஆனால் இன்று நம் சமூகத்தில் மணமகனைச் சந்தைப் பொருளாக்கியுள்ளார்கள். பொன்னையும் பொருளையும் பார்க்கிறார்களே தவிரப் பொருத்தம் எதையும் பார்ப்பதில்லை. அன்று மணமகளுக்குப் பரிசு கொடுத்த நிலை மாறி இன்று மண மகனுக்குப் பரிசு கொடுக்கும் நிலை உருவாகிவிட்டது.

பொருளாதார வசதியும் ஏற்ற வாழ்க்கைக்குத் தேவையான வருமானமும் குறைவாக உள்ள ஆண்களும் பெண்களும் தங்களின் திருமண வயதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே செல்கின்றனர். பெரும்பான்மையோர் இத்தகைய சூழ்நிலைகளில் முப்பது வயதிற்குப் பின்னரே மணக்கின்றனர்.

இதன் காரணமாக நகரத்தார் மக்கள் தொகை உயர முடியாமல் போகிறது. முப்பது வயதிற்குமேல் பல பெண்கள் திருமணம் செய்து கொண்டாலும் பிள்ளைப்பேறு இன்றித் தவிக்கின்றனர். முப்பத்தைந்து வயதைக் கடந்த பெண்டிர் பலர் திருமணமே வேண்டாம் என்று முடிவெடுக்கும் நிலையில் உள்ளனர். மேலும் சிலர் வயதானவரை இரண்டாம் தாரமாக, மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்து கொள்கின்றனர்.

இந்நிலை மாற நம் சமூகத்தில் நல்ல வழிகளைச் செய்ய வேண்டும். பெண்ணின் திருமணத்தைப் பொருளாதாரமோ, மாப்பிள்ளை வீட்டாரின் எதிர்பார்ப்போ நிர்ணயிக்காமல் அவளுடைய தகுதிகள் மட்டுமே நிர்ணயம் செய்யும் நிலை என்று வருகிறதோ அன்று தான் நம் சமூகம் மேலும் முன்னேற்றம் அடைய முடியும்.

**அந்த முன்னேற்றம் அடைய அனைத்து
அன்புள்ளங்களும் ஆவன செய்ய வேண்டும்.**

ஆண்களுக்கு வீரமும் புகழும் மதிப்பும் அளிப்பது பெண்களே. பெண்களால்தான் ஆண்களுடைய கீர்த்தி பரவுகிறது.

- மகாபாரதம்

தற்போது நடை பெறும் திருமணங்கள்

கு. பொன்மலர் உமையாள், புதுக்கோட்டை

''எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை!'' அதனால் இருபாலரும் சமமே!

வரதட்சணை என்னும் பெயரில் பெண் வீட்டாரிடம் பணம் கேட்பதை முதலில் நிறுத்த வேண்டும். நம் அகராதியில் இருந்து அகற்ற வேண்டும்.

இன்று படித்த இளைஞர்கள் மணக்கூலிக் கேட்பது தவறு என்று அறிந்தாலும் சமுதாய அந்தஸ்திற்காகக் கேட்கிறார்கள்.

வரதட்சணைக் கேட்பதும், கொடுப்பதும் இரண்டுமே தவறாகும்.

தன் இஷ்டத்துடன் பெற்றோர் பெண்ணுக்குக் கொடுத்தால் அது அன்பளிப்பு. அதை விடுத்து இவ்வளவு தொகை, இவ்வளவு நகை என்று கேட்டுப் பெண் வீட்டாரையும், உற்றாரையும் மணப்பெண்ணையும் வருத்தி வாங்கும் பணம் தேவைதானா?

''குறுமணக் கூலி கேட்பதும் ஏன்?

கொடுக்குத் தேளாய்க் கொட்டுவதும் ஏன்?''

என்ற புதுக்கவிஞனின் வரிகளில் அர்த்தம் உள்ளது.

வெளிப்படையாகச் சொல்லப்போனால் இன்று நகரத்தாரில் பலர் தன் மகன்களை வெளிநாட்டிற்கு அனுப்பிப் படிக்கவைப்பது படிப்புக்காக மட்டும் அன்று. அவர்கள் சமூக அந்தஸ்த்தை உயர்த்துவதற்காகவும், பெண் வீட்டாரிடம் அதிகமான தொகையைக் கேட்டுப் பெறுவதற்கும் தான்.

இவ்வாறு பெண்களை விலை பேசுவது மிகவும் கீழ்த்தரமான செயலாகும். இன்றைய நகரத்தார் பெண்களின் நிலை மாற வேண்டும். படிப்பில் பெண்கள் ஆண்களைப் போலவும் அல்லது ஆண்களை விடவும் நன்றாகப் படித்து விஞ்ஞானத்திலும், விண்வெளியிலும் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் இன்றைய நகரத்தார் பெண்களில் ஒரு IFS, IAS, IPS கூட இன்னும் வரவில்லை என்பது வருந்தத் தக்கதே.

கல்வி, சங்கீதம், புகழ், செல்வம், வெற்றி, பூமி, தண்ணீர், தானியம் முதலிய எல்லா அம்சங்களுக்கும் தலைமை தாங்குவது பெண் சக்திகளே.

- மகாபாரதம்

உண்மையாகச் சொல்லப்போனால் பெண்ணைப் பணம் கொடுத்துத் தான் மணந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு குடும்பத்தை உயர்த்துவது பெண்ணின் கையில்தான் உள்ளது.

''ஒரு பெண் நினைத்தால் முடியாதது ஒன்றும் இல்லை'' ஏனெனில் இன்று வீட்டையும், நாட்டையும் ஆள்வது பெண்தான். பெண்கள் புரட்சி செய்ய வேண்டும். மணம் செய்ய பணம் கேட்கும் முதுகெலும்பில்லாத ஆண்களை மணந்துக் கொள்ளக் கூடாது. தன்னைவிடப் பணம் தான் பெரிது என்று நினைப்பவனுடன் வாழவும் கூடாது.

நகரத்தாரின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவை உலகிற்கே முன்னோடியாய்த் திகழ்வது. நம் முன்னோடிகள் ஆரம்பித்ததை நான் விட்டுவிடச் சொல்லவில்லை. அதில் சிற்சில மாறுதல்கள் செய்யலாமே! பணமும், நகையும் கொடுக்கலாம். ஆனால் அவர்களது தகுதி, சூழ்நிலைக்கு ஏற்றவாறு. எனவே, நகரத்தார் பெருமக்களே, கல்வியும் அறிவும் நிறைந்தவர்களே, நீங்கள் நினைத்தால் பெண்ணின் திருமணத்திற்காகக் கேட்கப்படும் பணத்தை, சீர்வரிசையை இனிச் சிட்டை சிட்டையாக எழுதுவதை நிறுத்தலாம்.

அதனால் நகரத்தார் பெண்கள் வாழ்விலும் ஒளி பிறக்கக்கூடும்.

நகரத்தார் திருமணச் சடங்குகள்

விபரம்

முகூர்த்தக் கால் ஊன்றுதல், கலியாணம் சொல்லுதல், கோவிலில் பாக்கு வைத்தல், கூடி ஆக்கி உண்ணுதல், மனை போடுதல், மாப்பிள்ளைக்கு மிஞ்சி போடுதல், முதல்சீர் வைத்தல், மறுசீர் வைத்தலும் கலியாண வேவும், அரசாணிக்கால் கட்டுதலும் கோலமிடுதலும் தும்புபிடித்தலும், மாற்றுக் கட்டுதல், கழுத்துரு வாங்கப் போதல், தலைச் சீலையில் முடிதல், மாம வேவு, முகூர்த்தம் வைத்தல் அல்லது கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல், பூரம் கழித்தல், மாப்பிள்ளை அழைத்தல், பகவணமும் காப்புக் கட்டுதலும், மாப்பிள்ளை கோவிலுக்குப் போய்வருதல், மாப்பிள்ளை திருப்பூட்டச் செல்லுதல், பெண்ணெடுக்கிக் காட்டுதல், கழுத்துரு - ஆசி வாங்குதல், திருப்பூட்டுதல், இசைபிடிமானம் எழுதுதல், திருப்பூட்டிய சடங்கு, மணவறைச் சடங்கு, சாப்பாடு போடுதல், பணம் எழுதுதல், கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல், மஞ்சள் நீராடுதல், காப்புக் கழற்றிக் கால்மோதிரம் இடுதல், பிள்ளை எடுக்கிக் கொள்ளுதல், பெண் சொல்லிக் கொள்ளுதல், பெண் அழைப்பும் சடங்கும், குலம் வாழும் பிள்ளை எடுத்தல், சீராட்டுக் கொடுத்தலும் பாக்குச் சுருளும், பால் வருஷ வேவு, பொங்கல் வேவு, தும்பு கட்டுதல், பால்பழம் சாப்பிட உறவினர் வீடு சென்று வருதல்.

ஒரு நாட்டிலே மாதர்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறார்ளோ அவ்வளவு தூரம் அந்த நாடு முன்னேற்றமடைந்துள்ளது என்று பொருள். ஒரு நாட்டில் ஆண்கள் எந்த அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பது இதற்கு அளவுகோல் ஆகாது.

- நேருஜி



பார்வதி எழுப்பும் பத்து வினாக்கள்

- வி. பார்வதி வெங்கடாசலம், காரைக்குடி

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவை."

அப்படிப்பட்ட திருமணங்கள் இன்று வியாபாரம் ஆகிவிட்டன.

"இருமனம் கலந்தால் திருமணம்" இரண்டு மனங்கள் ஒன்று சேர்ந்து இன்புற வாழ்க்கை நடத்திப் பேறெல்லாம் (16 செல்வங்கள்) பெறுவதே திருமணம்.

தற்போது நடைபெறும் திருமணங்கள் அனைத்தும் (ஒரு சில தவிர) திருமணங்கள் அல்ல. பண மணங்கள். அதனால் தான் மனப் பொருத்தத்தை விடப் பணப் பொருத்தத்தை அதிகம் (எதிர்) பார்க்கிறார்கள். என்ன விந்தை! பல பேருக்குத் திருமணத்தின் மகத்துவம் புரிவது இல்லை. பையனுக்கோ பெண்ணுக்கோ பணம் இருந்தால் சரி, எவ்வளவு கொடுத்தாலும், வாங்கினாலும் செய்து விடுவோம் என்று எண்ணுகிறார்கள்.

இது பணத்தோடு மட்டும் போவது அல்ல, மற்ற பல விஷயங்களும் உள்ளன.

இருப்பவர் கொடுப்பர். இல்லாதோர் என் செய்வர்? யோசிக்க வேண்டும்.

இதோ திருமணத்தைப் பற்றிப் பத்து வினாக்கள்

பெற்றோர்களே சிந்தித்துப் பாருங்கள்

1. நாம் இறக்கும் வரை எடுத்துப் பயன்படுத்தாத சாமான்கள் ஒரு பர்லாங்கிற்குப் பரப்ப வேண்டுமா?

2. கிரைண்டர் உலகில், மிக்சி உலகில் ஆட்டுக்கல்லும், அம்மியும் வைத்து லாரியில் ஏற்ற கூலிக்கு ஆட்கள் பிடிக்கிறோமே, தேவைதானா?

3. அடுக்கடுக்காக ஆயாள் வீட்டு மெத்தை தலையணையை வைத்து அவைகளைப் பயன்படுத்தாமல் டன்லப் மெத்தைகளை வாங்கிப் பயன்படுத்துகிறோமே, எதற்காக?

பொறுமையில் இமயமும்-நிலமும்தான் பெண்ணுக்கு உவமையாகும்

- வினோபா

4. விருந்துகளில் அறுசுவை உண்டியைக் கொடுத்துவிட்டு ஐஸ்கிரீமும் தேவையா?

5. ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து உறவினர்கள் நண்பர்களுடன் பேச ஆசை ஆசையாக வரும்பொழுது காது கிழிய பாண்ட் கச்சேரி வைக்கிறோமே - இது வேண்டுமா?

6. பெண்ணை எடுக்கிக் காட்டு என்று முறைதலை சிட்டையில் எழுதி எழுத்திக்காட்டாமல் முறைவாங்கிக் கொள்கிறோமே - குற்றமில்லையா?

7. முனை முறியாத முறுக்கு முந்நூறும் படிப்படியாய்ப் பலகாரம் என்ற பெயரில் மனகோலமும் டின் டின்னாக தேவைதானா?

8. செட்டி நாட்டுக் கூடைகளை ஒழித்துக் கட்டிவிட்டு எவர்சில்வர், பிளாஸ்டிக் வாளிகளை வைக்கலாமா?

9. குலம் வாழும் பிள்ளையை ஒவ்வொருவராக எடுக்கிக் கொடுத்துக் குடும்பக் கட்டுப்பாடு செய்துக் கொள்ளலாமா?

10. முறைதலைச் சிட்டையில் மாப்பிள்ளை தாலி கட்டியதற்கு ரூ. 10 என்று ஒரு கூலி முறை உள்ளது. அது என்ன முறைதலை? தாலிகட்டியதற்கு முறை பத்து ரூபாயா?

இது ஒன்றே போதுமல்லவா

இத்தனை முறையும் அநியாயம் என்று சொல்ல?

அயல்நாடுகளில் வாணிபம் செய்த நகரத்தார்கள் அந்நாட்டு அரசியலால் பொருளாதார வீழ்ச்சி அடைந்தபொழுது செட்டி நாட்டரசர் முத்தையாவேள், அ.மு.மு. முருகப்பனார், கருமுத்து தியாகராஜனார் போன்றவர்கள் நகரத்தார் இளைஞர்களை வேலைக்கு அமர்த்திப் பேருதவி புரிந்தார்கள். அதற்கு பிறகு நகரத்தார் பெண்களுக்கு மதுரை வங்கியில் ஓ. சிறுவயல் எல். கிருஷ்ணன் அவர்களும் கீழச்சிவல்பட்டி ராம. முத்தையா அவர்களும் நிறைய வேலை வாய்ப்பு அளித்தார்கள். இன்றைக்குப் பல பெண்கள் திருமணமாகி உயர்ந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் இவ்விருவருமே அடிப்படையான பெருமக்கள். மேலும் பல நகரத்தார் பெருமக்கள் இவர்களைப் போல உதவினால் நம் பெண்கள் வாழ்வில் ''விடியல்'' ஏற்படும்.

- திருமதி. லலிதா நாச்சியப்பன் - ஆராவயல்

பிறந்த இடப் பெருமையையும், புகுந்த இடக் குறையையும் பேசாதிருத்தலே பெண்ணின் பெருமை.

- வினோபா

எவ்வளவு காலங்கள், இந்தக் கொடுமை!

நானும் பல இதழ்களில் மாமியார் சாமான், சீதனம் பற்றி எழுதியுள்ளேன். ஆனால் நாளுக்கு நாள் மாமியார் சாமான் கூடிக்கொண்டே வருகிறதே தவிர குறையவில்லை. பெண் வீட்டார்கள் மாப்பிள்ளை வீட்டார்களால் படு பயங்கரமான படுகுழியில் தள்ளப்படுகின்றார்கள். இன்று வேலையற்ற வேட்டி கட்டிய மாப்பிள்ளைக்குக் கேட்கும் விலை ரூபாய் பல லட்சம். கேட்டால் அவர்கள் ஆண் பிள்ளைகள் என்பார்கள். பெண் வீட்டாரிடமும் பெண்ணுடன் பொன்னையும், பணத்தையும், வீட்டிற்கு வேண்டிய நவீன பொருட்களையும் கேட்கும் இவர்கள் ஆண்பிள்ளைகளா? சுயமாகச் சம்பாதித்து அந்தப் பணத்தில் ரேடியோ, டிவி, கிரைண்டர், மிக்சி போன்ற வீட்டுப் பொருட்கள் வாங்க தைரியமில்லாமல் பெண் வீட்டாரிடமே மேற்கண்டவைகளையும் கேட்கும் இவர்களெல்லாம் ஆண் பிள்ளைகளா? சமீபத்தில் நடந்த திருமணத்தில் ஒரு மாப்பிள்ளை மேற்கண்ட பொருட்களை வாங்கித் தந்தால் தான் பெண்ணை அழைத்துச் செல்வேன் என்று கூறிவிட்டார். பின்பு பெண்ணைப் பெற்றவர்கள் மேற்கண்ட பொருட்களை வாங்கிக் கொடுத்துப் பெண்ணை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் எல்லாம் ஆண்பிள்ளைகளா?

மேலும் பெண்ணைப் பெற்றவர்களில் வசதியற்றவர்கள் மாப்பிள்ளையைப் பெற்றவர்கள் அநியாயமாக மாமியார் சாமான் கேட்பதால் கையில் பணமில்லாமல் ஊர் ஊராக சென்று நம்மவர் பலரிடம் யாசகம் வாங்கி அவற்றையெல்லாம் சேர்த்து மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்கின்றார்கள். அப்படியிருந்தும் மாப்பிள்ளை வீட்டார் திருப்தியடைவது இல்லை. நம்மவரை நம்மவரே யாசகர்கள் ஆக்கிக் கேவலப்படுத்தி விடுகின்றார்கள். இந்த அநீதிக்கு ஒரு எல்லை இல்லையா? உயிர் இயற்கைக்கு விலை கேட்கும் இந்த அநீதியை இறைவன் எத்தனை நாட்கள்தான் பொறுத்துக் கொண்டிருப்பார்?

மனிதரின் கைகள் கட்டப்படும்பொழுது இறைவன் கை கொடுப்பார். மனிதரின் காதுகள் செவிடாகும்போது இறைவன் நீதியின் குரலைக் கேட்கவைப்பார். மனிதர்கள் ஊமையாகும் பொழுது இறைவன் பேச ஆரம்பிப்பார். நமது இனத்தில் நடக்கும் இந்த அநீதியை இறைவன் இனிமேலும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்.

திருந்துங்கள் இல்லையென்றால்

காலம் உங்களுக்கு சரியான தண்டனை கொடுக்கும்.

- இராசகுமாரி செந்தமிழன்

- நகரத்தார் இதழ் - ஆனி 1994

குடும்பத்தில் ஒற்றுமை நிலவ உறுதுணையாக இருப்பதே பெண்ணின் பெருமை.

- வினோபா



மாறுங்கள் மனம் மாறுங்கள்

– பி.எல். விசாலாட்சி, கோட்டையூர்

ஆச்சிமார்களின் தலை சிறந்த பண்புகள் கட்டுச் செட்டாகக் குடித்தனம் நடத்துவது. வீட்டில் எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும், பற்றாக்குறை இருந்தாலும், வெளியில் இருந்து வருபவர்களுக்கும் உறவினர்களுக்கும் பிரச்சினை வெளியே தெரியாதவாறு உபசரித்து அனுப்புவார்கள். வீட்டு விஷயங்களில் சொல்ல வேண்டியதைச் சொல்லி சொல்லக் கூடாததைச் சொல்லாமல் மிக நாகரிகமாகப் பேசுவதில் வல்லவர்கள்.

நகரத்தார் பெண்கள் மேன்மை அடைய வழிகள் : படித்துவிட்டுப் பணிக்கு சென்று பொருளீட்டிக் குடும்பத்துக்கு உதவலாம். ஓரளவு படித்துவிட்டு வீட்டில் இருந்தபடியே கைத்தொழில் செய்யலாம். கணவன் செய்யும் தொழிலில் சென்று உதவலாம்.

நகரத்தார் பெண்கள் தம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது நல்ல பழக்க வழக்கங்கள், பிறரைப் பற்றிக் குறை கூறாமை, தெய்வ நம்பிக்கை, நல்ல ஒழுக்கம், நாணயமாக நடந்து கொள்வது.

நகரத்தார் பெண்கள் அரசியலில் ஈடுபடவேண்டும். வீட்டுச் செலவு கட்டுச் செட்டாக, சிக்கனமாகச் செய்துவிட்டுக் கோவில் திருப்பணிகளுக்கு அதிகம் கொடுத்து உதவும் நல்ல பண்பு உண்டு. அத்துடன் சமூகப் பணிகளிலும் அதிகம் ஈடுபடவேண்டும்.

நம் பெண்கள் அதிக அளவில், அதிக மதிப்பெண் எடுத்து, சிறப்பாக படிக்கிறார்கள். அவர்களை ஊக்குவிப்பது நம் கடமை. நன்கு படித்த பெண்களை மாமியார் சாமான் வாங்காமல் திருமணம் செய்து கொள்ளலாம்.

வேலைக்குப் போகும் பெண்களால் வீட்டுவேலை செய்து குழந்தைகளை முழுமையாகக் கவனிக்க முடியவில்லை. மாமியார், நாத்தனார் என்று வீட்டில் இருப்பவர்கள் குழந்தைகளையும், வீட்டு வேலைகளையும் நன்கு கவனித்து கொள்ள வேண்டும்.

அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும்.

- திரு.வி.க

மருமகளும் மாமியார் நாத்தனாரை நன்கு மதிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நல்லமனதுடனும் சிரித்த முகத்துடனும் குடும்பத்தை சிறப்பாக நடத்தவேண்டும்.

தற்போது திருமணங்கள் பொருளாதார நெருக்கடி, நேரம் இன்மை ஆகிய காரணங்களால் ஒரு நாள் திருமணமாக ஆகிவிட்டன. அதுவும் சிறப்புத்தான். ஆனால் நம் சம்பிரதாயங்களை விட்டு விடாமல் எல்லாச் சடங்குகளும் செய்து திருமணம் செய்ய வேண்டும்.

திருமணம், பிற சடங்குகள் ஆகியவற்றில் காலத்திற்குத் தகுந்தாற்போல் நாமும் நாகரீகமாக மாறவேண்டும்.

சீர்வரிசை தற்காலத்துக்குத் தேவையில்லாதது. வரிசையாக வைத்து அதை வீடுபிடித்துப் போட்டுப் பூட்டி உபயோகமில்லாமல், அது சமயத்தில் திருட்டு போய் வேண்டாத விஷயங்கள் இது. காலத்துக்கு ஏற்ப என்ன தேவையோ அதில் பெண்வீட்டார் அவர்களால் முடிந்ததை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

சீதனம் என்பது பெண்களுக்கும் மாப்பிள்ளைக்கும் ஒரு பாதுகாப்பு. குழந்தை குட்டி பிறந்த பின்னர்தான் அதை எடுத்து செலவு செய்யலாம் என்று பைனான்ஸ் கம்பெனியில் போட்டு மோசம் போகாமல் பெண்ணும் பிள்ளையும் மனமொத்து ழ்டிவெடுத்து அவர்கள் வேண்டுவன வாங்கி கொள்ளலாம்.

மாமியார் சாமான் லட்சக்கணக்கில் வாங்கி நிறையப் புடவைகள் வாங்கிப் பரப்பிப் பெருமைக்குச் செலவு செய்யாமல் பெண் வீட்டாரைக் கசக்கி வாங்காமல் அவர்களால் முடிந்ததைப் பெண்ணுக்குச் செய்யட்டும் என்று விட்டுவிடலாம். மாப்பிள்ளை வீட்டாரால் முடிந்த புடவை வாங்கி மன நிறைவோடு திருமணம் செய்யலாம். அவரவர் செலவை அவரவரே செய்ய வேண்டும்.

சீர்வரிசையில் வருவாய் வராப் பொருளாக 70% முடங்கி கிடக்கிறது. அவரவர் கொடுக்க முடிந்த தொகைக்கு ஏற்ப, டி.வி., பிரிட்ஜ் இது போன்ற உபயோகமான பொருள்கள் வாங்கித் தரலாம். தொழில் தொடங்க முடிந்தால் உதவி செய்யலாம். வீட்டிற்குள் போட்டுப் பூட்டி வைப்பது வீண் விரயம்தானே?

முறைதலைகள் பல இடங்களில் முறையானதல்ல. பொங்கலுக்கு 1 மூட்டை அரிசி, 16 படி, 11 படி இது எல்லாம் தேவையல்ல. என்ன வேண்டுமோ அதை வேண்டிய அளவு வாங்கிக் கொடுக்கலாம். முறுக்கு, வடை, மனகோலம் இந்த வகையெல்லாம் மாறவேண்டும். பெண்கள் மனது வைத்தால் மாறாத விஷயங்களே இல்லை.

இளவயது விதவைக்கு, அவள் விரும்பினால் மறுமணம் செய்து வைக்கலாம். விவாகரத்து - முடிந்தவரை கோர்ட்டுக்குப் போகாமல் நம் இனத்தவரை வைத்துச்

பெண்மை என்னும் இன்பத் தெய்வத்தை ஏந்தி நிற்கும் பெண்ணை வெறும் பெண்ணெனக் கொள்ளாது பெண் தெய்வம் என்று போற்றலாம்.

- திரு.வி.க

சமரசமாகச் சேர்ந்து வாழ ஏற்பாடு செய்யலாம். இருவருக்கும் மனமில்லை என்றால் விவாகரத்துச் செய்வது நல்லது.

முதியோர் இல்லம் : தாய் தந்தையருக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தாலும், பாசத்தோடும், பண்போடும், வளர்க்கிறார்கள். ஆனால் வயதான தாய், தந்தையரை வைத்துக் கொள்ளப் பிள்ளைகளுக்கு ஏன் மனம் வரவில்லை? பிள்ளைகள் மனம் மாறினால் முதியோர் இல்லங்கள் தேவைஇல்லை.

தனிக்குடித்தனத்தில் வீட்டுவேலையில் உதவிக்கு ஆள் இருக்காது. குழந்தைகளைக் கவனிக்கவும் ஆள் இருக்காது. கூட்டுக் குடித்தனமானால் குழந்தை வளர்ப்பு, உடல் நலம் இல்லாத சமயத்தில் உதவி, வீட்டு வேலையில் உதவி, நல்ல பழக்க வழக்கங்கள் வளரும். தனித்திருப்பதை விடக் கூட்டாக இருப்பது சாலச் சிறந்தது.

சுவீகாரம் ஆண்பிள்ளைகளை மட்டும் கூட்டிக் கொள்ளலாம் என்பதைத் தவிர்த்துப் பெண் பிள்ளைகளையும் கூட்டிக் கொள்ளலாம் என்ற பழக்கம் வரவேண்டும்.

குடும்பக்கட்டுப்பாடு : விலைவாசி ஏறிவிட்ட இந்நாளில் 2 பிள்ளைகளோடு குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்வது மிக அவசியம்.

இரண்டாம் தாரம் : 60 வயது ஆண்கள் இரண்டாம் தாரம் செய்து கொள்ளும்போது, 20 வயதுப் பெண்ணுக்கு இரண்டாம் தாரம் செய்து வைப்பது தவறில்லை.

நகரத்தார் சமூகத்தில் தற்போது ஆண்களை விடப் பெண்கள் மிகக் குறைவாக உள்ளனர். இந்த நிலை நீடித்தால் பெண்களுக்கு ஆண்கள் வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து கொள்ளும் காலம் அதிகம் இல்லை. 8ல் இருந்து 10 வருடத்திற்குள் இது நடைமுறைக்கு வந்துவிடும்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பெண்மையின் அன்புச் சின்னமாகும்.

- குகப்ரியை



நம் இனத்தவர்கள் செய்யும் தவறுகள் என்ன?

– பழ. மெய்யம்மை என்ற தங்கம், ஆத்தன்குடி

நம் நகரத்தார் சமூகம் மிகவும் பழமையான பண்புகள் நிறைந்த சமூகம். ஆனால் தற்போதைய நகரத்தார் குழந்தைகள் நிலை என்ன? முதலில் நம்புள்ளிகள் வரவரக் குறைந்து கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டினை மற்ற மதத்தினரை விட நம் சமூகம் மிக நன்றாகக் கடைப்பிடிக்கின்றது. யாருக்கும் ஒரு குழந்தை அல்லது இரு குழந்தைகளுக்கு மேல் இல்லை. சரி அதுவாவது நம் தேச நன்மைக்காக இருக்கட்டும். பிறக்கும் குழந்தைகளையாவது சரியான நகரத்தார் குழந்தைகளாக வளர்க்கிறோமா? இல்லையே!

வெளியூர்களில் / வெளிநாடுகளில் வருமானத்திற்காகவும் படிப்புக்காகவும் வாழ்வதில் தப்பில்லை. ஆனால் வருடத்திற்கு மூன்று , நான்கு முறையாவது ஊருக்கு அழைத்துச் சென்று அங்கு உள்ள நம் வீட்டுப் படைப்பு, கல்யாணப் பழக்க வழக்கங்கள், நம் குலச் சடங்குகள், கோயில் வழிபாடுகள் இவற்றை எல்லாம் கற்றுக் கொடுக்கலாமே; இப்பொழுது நகரத்தில் வாழ்ந்து வரும் குழந்தைகளை விடுமுறை நாட்களில் கூட இங்கு 'ஸம்மர் கிளாஸ்' போன்ற வகுப்புகளில் சேர்த்து விட்டுவிட்டு ஊர்ப் பக்கம் போவதையே தவிர்த்துவிடுகின்றனர் பெற்றோர்கள். படிப்படியாக வீடுகளிலும் நம் பழக்க வழக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றன. ஆகவே கலப்புத் திருமணங்கள் பெருகி வருகின்றன. இந்நிலை இப்படியே நீடித்தால் நம் இனம் இன்னும் சில வருடங்களில் அழியும் அபாயம் காத்திருக்கிறது.

ஆகவே பெற்றோர்களே, நாம் நகரத்தாராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்து இருக்க வேண்டும் என்பதையும் அந்த வட்டதினுள் நாம் இருக்கும் வரையே நமக்கு எல்லாப் பெருமையும் வந்தடையும் என்பதையும் நினைவில் கொண்டு குழந்தைகளுக்குச் சிறு பிராயத்திலேயே நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுத்து நம் குழந்தைகளை நகரத்தார் குழந்தையாகவே வளருங்கள் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு நம் குழந்தைகள் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து, குளித்துவிட்டுக் கோவிலுக்குச் சென்று திருப்புகழ் திருவாசகம்

பெண்மை என்பது என்புதோல் போர்த்த உடல் அன்று. அவ்வுடலினுள்ளேயுள்ள நன்மை, இறைமை, பெண்மை என்பது, அத்தகைய பெண்மை வாழ்க.

- திரு.வி.க

படித்து வீட்டிலும் பெரியவர்களை மதித்துப் பணிவிடை செய்து ஆசிரியருக்கும் பணிவிடை செய்து வளர்ந்தபோது இருந்த ஒழுக்கம், இப்போது இல்லை. எல்லோரும் அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுப்பதால், அவர்கள் யாரையும் மதிப்பதில்லை. எல்லாம் தானே முடிவு செய்யலாம் என நினைத்து ஆயிரம் காலப்பயிரான திருமணத்தைக் கூடத் தானே முடிவு செய்து பின் வருந்துகின்றனர். விவாகரத்தும் பெருகிவிட்டது. இது எல்லாம் தீமைக்கே, வெளிநாட்டவர்கள், பொதுவாக இந்தியர்களின்/நம் இனத்தவர்களின் ஒரு கணவன்/ஒரு மனைவி பழக்கத்தை மெச்சி வியக்கின்றனர். இவ்வாறு இருக்கும் நாம் மாறுவதா? கூட்டுக்குடும்பமாக இருந்தாலும் பெரியவர்கள் ஏதேனும் குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுக்க வாய்ப்புண்டு - கூட்டுக்குடும்பமே சிறந்தது. இன்றைய பெற்றோர்கள் குழந்தைகளை ஓர் அறை என்னும் கூட்டிற்குள் அடைத்து, அவர்களுக்கு நன்மை, தீமையைப் பகுத்தறியத் தெரியாமல் வளர்க்கின்றனர். அவர்கள் வளர்ந்து தவறானமுடிவைத் தானே எடுக்கிறார்கள். ஆகவே இளம் பெற்றோர்களே, நம் இனிய சந்ததிகளை நம்முடனேயே நீண்ட நேரம் வைத்திருந்து நம் பழக்க வழக்கங்கள், குலம் கோத்திரம் பெருமைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறிப் பழக்கி நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்துப் பள்ளி செல்லும் நேரம் போக டி.வி.யின் முன்னே அமரவைக்காமல் வளர்த்தால் அவை மனிதருள் மாணிக்கங்களாய் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. இனியேனும் தவறுகளைத் திருத்திக்கொண்டு நம் சமூகத்தினர் மேலும் மேலும் சிறப்புற வாழ்ந்து காட்டுவோம் என்னும் உறுதியை எடுத்துக் கொள்வோமாக!

ஆச்சிமார் பேச்சில் அடையாளம் காட்டும் சொற்கள்

ஆச்சிமார்கள் பேச்சுக்களில் அன்றாடம் அதிகம் புழங்கும் செட்டிநாட்டுச் சொற்கள் பிறர் பொருள்கள் அறிய முடியாத சொற்களாக உள்ளன. (எ-டு) கொட்டான், கடகம், போகணி, மரவை, குந்தாணி, நூலாம்படை, உருவாஞ்சுருக்கு, குத்தமில்லை, எதவா, ஒள்ளத்தி, கூறுகெட்டவன், தோது, எடிக்கிக்கிட்டு, சத்தவடம், மருக்கோளி, வரளி, வெரசா, படுத்தடி, ஆத்தி.

பெண்களின் அன்பினால் அறங்கள் செழித்தன; கற்பினால் மும்மாரி பெய்தது.

- கம்பர்



இதோ சத்தான சில தகவல்கள்

ச. மெய்யம்மை M.A., M.Phil.,
பேராசிரியை, இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

ஒவ்வொரு குழந்தைக்கும் உணவும் உணர்வும் தாயினால் ஊட்டப்படுகின்றன. உடலுக்கு உணவு; உள்ளத்துக்கு உணர்வு. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் எல்லாவிதமான உணவும் சரிவிகித அளவில் குழந்தைக்குக் கிடைக்குமாறு தாய்மார்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த உண்மையை,

''ஓரெட்டில் ஊட்டாத உணவும்
ஈரெட்டில் பயிலாத கல்வியும்'' பயனில்லை

என்பதாக ஒரு சாஸ்திரக் கருத்துத் தெளிவுபடுத்துகிறது. மேலும், ''தந்தையொடு கல்வி போம், பெற்ற தாயோடு எல்லாம் போம்'' என்ற ஆன்றோர் மொழியும் குழந்தை வளர்ப்புக்கான தாயின் தேவையைக் கோடிட்டுக் காட்டுகிறது.

'இன்றைய சிறார், நாளைய மனிதர்' என்பதால் சிறுபிராயத்திலேயே நல்ல சத்துள்ள உணவுகளைத் தந்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவது தாய்மார்களின் கையில்தான் உள்ளது. உணவைத் தயாரித்துக் கொடுப்பதைப் போலவே உணவை ஊட்டுவதிலும் தாய்மார்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.' ஆக்கப் பொறுத்தாலும் ஆறப்பொறு' ; 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' போன்ற பழமொழிகள் உணவை உண்பிக்கச் செய்யும் முறையைப் போதிப்பதால், சரியான உணவுப்பழக்கம் மூலம் நீண்ட ஆயுளைப் பெறமுடியும் எனத் தெரிகிறது.

பொதுவாக உணவு என்றாலே செட்டிநாட்டு உணவுவகைகள் தாம் அனைவர் மனதிலும் நினைவுக்கு வரும். அந்த அளவிற்கு உணவின் தரமும் சுவையும் போற்றப்படுகின்றன. இந்தச் சிறப்பைக் கட்டிக்காக்கும் இனம் நம் நகரத்தார் இனமாகும். இது சிறுபான்மைச் சமூகமாக இருப்பதால் நம் இனத்தவரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டி, நகரத்தார் மலர் போன்ற நம் சமூக இதழ்களின் தலையங்கங்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொண்டு மக்கள் தொகையைக்

கணவனிலும் தெய்வம் வேறில்லை என எண்ணி முன்னோர் கற்பித்து வந்த வழியில் நின்று ஒழுகுவது கற்பாகும்.

- பண்டிதமணி

கூட்டவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளன. பெரும்பாலான குடும்பங்களில் இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்பதே கொள்கையாக இருக்கிறது. இந்த இரண்டு போதும் என்றமைவது அவர்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற கருத்தினால் தான். அளவான குடும்பம் வளமான வாழ்வு எனக் குழந்தைப் பேற்றிலே கட்டுப்பாடாக இருப்பது போல் உணவுப் பழக்கத்திலும் கவனமாக அவர்களை வளர்க்க வேண்டும் என்ற கருத்தினால் தான் என்பதும் உண்மையேயாகும்.

தஞ்சாவூர்த் தாட்டிலை விரித்து அறுசுவை உண்டி பரிமாறி விருந்து உபசரிக்கும் நாம் நமது வருமானத்துக்குத் தக, பருவகாலத்தில் கிடைக்கின்ற எல்லாவிதமான சத்துக்களும் அடங்கிய உணவுவகைகளை அன்றாடம் சேர்த்துக் கொள்ளவேண்டும், இதைத் தள்ளு, அதைக் கொள்ளு என்பதாக இல்லாமல்,

''அற்றால் அளவறிந்து உண்க'' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தேவையறிந்து உண்டால் திடகாத்திரமும் சீரான மனவளர்ச்சியும் பெறமுடியும். இதனைத் தான் ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்றார் திருமூலர். ''வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு'' என்ற பழமொழி உடம்பைச் சீராக வைத்துக் கொள்ளுவதற்காக எழுந்த அறிவுரைப் பழமொழியாகும்.

நல்ல வசதிமிக்க குடும்பத்தில் மூன்று குழந்தைகள்! மூவரும் 7, 5, 3ஆம் வகுப்புகளில் பயின்று வருகிறார்கள். மூவரும் கண்ணாடி அணிந்து இருக்கிறார்கள். கண்ணாடியின்றிப் படிக்க முடியாது. பார்வைக்குறைபாடு! எந்த ஒரு பொருளையும் பார்த்து அடையாளம் காணமுடியாது. எழுபது எண்பது வயதாகியும், கண்ணாடி அணியாது கணக்கெழுதும் நம் சமூகத்து ஐயாக்களும், அப்பச்சியார்களும் ஊசியில் நூலைக் கோக்கின்றனர். ஆனால் இன்றைய வளரும் இளையதலைமுறையோ கண்ணாடி அணியாமல் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னர் நிறைந்த நேரம் உட்கார்ந்திருக்கும் நிலையில் கண்பார்வை கெடுகிறது என்றாலும் தாய் சூலுற்றிருந்த காலத்தில் சத்தான உணவு வகைகளை உண்ணாததும் ஒரு காரணம். கருவுள்ளபோது தாய் உட்கொள்ளும் உணவு தாய்க்கு மட்டுமின்றி கருவுக்கும் தான் என்ற கவனம் இல்லையானால் அது குழந்தையைப் பாதித்துவிடும். அதன் தொடர்ச்சியாகப் பிறந்த குழந்தை வளர்கிறபோதும் தக்க கவனம் செலுத்தவில்லையானால் குழந்தையின் உடலும் உள்ளமும் வளர்ச்சி குன்றிவிடும்.

இன்று நம் நகரத்தார் இளம் பெண்கள் நிறையப்படித்திருக்கிறார்கள். படிப்புக் கேற்ற பணிகளிலும் இருக்கிறார்கள். அதனால் பணிநிமித்தம் பரபரப்பாக இருக்கின்றனர்; குழந்தை வளர்ப்பில் கவனம் காட்டுவதில்லை என்றே கூறலாம்.

கற்பு மிகுந்த கன்னி தெய்வத்தினும் மேலான வழிபடு கடவுள்.

- அம்மள்ளனார்

வளர்ந்துவரும் நாகரிக உலகில் இக்குறைக்கான தீர்வைச் சிந்திக்கும் காலம் நெருங்கிவிட்டது என்றே கூறவேண்டும். அதாவது கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையை நாம் மேற்கொள்ளவேண்டும். கூட்டுக் குடும்பத்தில் நல்ல ஆயாவோ, அப்பத்தாவோ குழந்தைக்குக் கிடைக்க வாய்ப்புண்டு. அவர்களும் பணியிலிருப்பவர்களாக இருந்தால் கூட்டுக் குடும்ப உணவில் யாருடைய அனுசரணையாவது குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். இத்தகைய உதவிகள் குழந்தையை நன்முறையில் வளர்க்க வாய்ப்பாக இருக்கும்.

நம் நகரத்தார் இனத்தில் தாய் தந்தையரையே (வயது முதிர்ந்த காலத்தில்) சுமையாக நினைப்பவர்கள் இருக்கும்போது உறவினர்களை எப்படி ஏற்றுக் கொள்வர் என எண்ணலாம். உறவினரின் அரவணைப்பு நமக்குப் பயன்படுவதோடு அவர்களுக்கும் நாம் எதாவது ஒரு வகையில் உதவலாமன்றோ? இவ்வாறாகச் சுற்றம் தழுவி வாழ்ந்தால் குழந்தைகள் மனதில் 'நப்போல் வளை' என்ற ஆத்திசூடியின் பாலபாடவரி ஆழப்பதிந்து வேரோடும்போது சுற்றிச்சுற்றி வந்து சுற்றம் தழுவுதலும், ஓர் அறம் என்ற உணர்வு தன்னையறியாமலேயே குழந்தைக்கு வந்துவிடும் இதனால் ஒரு தாய் சின்னஞ்சிறிய வயதிலேயே கொண்டும், கொடுத்தும் உறவுமுறையைச் சுட்டிக்காட்டி வளர்க்கின்ற வாழ்க்கை முறையைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பித்துக் கொடுக்கிறாள்.

ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் மகளைப் பெண்பார்க்க வந்தவர்களிடம் பெண்ணின் தந்தையார் ''எனது ஒரு சம்பாத்தியத்தில் என்னுடைய பிள்ளைகளை நல்லமுறையில் படிக்க வைத்திருக்கிறேன் நல்ல ஆரோக்கியத்துடன் வளர்த்திருக்கிறேன். என்னால் ஒரளவுதான் வரதட்சணையும் தர இயலும்'' என மனந்திறந்து பேசினார்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதற்கிணங்க அந்தப் பெண்ணும் நல்ல ஆரோக்கியத்துடனும் மிக அழகாகவும் இருந்தாள். மாப்பிள்ளையின் தாயார் முறை தலையிலும், பெரும் பணத்திலும் குறியாக இருந்ததால் ஏதோ காரணம் கூறி அப்பெண்ணை மருமகளாக்கிக் கொள்ள இசையவில்லை. பெண்ணின் தந்தையார் ''என்மகளை நல்ல ஆரோக்கியத்துடன் வளர்த்திருக்கிறேன்'' என்று கூறிய பெருமித உணர்வில் நம்பிக்கை வைக்கத் தயங்குகிறது இந்த உலகம். பணத்தால் சீரழிந்து நிம்மதியற்று வாழ்வதை விட 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற உணர்வு நம்மவர்களுக்கு வந்துவிட்டால் நம் சமூகம் முன்னேறுமல்லவா?

இத்தகு நல் உணர்வுகள் எல்லாம் நம் சிறியவர்கள் மனதில் பதியும் அளவிற்கு அவர்களை இளம் வயதிலிருந்தே இரக்க சிந்தனையுடையவர்களாக வளர்க்க வேண்டும். பெரியோரை மதித்தல், சுற்றம் பேணல், பழமை போற்றல் போன்ற நல்ல பண்புகளைப் பாலபாடமாகக் கற்பிக்க வேண்டியது பெற்றோர்க்குக் கடமை.

கல்வி இருபாலார்க்கும் பொது. ஆண் கல்வி கற்பது அறிவு பெற; பெண் கல்வி பெறுவது அது வாழ்க்கைச் செம்மையுற.

\- வினோபா

பெரும்பாலும் பன்னிரண்டாம் வகுப்புவரை பிள்ளைகள் பெற்றோர்களிடம் இருந்து தான் வளர்கிறார்கள். அந்தப் பதினாறு பதினேழு வயதில் நல்ல அடித்தளத்தை அவர்கள் மனதில் பதித்துவிட்டால் அவர்கள் எதிர்காலத்தில் நெறிபிறழாது வாழ்வர் என்பது திண்ணம்! 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதன்றோ'? எனவே இளமையில் கட்டுப்பாடாக வளர்க்கப் பெறாத சிலர் பின்னாளில் பெற்றோர்க்கும் மற்றவர்க்கும் தீங்கிழைப்பவராக மாறிப் பழிக்கு ஆளாகின்றனர். திருமணமான சில திங்களிலேயே மணவிலக்குப் பெற நினைக்கும் ஆடவரும் கன்னியரும் அதிகமாகி வருகிற காலமிது. காரணம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமை, ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்காமை போன்ற தன்முனைப்பு மனப்பான்மை இருப்பதேயாகும். பூச்சி கொல்லி மருந்தடிக்காத பயிர்களாய் வளரும் இளைஞரைப் பெற்றோர் கண்டித்தும், கவனமாகவும் வளர்க்காமையேயாகும்.

எனவே பர்மாவில் வாழ்ந்தாலும் வீழ்ந்துபடாத, தொன்றுதொட்டு 'மன்னர் பின்னார்' என்ற பெருமையில் வாழும் நம் நகரத்தார் சமூகம் நல்ல எடுத்துக்காட்டுச் சமூகமாக மீட்டுருவாக்கம் பெற நம் குழந்தைகளை நல்ல உணவுப் பழக்கவழக்கத்துடன் நல்ல உணர்வுகளையும் ஊட்டி வளர்ப்போமாக'

'செட்டிப்பிள்ளை கெட்டிப்பிள்ளை' என்ற பெயரைத் தக்க வைத்துக் கொள்ளும் சாதனமும் இதுவே எனலாம்.



பெண் கல்வி பெற்றால்தான் அந்தக் குடும்பம் மாண்புறும்.

- மு.வ.

உலகம் மாறும் உள்ளங்கள் மாறலாமா?



சுப. ஆனந்தவல்லி, குழிபிறை

இன்றைய நவநாகரீக உலகில் எதிலும் வேகம், எல்லாவற்றிலும் அவசரம் என்று எல்லாவற்றிலும் மாறிவரும் நிலையில், நமது நகரத்தார் பண்பாடு, பெருமை, கட்டுக்கோப்புக்கள் இன்றும் போற்றப்படுகிறதென்றால், நகரத்தார் பெருமக்களின் பணிவான அன்பு, பண்பு, அளவோடு நயமாக, கனிவாகப் பேசுதல், பழகு முறைகள், அணுகு முறைகள், முரட்டுத்தனமின்மை போன்ற நற்குணங்களினால் தான் என்று கூறினால் அது புகழ்ச்சியான வார்த்தையெனப் புகல முடியாது. நமது குலத்தின் தனித்தன்மை, வாரிசு வாரியாகக் காக்கப்படுகிறது; போற்றப்படுகிறது. அந்த நற்பண்புகளுக்கு இழுக்குச் சேர்க்கும் இன்றைய இள வாரிசுப் பெண்களின் சமீபத்திய வாழ்க்கை முறைகளை நோக்குங்கால் மனம் வருந்தக்கூடியதாகவிருக்கிறது. இதுபற்றிய எனது கருத்துக்களையும், ஆய்வுகளையும் பகிர்ந்து கொள்ள முனைகிறேன்.

1. **விதவை மறுமணம்**

   40 வயதிற்குட்பட்ட பெண்கள், வயதிற்கு வந்த குழந்தைகள் இல்லாதவர்கள், நமது நகரத்தார் சமூகத்திற்குள்ளேயே மனைவியை இழந்தவர்களை மறுமணம் செய்து கொள்ளுவதில் தவறில்லை. வயதான விதவைகள், வயதிற்கு வந்த குழந்தைகள் உள்ளவர்கள் மறுமணம் செய்து கொள்ளுவதென்பது ஏற்புடையதல்ல.

2. **விவாகரத்து**

   இது இன்றைய நவநாகரீக உலகில் வியாபாரத்தில் வேண்டாத பொருளைத் திருப்பிக்கொடுப்பது போல் அதிகரித்து வருவது கவலைக்குரியது. பெண்கள் எவ்வளவுதான் கல்வி, தொழில் மற்ற வழிகளில் தேர்ச்சி பெற்றுத் திறம்பட்டவர்களாகவிருந்தாலும், நமது பண்பாடு, குலப் பெருமை காக்கப்படல்வேண்டும். அதிவேகம் அதிக ஆபத்து. சில குற்றம் குறைகள்

ஆண் படிக்கவில்லையானால் அவனுக்கு மட்டுமே இழப்பு. பெண் கல்வி பெறவில்லை என்றால் உலகுக்கே இழப்பு.

- சுத்தானந்தபாரதி

இருப்பினும், படித்த பண்புள்ள பெண்கள் அவற்றை களைந்து ஒருமனத் தம்பதிகளாய் வாழ முற்பட வேண்டுமே தவிர விவாகரத்து வரை போகக்கூடாது. அது நமது நகரத்தார் பரம்பரைப் பண்புகளையும், மரபுகளையும், குலப் பெருமையையும் கொச்சைப்படுத்திவிடும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, அனுசரித்துப் போகும் வழிவகைகளைக் கடைப்பிடித்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டைக் காத்து, எய்ட்ஸ் நோய் வருவதை தடுக்கும் முறையிலும் வாழ வேண்டும். இப்பொழுது மேலை நாடுகளில் கூட இந்த தத்துவத்தைச் சாலச் சிறந்தது என்று கூறிப் போற்றி, அவர்களும் கூட கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆகையால் நமது இளைய தலைமுறையினர் விவாகரத்தைத் தவிர்க்க வேண்டியது மிக மிக அவசியம்.

3. முதியோர் இல்லம்

இந்த விசயத்தில் முற்றிலும் மாறுபட்ட கருத்து நிலவி வருகிறது. நாம் சிறு பிள்ளைகளாக இருக்கும் போது நமது பெற்றோர் நம்மைத் தாலாட்டி, பாராட்டி வளர்க்க எவ்வளவு முயற்சிகள் எடுத்து வளர்த்துவிட்டிருப்பார்கள்? கூடவே கட்டித் திரிந்து வளர்த்து, படிக்க வைத்து, திருமணங்கள் செய்து வைத்து வாழ வைத்த தெய்வங்களை, அவர்களது தள்ளாத வயதில் முதியோர் இல்லங்களில், சிறிதும் ஆதரவற்ற முறையில் சேர்க்க முயற்சிப்பது கொடுமையிலும் கொடுமை! வயதான தகப்பனாருக்கு மகன் திருவோட்டிலே உணவளித்து வந்த பொழுது அவரின் மகன் அந்தத் திருவோட்டை எடுத்து ஒளித்து வைக்க, தகப்பனார் கேட்ட பொழுது உனது முதிய வயதிலே உனக்கு நான் உணவளிக்க அந்தத் திருவோடு வேண்டுமே அதற்காக எடுத்து வைத்திருக்கிறேன் என்று மகன் சொன்ன கதை போல நமது நகரத்தார் வரலாற்றுக் கதைகள் அதிகமிருக்கின்றன. வயதானவர்களும் மற்றவர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்து, முதியோர்களைத் தம்முடன் வைத்துக் கொள்ளுவதுதான் சிறந்த வழி! நமது பிள்ளைகளுக்கும் அவர்கள் வழிகாட்டியாகவும், நமக்குப் பல வழிகளில் உதவியாகவும் இருப்பார்கள். பிள்ளைகள் துஷ்டனாக விருந்தாலும் பெற்றோர்கள் அவர்களை பேணிக்காத்து வளர்த்துவிடுவதில்லையா? அது போல் அவர்களால் சிறிது துன்பங்கள் ஏற்பட்டாலும், அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களைப் பேணிக்காப்பாற்றுவதுதான் சாலச்சிறந்தது. முதியோர் இல்லங்களில் சேர்ப்பது நமது பண்பாட்டிற்கு உகந்தது அல்ல.

4. தனிக்குடித்தனம் - கூட்டுக் குடித்தனம்

விவாகம் நடந்து, பிள்ளைகள் வளர்ந்து 10 வயதிற்கு மேற்பட்ட பிறகு

ஒரு பெண்ணிற்குக் கூந்தல் அழகு பெரிதல்ல; ஆடையழகு ஓர் அணியல்ல; மேனிக்கழகு செய்யும் மஞ்சள் குளிப்பதும் அழகல்ல. ஆனால் தான் நானிலத்தின் நங்கை என்பதற்கு அவள் பெற்ற கல்வி அழகே அழகாகும்.

- நாலடியார்

தனிக்குடித்தனம் போவதுதான் சாலச் சிறந்தது. ஆரம்பத்தில் குழந்தைகளை வளர்க்கும் சிரமங்களுக்கு மாமியார் நாத்தனார் உதவியாக இருப்பார்கள். பல குழந்தைகள் பிறந்தாலும் வளர்ப்பதற்குச் சிரமங்கள் தெரியாது. இப்பொழுது இரண்டு குழந்தைகளை வளர்ப்பதற்கே ரொம்பச் சிரமப்படுகிறார்கள். வேலைக்கு ஆளும் கிடைப்பதில்லை. நமது சமூகம் சிறுபான்மைச் சமூகம்! நமது சமூகம் வளரப் பல குழந்தைகள் இருக்க வேண்டியது அவசியம். கச்சேரிகளில் தனி ஆவர்த்தனம் செய்வது போல், தனிக்குடித்தனம் ஆரம்பத்தில் சந்தோசமாகவிருந்தாலும், கச்சேரியில் கடைசியில் எல்லோரும் ரசிக்கும்படியாக எல்லோரும் சேர்ந்து வாசிக்கும் பொழுது ஏற்படும் ஆத்ம திருப்தி போல ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து சேர்ந்து வாழும் குடும்பம், பல்கலைக் கழகம்! ஆரம்பத்தில் மகன், மருமகள், பேரக் குழந்தைகளுக்குப் பெரியவர்கள் பெரும் உதவியாகவிருப்பார்கள், பிறகு முதியவர்களுக்குச் சிறியவர்கள் ஊன்றுகோலாகவிருப்பார்கள். ஆகவே தனிக்குடித்தனத்தை விட கூட்டுக் குடும்பமே சாலச் சிறந்தது.

5. **சுவீகாரம் - குடும்பக் கட்டுப்பாடு**

சுவீகாரம் கூட்டுவது நமது நகரத்தார் குலத்தில்தான் சிறப்பான முறையில் பல தலைமுறையாக நடந்து வருகிறது. ஒரே கோவில் பிரிவில் சுவீகாரம் எடுத்து வளர்ப்பதால் உண்மையிலேயே அண்ணன் தம்பி உறவு ஏற்பட்டு விடுகிறது. அதுவும் முன்பு 10 வயதிற்குள் குழந்தைகளை சுவீகாரம் எடுத்து அவர்கள் வீட்டுப் பழக்க வழக்கங்களுக்குப் பழக்கப்படுத்திப் பாசத்தை வளர்த்துவிட்டுவிடுவார்கள். குழந்தைகளும் தாய் தந்தையருடன் மனம் ஒன்றிப் பழகிவிடுகிறார்கள். இப்பொழுது இரண்டு குழந்தைகளுக்கு மேல் வேண்டாமென்கிறார்கள். அது தவறு. குழந்தை இல்லாதவர்களுக்கு தமது சமூகத்திற்குள்ளேயே சுவீகாரம் கூட்ட, நமது குலம் பெருக, வளர, சிறுபான்மைச் சமூகம் வளர இளைய தலைமுறையினர் குடும்பக்கட்டுப்பாட்டை தவிர்த்துக் குறைந்தது 4 குழந்தைகளாவது ஈன்றெடுத்து நமது சமூகம் வளர ஒத்துழைக்க வேண்டியது தலையாய கடமை! நமது குலம் தழைக்கக் குடும்பக் கட்டுப்பாடு செய்யாமல் மூன்று ஆண்டு கால இடைவெளிக்கு ஒரு குழந்தை வீதம் ஈன்றெடுத்துக் குலம் தழைக்கச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

6. **இரண்டாம் தாரம்**

ஒரு குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட நல்ல குணமுள்ள ஆண்கள் இரண்டாம்தாரமாகக் கலியாணம் செய்து கொள்ளுவது தவறில்லை. முதல் மனைவிக்கு குழந்தைகள் இருப்பின், அவற்றை நாம் ஈன்ற குழந்தையாக கருதி

புதுமணத் தம்பதிகள் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது எது என்றால் "எதற்காக மணம் செய்து கொண்டிருக்கிறோம்" என்பதுதான்.

- டேவிட் ஹியூம்

வளர்த்து வந்தால் குடும்பத்தில் பிரச்சினைகள் தலை தூக்காது. அமைதி நிலவிக் குடும்பம் சந்தோசமாக வாழ வழியுண்டு.

எல்லாவற்றிற்கும் முக்கியமானது பெண்கள் மனது தூய்மையானதாகவும், பொறுமையானதாகவும் இருந்து பெருமை சேர்க்கும் வகையில் அமைய வேண்டும் பெண்கள் நமது நகரத்தார்களின் பெருமையையும், புகழையும், தனித் தன்மையையும் பேணிக்காக்க பொறுமையெனும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டுமென்று அன்புடன் விழைகிறேன்.

சென்ற முறை நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற நம் பெண்மணிகள்

திருமதி உண்ணாமலை சிதம்பரம் - காரைக்குடி நகர சபைத் தலைவர்

திருமதி உமையாள் ஆச்சி - RS மங்கலம் ஒன்றியக் கவுன்சிலர்

திருமதி மீனாட்சி ஆச்சி - வலையபட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர்

திருமதி சித உமையாள் ஆச்சி - பள்ளத்தூர் பேரூராட்சி ஒன்றியத் தலைவர்

திருமதி எல். உமையாள் ஆச்சி - நாட்டரசன் கோட்டை ஊராட்சித் தலைவர்

திருமதி கே. எல். லெட்சுமி ஆச்சி - கண்டனூர் ஊராட்சித் தலைவர்

திருமதி ஆதி. கண்ணாத்தாள் ஆச்சி - வெள்ளிகட்டி ஊராட்சித் தலைவர்

திருமதி அழ. அன்புக்கிளி ஆச்சி - சிறுவயல் ஊராட்சித் தலைவர்

திருமதி மங்களம் கதிரேசன் - தஞ்சாவூர் நகராட்சி 38வது வார்டு உறுப்பினர்

இம்முறை ஓ. சிறுவயல், கானாடு காத்தான், பொன்னமராவதி, பல்லாவரம் முதலிய ஊர்களில் நகரத்தார் பெண்கள் வெற்றி பெற்றுள்ளார்கள்.

எப்படியிருந்தாலும் கல்யாணம் செய்துகொள். நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்ச்சியாய் இருப்பாய். மோசமான மனைவி கிடைத்தால் ஞானியாவாய்.

- சாக்ரடீஸ்



செட்டிநாட்டுப் பெண்களின் பொருத்தமற்ற திருமணங்கள்

- சந்திரா அழகப்பன், எம்.ஏ., குழிபிறை

(உண்மை நிகழ்ச்சிகள் - நாகரிகம் கருதிப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

'பழ' வுக்கு வயது 64. இரண்டு புதல்விகள். மூன்று புதல்வர்கள். அனைவருக்கும் திருமணம் செய்துவிட்டுத் தன் அன்பு மனைவியோடு மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருந்தார். திடீரென ஒரு நாள் பழ.வின் மனைவி இறந்து விட்டார். பழ.வுக்கு பெரிய அதிர்ச்சி. அவரது மனைவியின் உடலை அடக்கம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. மனைவி அணிந்திருந்த நகைகளையெல்லாம் கழற்றிப் பழ.விடம் கொடுத்தார்கள். அந்த நகைகளை எல்லாம் பார்த்துப் பார்த்துச் சின்னக் குழந்தைபோல பழ. விம்மி விம்மி அழுதார். அந்த சோகச் சூழலிலும் எனக்குச் சிறிது மகிழ்ச்சி. பழ. தனது மனைவி மீது எவ்வளவு பிரியத்தோடு வாழ்ந்திருக்கிறார். மனைவியின் நகைகளைப் பார்த்ததும் கண்ணீர் ஊற்றெனப் பெருகி வருகிறதே! பழ.வின் அன்புக் கண்ணீரைப் பார்த்த எனக்கும் கண்ணீர் வந்தது.

இரண்டாண்டுகள் உருண்டோடின. பழ.வின் நெருங்கிய உறவினர் ஒருவரைப் பார்த்தேன். பேச்சுவாக்கில் ''எப்படி இருக்கிறார் பழ.?'' என்று கேட்டேன். ''பழ. இரண்டாம் திருமணம் செய்து கொண்டு விட்டார். இரண்டாம் மனைவி மூலம் அவருக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது,'' என்றார் அந்த உறவினர். இதைக் கேட்ட எனக்கு அதிர்ச்சியும் வியப்பும் ஏற்பட்டது. 64 வயதில் பழ. திருமணம் செய்து கொண்டது சரியா? நியாயமா? தர்மமா? என்று எனது உள்ளத்தில் கேள்விகள் எழுந்தன.

பழ.வின் நண்பர் சுப. அந்த சுப.வுக்கு வயது 68. அவரது பேத்திக்குத் திருமணம் ஆகி அந்தப் பேத்தியின் குழந்தைகள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். சுப.வின் மனைவி இறந்து விட்டார். சுப.விடம் துக்கம் விசாரிக்கப் பழ. வந்தார். அப்போது பழ. சுப.விடம் சொன்னார். ''அண்ணே இரண்டாவது திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்களும் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளலாமே!''. பழ.வின் பேச்சைக் கேட்டுச் சுப.வும் இரண்டாம் திருமணம் செய்து

ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையிலே பசுமையான தோட்டங்களைப் பார்க்கலாம். அவளுடைய தூய்மையான உள்ளத்திலே ஞான நூல்களை எல்லாம் காணலாம்.

- கௌவி

கொள்வதாக முடிவு செய்தார். அந்த முடிவை அவரது புதல்வர்களும், புதல்விகளும் எதிர்த்தனர். வேலைக்காரர் ஒருவரை வைத்துக் கொண்டு சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாம் என்று சுப.வின் உறவினர்கள் சொன்ன அறிவுரையை அவர் ஏற்க மறுத்துவிட்டார். ''ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அவள் எனக்கு வயதான காலத்தில் துணையாக இருப்பாள். அவளுக்குச் சாப்பாடும் உடையும் கொடுத்தால் போதுமானது'' என்று வேதாந்தம் பேசிவிட்டு முதல் மனைவி இறந்த 40 நாட்களில் சுப. இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். 40 ஆண்டுகள் முதல் மனைவியோடு இல்லறம் நடத்திய சுப. 40 நாட்கள் கூட அந்த மனைவியின் நினைவோடு இருக்கவில்லை. திருமணத்தின் போது சுப.வுக்கு வயது 68. அவர் மணந்து கொண்ட பெண்ணுக்கு வயது 30. இத் திருமணத்திற்குச் சுப. எந்த உறவினரையும் அழைக்கவில்லை. ஒரே ஒரு பங்காளியை மட்டும் அழைத்துக் கொண்டு போய் ஒரு கோயிலில் திருமணத்தை முடித்துவிட்டு அதே நாளில் திருமணத்தைப் பதிவு செய்து விட்டார். சுப.வுக்கு இரண்டாவது மனைவி மூலம் ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. இதைப் பார்த்தும் மீண்டும் ஒரு கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. 60 வயதைக் கடந்தவர்கள் இரண்டாம் திருமணம் செய்து கொள்வது சரியா?

பழ.வைப் பார்த்து சுப. இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். சுப.வின் ஆலோசனையில் பேரில் அவரது உறவினர் சித. இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். சித. இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் போது அவருக்கு வயது 61. திருமணமான ஒரே வருடத்தில் சித. இறந்துவிட்டார். அவரது மனைவி இளம் வயதில் விதவை ஆகிவிட்டார்.

பழ., சுப., சித.வைப் போன்று பல பேர் இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறார்கள். ''கிழவனைத் தூக்கி மனையில் வைக்கலாமா?'' என்ற பழமொழி இவர்களைப் பார்த்துத் தான் ஏற்பட்டிருக்குமோ?

நகரத்தார் இல்லங்களில் வறுமை காரணமாக வரதட்சணை கொடுக்க இயலாத நிலையில் சில பெண்கள் திருமணம் ஆகாமல் இருக்கின்றனர். அவர்களின் வறுமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சில கிழவர்கள் ''புதுமாப்பிள்ளை'' ஆகிக் கொண்டிருக்கிறார்கள். பெற்றோர்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்று நகரத்தார் இனப் பெண்கள் பொறுத்தமில்லாத இத் திருமணங்களுக்கு ஒப்புக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் மூல காரணம் என்ன? வரதட்சணை என்ற கொடுமை தானே!

பொருத்தமில்லாத இந்தத் திருமணங்களைத் தடுத்து நிறுத்த என்ன செய்ய வேண்டும்?

மனைவிகள் வாலிபர்களுக்கு எஜமானிகள், மத்திய வயதினருக்குத் துணைவிகள், கிழவர்களுக்குச் செவிலித் தாய்மார்கள்.

- கோல்மன்

1. நகரத்தார் இன இளைஞர்கள் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பண்பு, குடிப்பிறப்பு ஆகியவற்றைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள முன்வரவேண்டும்.

2. முதல் மனைவியை இழந்த 50 வயதைத் தாண்டிய நகரத்தார் இன ஆண்கள் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. எஞ்சிய காலத்தைக் கடவுள் வழிபாடு, பொதுத் தொண்டு ஆகியவற்றில் செலவிட வேண்டும். மேலும் அவர்கள் தங்களது மகள், மகன் வீட்டில் தங்கி அவர்களுக்கு குடும்பப் பணியிலும் தொழில் துறையிலும் உதவியாக இருக்க வேண்டும்.

வரதட்சணை என்ற கொடுமையால் மண வாழ்வு கிடைக்கப் பெறாத நம் நகரத்தார் இனப் பெண்கள் சிந்தும் கண்ணீர் நம்மவர்களின் செல்வத்தைத் தேய்த்து விடும். ஆகவே நகரத்தார் இனத்தைச் சார்ந்த நாம் ஒவ்வொருவரும் நம் இனப் பெண்களுக்கு உரிய காலத்தில் பொருத்தமான திருமணம் செய்து வைக்க உதவி செய்ய வேண்டும். மணி விழாக் கொண்டாடும் நகரத்தார் பெருமக்கள் அந்த நன்னாளில் ஓர் ஏழை நகரத்தார் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்துப் புண்ணியம் தேடிக் கொள்ளலாமே! சிந்திப்போம்! செயல்படுவோம்!! முன்னேறுவோம்!!!



சிந்திக்க

- வள்ளி மீனாள், தேவகோட்டை

- அகிலமே சக்தியென்றோம் பெண்ணே தெய்வமென்றோம், பேச்சோடு ஒழிந்தோம்.
- அன்னையென்றோம், தங்கையென்றோம், தாரமென்றோம் - பெண் சரிநிகரென்றால் மறுத்தோம்.
- ஒரு பாலர் உரிமையல்ல சுதந்திரம், இதை உணராமல் ஏனோ சரித்திரம்?
- சிந்தனையே அற்புதத்தின் ரகசியச்சாவி, பொருள் சேர்க்கும் பெரு உழைப்பே வளமையின் நியதி, கீழ்மைக்கஞ்சாத அருந்துணிவே வெற்றியின் வாயில்.
- கொடுப்பதல்ல, எடுப்பதல்ல சுதந்திரம். தன்னை உணர்ந்து கொண்டால் உண்டோ அடிமை சரித்திரம்.

தாய் மறைந்தால் நாச்சுவை போகும்; தந்தை இறந்தால் கல்வி போகும். உடன்பிறந்தார் ஒழிந்தால் பக்கபலம் போகும். மனைவியானவள் மறைந்தால் இவைகளனைத்துமே போய்விடும்.

- நீதி வெண்பா

மணமுறிவிற்கு மனக் குரங்கே காரணம்



- மு. வள்ளிக்கண்ணு பி.ஏ., ஆத்தன்குடி

எட்டு, பத்து வயதில் குழந்தைத் திருமணம் செய்து மகிழ்ந்த பண்டைய காலத்தில் பருவகாலத்தில் செட்டியார் கொண்டு விற்கப் பர்மா போன்ற பிறதேசங்களில் நீண்ட காலம் ஆச்சியை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்தாலும் மணமுறிவுகள் ஏற்பட்ட தகவல் இல்லை. ஆனால் நமது சமூகத்தில், சட்டபூர்வமாக, நீதிமன்றங்களின் வாயிலாக நிகழ்ந்து வரும் மணமுறிவுகளின் எண்ணிக்கை 930 (டிசம்பர் 2001 வரை) என்று அறிகிறபோது நாம் எங்கே போகிறோம்? நம் வழி சரிதானா? என்று எண்ணி மனம் பதை பதைக்கிறது.

ஏன் இந்த நிலை? இதன் அடிப்படைக்காரணங்கள் என்ன? இன்றைய இளைஞர்கள் சினிமா, தொலைக்காட்சித் தொடர் போன்றவற்றில் மனதைப் பறிகொடுத்து அதில்வரும் பாத்திரங்களாகத் தங்களைக் கற்பனை செய்து கொண்டு உண்மை வாழ்வில் ''நிழல் நிஜமாகாத'' போது வாழ்வை வெறுக்கின்றனர். கல்லூரிக்காலத்தில் கதாநாயகன் (அல்லது) கதாநாயகியை மோகித்து, கற்பனை வாழ்வு வாழ்ந்து, தனது வாழ்க்கைத் துணை அத்தகைய அழகுடையவராகத் திகழாதபோது மனம் ஒன்றாமல் வாடுகின்றனர். நன்றாய்ப் படித்த பெண்ணுக்கு வரதட்சணை கொடுக்க இயலாமல் ஓரளவு படித்தவனைக் கட்டிவைக்க நேர்கையில் உயர்வு தாழ்வு மனப்பான்மை திசை மாற்றுகிறது.

நான் என் காலில் நிற்கிறேன், நாலு குடும்பத்தைக் காப்பாற்றப் போதுமான சம்பளம் வாங்குகிறேன், எனவே, நான் நில் என்றால் நில், உட்கார் என்றால் உட்கார் என்ற ஆணவம் அழிவுக்கு வழிவகுக்கிறது. அக்கம் பக்கத்து வீட்டாரோடு வாழ்க்கைத் துணையை ஒப்பிட்டுப் பார்த்து, பேச - ஏச ஆரம்பித்து மனம் பிரிகிறது. வீண் சந்தேகம், விவாகரத்துக்கு அடி கோலுகிறது. பொல்லாதவர்களின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து, துதிபாடிகளின் தூபத்தால் துணையை இழந்திருக்கிறார்கள். உடன் பணிபுரிபவர் அல்லது நலம்நாடும் நண்பர்போல் நடிக்கும் நயவஞ்சகர்களது ஆசைப் பேச்சுகளில், அன்பு(?)ப் பரிசுகளில், ஆறுதல் மொழிகளில் மனம் தோய்ந்து கொஞ்சம் கொஞ்சமாக மனத்தை அவர்பால் தொலைத்து மணமுறிவு ஏற்படுகிறது.

ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்கு சமம்.

-ஹெர்பட்

இடைத் தரகர்களின் எக்கச்சக்கமான புளுகுகளை நம்பிக் கழுத்தை நீட்டிவிட்டு, 'தங்கம் அல்ல தகரம் தான்' என்று உணரும் போது வாழ்வை இழக்கிறார்கள். குணம், குலம் அறியாமல் பணம் பிரதானம் என்று ''பணம் வந்த வழி'' அறியாமல் தகுதிக்கு மீறிய இடத்தில் வாழ்க்கைப்பட்டு வாழ்விழக்கிறார்கள். விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மை இல்லாததால் வீழ்கிறார்கள்.

விளையாட்டுப் பேச்சு வினையாக முடிய, வாழ்க்கை முற்றும் புள்ளியாகிறது. **குடும்பத்தைக் கவனிக்காமல்,** மாதர் சங்கம், சமூக சேவை என்று புகழைத் தேடிப் புதைகுழியில் வீழ்வது - பெரியவர்களைப் பேணாது. நல்லார் சொல் கேளாது தான் தோன்றித் தனமாய் வாழ்வது என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மணமுறிவுகள் இல்லாமல் இல்லறம் தழைக்க என்ன செய்ய வேண்டும்?

1. விரும்பியது கிடைக்காமல் போவதைவிடக் கிடைப்பதை விரும்புவது.
2. விட்டுக் கொடுத்துப் போவது (விட்டுக் கொடுத்து வாழ்பவர் கெட்டுப் போவதில்லை)
3. அளவாக ஆசைப்படுவது
4. பெரியவர்களைப் பேணுதல் - உறவினர்களை மதித்தல்
5. அன்பு காட்டுதல்
6. அளவான பேச்சு - அமைதியான உரையாடல்கள்
7. மனம் விட்டுப் பேசி - கலந்து முடிவெடுத்து - கனிவாய் செயல்புரிந்து - காதலாகிக் கசிந்து நல்லறம் பேணல்
8. நல்லார் நட்பு - கடவுள் பக்தி
9. நான் என்ற அகங்காரம், நமது என்ற எக்காளம் இல்லாமல் அடக்கத்துடன் அறிவைப் பெருக்கி - நல்லதே எண்ணி நல்லதே செய்து நலமுடன் வாழல்

நடை, உடை, பாவனைகள் காலத்துக்கேற்ப மாறினாலும் முன்னோர் வழி பொறுமையுடன் வாழ்ந்தால் நமது சமூகம் மென்மேலும் சிறக்கும். திருமணங்கள் இருமனங்களை இன்புறச் செய்து வளமெலாம் தந்து மகிழ்விக்கும்.

மனக்குரங்கைக் கட்டுப்படுத்தினால் மணமுறிவு ஏற்படாது.

பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது பேணியும் வளர்க்க வேண்டும் !

– நாச்சா சோமசுந்தரம், கல்லல்

பிள்ளைகளைப் பச்சை மண் என்று கூறுகிறோம். பச்சை மண்ணைக் கொண்டு ஒரு தெய்வத்தின் சிலையையும் உருவாக்கலாம், உபயோகப்படும் பாண்டத்தையும் உருவாக்கலாம். எதை உருவாக்குவது என்பது குயவன் கையில் உள்ளது. பிள்ளைகள் எனும் பச்சை மண்ணை உருவாக்கும் குயவனாக விளங்குபவள் அன்னை.

பிறந்த குழந்தையைத் தொட்டிலில் தாலாட்டும்போதே நகரத்தார் பெண்கள் தம் இனப் பெருமையையும், தயாள குணத்தையும், இராமாயணத்தையும், வள்ளி திருமணத்தையும் அழகாக சொல்லித் தாலாட்டுவார்கள். கருவிலேயே கற்றுக்கொள்ளும் பிள்ளை அன்னை தாலாட்டில் கூறுவதை மனதில் பதித்துக் கொள்ளும் என்பது உறுதி. தன்குரல் எப்படி இருக்குமோ, மற்றவர்கள் கேலி செய்வார்களோ என்றெல்லாம் எண்ணித் தற்போது நிறையப் பெண்கள், வானொலியையும், ஒலி நாடாவையும் சுழலவிட்டுக் குழந்தைகளைத் தூங்க வைக்கிறார்கள். இது தவறு. நாம் பிறருக்காகப் பாடவில்லை; கச்சேரி நடத்தவில்லை. நம் பிள்ளைக்கு ஒரு சிறந்த படிப்பினையைத் தருகிறோம் என்பதனை மனதில் கொண்டு தாலாட்டுப் பாடவேண்டும். நம் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்ல வேண்டும்.

''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை''. நம் இனம், நம் மக்கள் என்ற உணர்வினைக் குழந்தைகள் மனதினில் பதிய வைக்க வேண்டும். நம் இனத்தவர்களை விட்டுக் கொடுக்கக் கூடாது. எல்லோரும் நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணம் வேண்டும். இப்பொழுது எல்லா ஊர்களிலும் நகரத்தார் சங்கங்கள் உள்ளன. அந்தச் சங்க நிகழ்ச்சிகளுக்குக் குழந்தைகளை அவசியம் அழைத்துச் செல்ல வேண்டும். படிப்பு, தொலைக்காட்சியில் முக்கியமான நிகழ்ச்சி, கணிப்பொறியில் விளையாட்டு என்று சாக்குச் சொல்லும் பிள்ளைகளை நகரத்தார் பெண்கள் பக்குவமாக எடுத்துச் சொல்லி, நாம் சேர்ந்து இருக்க வேண்டிய அவசியத்தை விளக்கி அழைத்துச் செல்ல வேண்டும். அங்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் குழந்தைகளைப் பங்கேற்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒற்றுமை உணர்ச்சி ஓங்கி வளரும். வளர வளர அந்தப் பிள்ளைகள் நம் இனத்தவருக்கும், நம் இன வளர்ச்சிக்கும் எப்படி உதவி செய்யலாம் என்று எண்ணத் தொடங்குவார்கள்.

பெண் என்பவள் தியாகத்தின் மங்கல வடிவம் தெய்வம். 'என் சொந்த உயிர் போனாலும் போகட்டும் என் மகனைக் காப்பாற்றுங்கள்' என்ற சொல் தாய் ஒருத்தியின் வாயிலிருந்துதான் வரும்.

-காண்டேகர்

நகரத்தார் தாய்மார்கள் பெண் குழந்தைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும், வேலைக்குப் போய்ச் சுயமாகச் சம்பாதித்துச் சொந்தக் காலில் நிற்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். பெண் படித்தால் அதற்கு ஏற்ற மாப்பிள்ளை பார்க்க வேண்டும். அதற்கேற்ற சீதனம், மாமியார் சாமான் கொடுக்க வேண்டும் என்று பயந்து பெண் பிள்ளைகளைப் படிக்க விடாமல் தடுக்கக்கூடாது. என்றும் அழியாச் செல்வம் கல்வி. அதனை நன்கு கற்றுப் பெண்களும் ஆண்களும் சமமாக இருக்க வேண்டும்.

96 ஊர்களுக்குள் கட்டுண்டு கிடந்த நகரத்தார், இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், 96 ஊர்களைத் தவிர மற்ற ஊர்களிலேயே நிறைய வாழ்கிறார்கள். வயதானவர்கள்தான் கோட்டையைப் போன்ற வீட்டுக்குக் காவலாக இருந்து வருகிறார்கள். என்றாலும் நகரத்தாருடைய ஒரு சிறந்த பழக்கம் என்ன வென்றால், திருமணங்களைச் சொந்த ஊரிலே தான் நடத்துகிறார்கள். இதனால்தான் இன்னும் அந்த ஊர்கள் சிறப்புடன் இருக்கின்றன. அனைவரும் ஊருக்கு ஒரு முறையாவது வந்து போவதினால்தான் நம் பழக்கவழக்கங்கள், கலாச்சாரம், சுற்றம், வீடு, கோயில் எல்லாம் பசுமையாக உள்ளன. இதனை மாற்றி, இருக்கும் ஊர்களிலேயே திருமணம் செய்யலாம் என்று பிள்ளைகள் நினைக்கின்றார்கள். தாய்மார்கள், ஊரில் வந்து திருமணம் செய்வதினால் தான் நாம் இன்னும் நம் சொந்த ஊர் எது என்றவுடன் கல்லல், செம்பனூர் என்று சொல்ல முடிகிறது என்பதனைத் தெளிவாகப் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். இல்லையென்றால் மற்றவர்களைப் போல நாமும் எங்கள் பூர்வீகம் காரைக்குடி, ஆனால் இப்பொழுது நாங்கள் இருப்பதெல்லாம் சென்னைதான் என்று சொல்லும் நிலைமை வந்துவிடும்.

எந்த நாட்டில் நாம் வாழ்ந்தாலும், அது நம் சொந்த நாட்டில், தாய் மண்ணில் இருப்பது போல் வராது. வருடத்திற்கு ஒரு முறையாவது நம் ஊரில், நம் வீட்டில், நம் சுற்றத்தாருடன், நம் ஊர்த் தமிழ் பேசி, நமது பக்க உணவு உண்டு களிக்கும் பழக்கத்தினை நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நமது ஊரில் இருக்கும் சில அசௌகரியங்களைக் காரணமாகக் காட்டி, வராமல் இருப்பதை விட, அவற்றை நீக்கி நமது ஊரையும், பிற ஊர்களுக்கு ஈடாக மாற்ற கற்றுக் கொள்ளவேண்டும்.

நம்மால் நம் பிள்ளைகளின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கற்றுக் கொடுப்பது என்பது இயலாத விஷயம். ஆகையால் அனுபவப்பட்டவர்கள் கூறுவதையும், இந்தச் சமுதாயம் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதையும் கொண்டு தன் வாழ்க்கையைச் செம்மையாக வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். எங்கு வாழ்ந்தாலும், நமது நகரத்தார்களின் பெருமையையும், பண்பாட்டையும் மேலோங்கி வாழ வைக்கும் நல்ல புதல்வர்களாக வாழக் கற்றுக் கொடுப்பவர்கள் நம் நகரத்தார் பெண்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தாயே தன் குழந்தையை வளர்க்க வேண்டும். வேறு ஒருவர் வளர்ப்பது தாய்க்குத்தான் இழுக்கு. தாயைப் போல் பிள்ளை என்றுதானே சொல்கிறார்கள். வளர்ப்பவரின் குணத்தையே பிள்ளை பெறுகிறது. வளர்ப்பவரின் கெட்ட குணங்களால் தாய்க்குத் தானே இழிப்பெயர்.

-ரூஸோ

நகரத்தார் பெண்கள் தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியவை



- ஆர். எம். விசாலாட்சி, காரைக்குடி

ஒரு குயவன் எவ்வாறு களிமண்ணைப் பிசைந்து பிசைந்து வடிவங்களை வடிவமைக்கின்றானோ அது போல நம் நகரத்தார் பெண்கள் தன் பிள்ளைகளைச் சிறந்த ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்க முடியும்.

இப் பூவுலகில் அடி எடுத்து வைக்கும் குழந்தை முதன் முதலில் அறிந்து கொள்வது தன் தாயை மட்டுமே. அப்படிப்பட்ட தாயே பிள்ளைகளின் முதல் ஆசானும் ஆவாள். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது பழமொழி. எனவே குழந்தையாக இருக்கும் போதே ஒவ்வொரு தாயும் பிள்ளைகளுக்கு நற்பண்புகளையும், செயல்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

சிவத்தொண்டு செய்து பல கோயில்களில் திருப்பணிகள் செய்த நகரத்தார்கள் வழியில் வந்த நாம் நம் பிள்ளைகளுக்கு முதலில் கற்றுக் கொடுக்க வேண்டியது **தெய்வ பக்தி** ஆகும். தினமும் நெற்றியில் திருநீறு அணிந்து இறைவனை வழிபடச் செய்ய வேண்டும்.

அன்பு போதிக்க வேண்டும்.

பெரியோர்களை, ஆசிரியர்களை மதிக்க அவர்களின் அறிவுரைகளைக் கேட்க, அதன்படி நடக்கப் பழக்க வேண்டும். தமிழ்த் தாயின் ஒப்பற்ற புதல்வனாய் திகழ்ந்த பாரதி

கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

என்று பாடியதை மனதில் நிறுத்தி, பிற பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடக் கற்றுக் கொடுத்து ஒற்றுமையின் மேன்மையை எடுத்துரைக்க வேண்டும். பிள்ளைகளின் மனதில் அன்பைப் போதிக்க வேண்டும்.

பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது பெண்ணின் உரிமைக்கடன். சமயம் நேருமேல் அன்பு வழியில் ஆண் பதவிகளையும் பெண் மக்கள் ஏற்று உலகை நடத்தலாம்.

-திரு.வி.க

ஒழுக்கம்

அன்பைவிட வலிமையான ஆயுதம் இந்த உலகில் இல்லை என்பதை அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்ற குறளாசானின் அறிவுரைப்படி பிள்ளைகளை நடக்கச் செய்ய வேண்டும். ஊர்தோறும் சத்திரங்கள், பசுமடங்கள் கட்டித் தங்கும் வசதியும், வயிற்றிற்கு உணவும் படைத்து மகிழ்ந்த பாரம்பரியத்தை மறக்காமல் இருக்க நம் பிள்ளைகளுக்கு விருந்தோம்பலைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்ற யவை.

என்ற வள்ளுவரின் வாக்கின்படி, படிப்பின் அவசியத்தையும் நன்மையையும் எடுத்துரைக்கவேண்டும். பொது அறிவு வளரக்கூடிய புத்தகங்களை வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்யவேண்டும். தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்களில் வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளைப் பார்க்கவும், படிக்கவும், கேட்கவும் பழக்க வேண்டும். பத்திரிகை படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். நூலகம் சென்று படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். படிப்பு மட்டும் போதாது என்று எடுத்துக் கூறி இசை, நடனம், உடல் பயிற்சி, விளையாட்டு போன்றவற்றை கற்றுக் கொடுக்கவேண்டும்.

தன்னம்பிக்கை

பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்பார்கள். இந்த நிலையை எட்டும்போது நம்பிக்கையை வளர்க்க வேண்டும். தன் தேவைகளைத் தானே செய்து கொள்ளக் கற்றுக் கொடுக்க வேண்டும். நல்லது கெட்டதுகளை அறியச் செய்ய வேண்டும். தன்னுடைய இலக்கு இது என்பதை உணரச் செய்ய வேண்டும். அவர்கள் விரும்பும் துறையில் விஞ்ஞானம், மருத்துவம், பட்டப்படிப்பு, இசை, நடனம், விளையாட்டு, ஓவியம் போன்ற எந்தத் துறையாக இருந்தாலும் அவர்கள் விருப்பத்திற்குத் துணையாக இருந்து சிறந்து விளங்கச் செய்யவேண்டும்.

முயற்சி

வாழ்க்கையில் வெற்றி தோல்விகள் வருவது சகஜம். இப்படிப்பட்ட நேரங்களில் பிள்ளைகள் மனம் தளராமல் இருக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும். விடா முயற்சியின் அவசியத்தை எடுத்துக் கூறி அதன் வழி நடக்கச் செய்யவேண்டும்.

பெண் சமத்துவம் இல்லாமல் உண்மையான விடுதலையோ குடியாட்சியோ இருக்கமுடியாது.
-இந்திரா காந்தி

சுயவேலைவாய்ப்பு

பிள்ளைகளுக்குச் சுயதொழிலின் அவசியத்தை எடுத்துக்கூறி, தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். எந்தத் தொழிலாக இருந்தாலும் அதைச் செம்மையாக, நேர்மையாக, நம்பிக்கையுடன் செய்ய வேண்டும் என்று சொல்லித் தர வேண்டும்.

எந்த காரியத்தையும் வலுக்கட்டாயமாக திணிக்காமல் அவர்கள் விருப்பத்தை அறிந்து அவர்கள் தொழிலில் மேன்மைடையச் செய்ய வேண்டும். அதற்கான வழி முறைகளைக் கற்றுத்தர வேண்டும்.

குடும்பம் ஒரு கோயில்

குடும்பம் ஒரு கோயில் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். குடும்பத்தில் அனைவருடனும் அன்பு பாராட்டி விட்டுக்கொடுத்து வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். பழி வாங்கும் எண்ணத்தை அகற்ற வேண்டும்.

சங்கங்களில் உறுப்பினராக்குங்கள்

நாம் தங்கி வாழும் ஊர்களில் உள்ள நம் சமூக சங்கங்களில் நம் பிள்ளைகளை உறுப்பினராகச் சேர்த்துச் சேவை செய்ய ஊக்கம் அளிக்கவேண்டும்.

உதவியும் ஈகையும் இருகண்கள்

நம்மால் முடிந்த அளவிற்குப் பிறர்க்கு உதவி செய்யவேண்டும் என்று ஈகையின் சிறப்பை எடுத்துச் சொல்லி அதன் வழி நடக்கச் செய்யவேண்டும்.

விளக்கு சுடர் விட்டு ஒளிவீசத் தூண்டுகோல் முக்கியமானது. அதுபோல நம் பிள்ளைகளின் எதிர்காலம் சுடர் விட்டுப் பிரகாசிப்பதற்கு நாம் தூண்டு கோலாக இருப்போம்.

சான்றோனாக்கிச் சந்தோஷப்படுங்கள்

எப்படி ஒரு தாய்க் கோழி முட்டைகளை அடைகாத்துத் தேவையான வெப்பத்தைக் கொடுக்கிறதோ, அதே போலப் பிள்ளைகள் நல்லவர்களாக வளர்வதற்குத் தேவையான குணங்களையும், பக்குவங்களையும் கொடுக்க வேண்டும். ஆனால், முட்டையில் இருந்து குஞ்சு தானே முயன்று வெளிவந்து இந்த உலகத்தைப் பார்க்கிறது. அதுபோல முயற்சி பிள்ளைகளுடையதாக இருக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். வெற்றிப் படிகளில் ஏற அவர்களைப் பழக்க வேண்டும்.

எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே - அது

பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டா.

-பாரதிதாசன்

நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே

என்று கண்ணதாசன் எழுதிய பாட்டை மனதில் கொண்டு நல்லவற்றைக் கற்றுக் கொடுத்து வளர்ப்போமாக.

ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்.

இந்த மனமகிழ்ச்சியை நகரத்தார் பெண்கள் ஒவ்வொருவரும் நமதாக்கிக் கொள்வோம்.

அறிந்து கொள்ளுங்கள் மகளிர் இல்லம்

அமராவதிபுதூரில் சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பாவும் மரகதவல்லியும் இணைந்து நடத்திய நிறுவனம். இளம் கைம்பெண்களுக்குக் கல்வி கற்பித்து, கைத் தொழில்களில் பயிற்சிதந்து வாய்ப்பிருந்தால் மறுமணமும் செய்து வைக்கும் நோக்கத்துடன் 10-4-1938இல் இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பெற்றது. இதன் சார்பில் மரகதவல்லி முருகப்பாவை ஆசிரியராகக் கொண்டு 'மாதர் மறுமணம்' என்ற திங்கள் இதழ் ஒன்றும் வெளிவந்தது. பின்னர் இங்கு மழலையர் பள்ளி ஒன்றும் தொடங்கப்பெற்றன.

இவ்வளாகத்தில் சொ. முருகப்பாவின் மார்பளவு உருவச்சிலை நிறுவப்பெற்றுள்ளது. சொ. முருகப்பாவுக்குப் பின்னரும் தொடர்ந்து மரகதவல்லி அம்மையாரால் நடத்தப்பட்ட இந்நிறுவனம் அம்மையார் காலத்திற்குப் பிறகு செயல்படாமல் இருந்தது. 8-10-1986இல் இவ்வளாகத்தை வாங்கிக் கொண்ட பள்ளத்தூர் மு.சு. பழநியப்ப செட்டியார் குடும்பத்தினர் பள்ளத்தூரில் நடத்தி வந்த ஸ்ரீ சாரதா சேவாசிரமம் என்ற மகளிர் நிறுவனத்தின் நிர்வாகம் 1994இல் சேலம் ஸ்ரீ சாரதா சமிதியிடம் ஒப்படைக்கப் பெற்றது. புதிய நிர்வாகம் இவ்வளாகத்தில் ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரியைத் தொடங்கி நடத்திவருகிறது. சொ. முருகப்பாவின் மனத்தில் ஆழப்பதிந்திருந்த பெண்கள் முன்னேற்றம் என்னும் இலட்சியம் இவ்வளாகத்தில் பெண்கள் உயர்கல்விமையம் அமைவதன் மூலம் நிறைவேறியுள்ளது.

- நகரத்தார் கலைக் களஞ்சியம்

உயிரினங்களில் எவையும் விதவையாக வாழ்வது கிடையாது.மனிதரில் மட்டும் ஏன் இந்தக் கொடுமை. சிந்திக்கத் தெரிந்த எவரும் கைம்மைக்கு வாழ்வு கொடுப்பர்.

-வா. ரா.

பிள்ளை வளர்ப்புக்கான ஐந்து அம்சத் திட்டம்



- சீதாலெட்சுமி நாச்சியப்பன், ஆத்தன்குடி

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழியை நாம் யாவரும் அறிந்திருப்போம். சிறு பிள்ளைப்பருவத்தில் நாம் கற்றுக் கொடுப்பது தான் அவர்களுக்குக் கடைசி வரை துணை நிற்கும்.

சுய சிந்தனை

பிள்ளைகளுக்கு நாம் முதலில் கற்றுக் கொடுக்க வேண்டியது சுயசிந்தனை. நன்று இது, தீது இது எனப் பிரித்துப் பார்த்து ஆயும் அறிவு பகுத்தறிவு. இந்தப் பகுத்தறிவு வேலை செய்யப் பயன்படுவது தான் சுயசிந்தனை. பெற்றோர்கள் தங்களுடைய எண்ணங்களைப் பிள்ளைகள் மேல் திணிக்கக்கூடாது. அவர்களைச் சுதந்திரமாக செயல்படவிடுங்கள். ஆனால் உங்கள் வழிகாட்டுதலும், கண்காணிப்பும் அவர்களிடம் இருக்கட்டும். பிள்ளைகள் விருப்பத்திற்கேற்ப நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஓவியத்திறமையுடைய பிள்ளையை நாம் வழிகாட்டி ஊக்குவித்தால் நாளைய ரவிவர்மாக்கள் நம்மிடம் நிறைய இருப்பார்கள். ஓர் ஆப்ரகாம் லிங்கனையோ, ஈசுவர சந்திர வித்யாசாகரையோ, ஓர் அப்துல் கலாமையோ உருவாக்க க்ளோனிங் (cloning) முறை தேவையில்லை. அவர்களுடைய சுயசிந்தனையும், நம்முடைய வழிகாட்டுதலும் போதும்.

தன்னம்பிக்கை

இரண்டாவதாக நாம் கற்றுக் கொடுக்க வேண்டியது நம்பிக்கை, 'நம்பிக்கை', நம்பிக்கை. நம்பிக்கை இல்லாமல் நாளை இல்லை. நம்பிக்கை இல்லாமல் வாழ்வு இல்லை' என்று ஏவிஎம் நிறுவனத்திற்காக எழுதப்பட்ட வைரமுத்துவின் பாடல் வரிகள் உங்களுக்கு உடன் நினைவில் வரலாம். என்னால் முடியுமா என்று எண்ணுவதை விடுத்து என்னால் நிச்சயம் முடியும் என்று நீங்கள் நினைத்தால் நிச்சயம் நீங்கள் சாதனையாளர் தாம். இதையே ஆங்கிலத்தில்

வாழ்க்கை என்ற ஆற்றைக் கடலைக் கடப்பதற்குப் பெண் என்ற படகோ கப்பலோ அவசியம் தேவை.
- காண்டேகர்

' If you can, you can
If you will, defnitely you will ' என்று கூறுவார்கள்.

இந்தியாவில் புகழ்பெற்று விளங்கும் Grasim தொழில் நிறுவனத்தின் வெற்றிச் சொல் 'You Can' என்ற சொல்லேயாகும். கவியரசு கண்ணதாசன் தன் கண்ணன் கவசத்தில்

'சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினாறிளமை வழங்கு
இப்பணி தொடர அற்புதம் காட்டு
தளராமேனியில் சக்தியைக் கூட்டு
தாய்போலிருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க்கு என்னை உதாரணம் காட்டு
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை ஊட்டு'

என்று கூறியுள்ள வரிகள் நம் பிள்ளைகள் தினந்தோறும் கூறவேண்டிய தன்னம்பிக்கை வரிகள்.

இறைவழிபாடு

அடுத்து நாம் கற்றுக் கொடுக்க வேண்டியது இறைவழிபாடு. கடவுளை நம்பி வழிபடும் எந்தப் பிள்ளையும் தவறான வழிக்குச் செல்வதில்லை. இறைவழிபாட்டுடன், தியானமும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இவை இரண்டும் அறிந்த பிள்ளைகளைத் துன்பம் வந்து அடைவதில்லை. சைவர்களான நாம் சைவ இலக்கியங்களை மட்டும் படித்துணர்வதை விடுத்து நம் நாட்டின் புனித நூலான பகவத்கீதையிலும் தேர்ச்சி பெற வேண்டும். பார்த்தனுக்குத் தேரோட்டிய சாரதியின் அறிவுரைகள் இன்னும் நம்மை வந்தடையவில்லை. மற்ற மதத்தினர் தங்களது இறைவழிபாட்டிற்குக் குறைந்தது மூன்று முறைக்கு நேரம் ஒதுக்கும் பொழுது நாமும் தினமும் இறைவழிபாட்டிற்கெனக் கட்டாயம் நேரம் ஒதுக்க வேண்டும்.

படிக்கும் ஆர்வம்

பிள்ளைகளிடம் நாம் முக்கியமாக வளர்க்க வேண்டிய ஒன்று படிக்கும் ஆர்வம். நம் நாட்டின் வடமாநிலங்களின் இருக்கும் மக்களின் படிப்பார்வத்தை விட நம் மக்களின் ஆர்வம் மிகக் குறைவு. தொலைக்காட்சியின் வரவால் நாம் தரமான, அறிவூட்டும் இலக்கியங்கள், பத்திரிகைகள் முதலியனவற்றைப் படிக்க மறந்துவிட்டோம். படிப்பதால் நம் எண்ணங்கள், சிந்தனைகள் விரிவடையும்.

வாழ்வு மேன்மையுடன் இருக்கவேண்டுமானால் மனிதனுக்கு வாழ வேண்டும் என்ற பசி இருக்க வேண்டும்.அந்தப் பசி உணவு பெண்ணே.

- தாகூர்

புத்தகமே சிறந்த நண்பன் என்பதை நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். முதலாம் வகுப்பு படிக்கும் சிறுவனிடம் தினமும் ஆறு மணிக்குப் படிக்க அமரும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டால் பல்கலைக்கழகம் வரை அது அவனுக்கு வளம் சேர்க்கும்.

அன்பு

பிள்ளைகளிடம் நாம் மிகவும் முக்கியமாக வளர்க்க வேண்டிய மற்றொன்று அன்பு. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். மேற்கூறிய எல்லாக் குணங்களும் வாய்க்கப்பெற்று அன்பு என்பது மட்டும் இல்லையென்றால் அவர்களால் எப்பயனும் இல்லை. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் நாமும் நம்முடைய அன்பை வெளிக்காட்டத் தயங்கக் கூடாது. அன்பு தான் உலக இயக்கத்திற்கு ஆதாரம் என்பதை நாம் உணர்த்த வேண்டும்.

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

என்ற திருவள்ளுவரின் வாக்கின்படி பகைவருக்கும் அன்பு காட்டினால் நாட்டில் தீவிரவாதத்தை ஒழிப்பதோடு நாம் என்றும் மேன்மக்களாகத் திகழ்வோம் என்பதில் ஐயமில்லை.



வாழ்க்கையில் நமக்கு என்ன வேண்டும் நல்ல உடல் நலம் அத்துடன் நல்ல பெண் அத்துடன் நல்ல நண்பர்கள். இவற்றுள் முன்னும் பின்னும் இருந்து பெண் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை.

- டிவன் சம்



நகரத்தார் பெண்கள் தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியவை

– பஞ்சு வள்ளியப்பன், தேவகோட்டை

1. நம் நகரக் கோவில்களைப் பற்றியும் குலதெய்வங்களைப் பற்றியும் நம் படைப்புகளைப் பற்றியும் கூறவேண்டும்.
2. நம் இனத்தின் பெருமைகளையும் அறப்பணிகளையும் கூறி அறப்பணி செய்யும் எண்ணத்தை உருவாக்கவேண்டும்.
3. பெரியவர்களிடமும் உற்றார் உறவினர்களிடமும், தன்மையோடு நடந்துகொள்ள வேண்டும்.
4. உறவினர்களின் விசேடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்று அந்த விசேடங்களின் பெருமைகளையும், நம் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் கூறவேண்டும்.
5. பெண்குழந்தைகளுக்குச் சமையல் கற்றுக்கொடுக்கவேண்டும். குறிப்பாக, சிறப்பான நம் செட்டிநாட்டுச் சமையல் வகைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
6. செட்டிநாட்டு வழக்கத்தில் உள்ள சொற்களையும் பேச்சுக்களையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.
7. வரதட்சணை வாங்குதல், சாமான் பரப்புதல், முறைதலை போன்றவைகள் தற்போதைய நடைமுறைக்கு எவ்வளவு சிரமம் என்பதை எடுத்துக் கூறவேண்டும்.
8. கலை ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவர்கள் விரும்பும் கலைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். பின்னாளில் அதுவே அவர்களுக்கு வருவாய் ஈட்ட உதவும்.
9. பிறருக்கு - குறிப்பாக, நம் இனத்தவர்களுக்கு - உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.
10. பொருளை ஈட்டல் - காத்தல் - வகுத்தல் (செலவு செய்தல்) எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக்கூறவேண்டும்.

மனம்தான் வாழ்க்கை. மனம் அறிந்து மகிழ்ச்சியூட்டத் தெரியாத மங்கையர் அழகு, பண்பு, திறமை எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாந்து துன்புறுகிறார்கள். மேற்கூறியவை குறைவாகவே இருந்தாலும் மனம் அறிந்து நடக்கத் தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறார்கள்.

- மு. வ.

தலைமுறைகள் செழிக்க வழிமுறைகள்



– காவேரி சபாரத்தினம், கானாடுகாத்தான்

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா'

என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. நகரத்தார் சமூகத்தில் பெண்ணாகப் பிறந்ததைப் பெருமையாக ஒவ்வொரு பெண்ணும் கருதிட வேண்டும்.

"ஆன்மிகத்தையும், தமிழையும் இரு கண்களாக நகரத்தார் போற்றி மதிக்கக் காரணம் தாய்மார்கள் அவர்களை வளர்த்த விதமாகும்.

''பூ எப்ப மலரும்
பொழுதெப்ப புலரும்
சிவன் எப்ப வருவார்
வரம் எப்ப தருவார்''

என்று சிறுகுழந்தைக்கு அன்பையும் பண்பையும் இறை நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டி வளர்க்க வேண்டியவர்கள் தாய்மார்கள். இதை மனத்தில் கொண்டு நகரத்தார் சமூகப் பெண்கள் நாளைய தலைமுறையைச் சிறப்பாக உருவாக்குவதில் கவனம் கொள்ள வேண்டும். பட்டம் எங்கே சென்றாலும் அதன் நூல் ஒருவன் கைக்குள் இருப்பது போலத் தன் பிள்ளை எந்நாடு சென்றாலும் தன் மண் வாசனையை மறக்காமல் இருக்கப் பிள்ளையைப் பழக்க வேண்டும். எந்தச் சூழலையும் புரிந்து கொண்டு வாழும் சமுதாயத்தைப் படைப்பது நம் சமூகப் பெண்களின் கைகளில்தான் உள்ளது.

அடுத்து நகரத்தார் சமூகப் பெண்களுக்கு முக்கியமான தேவை தன்னம்பிக்கை! இதனைச் சிறுவயதிலிருந்து பெண் குழந்தைக்குப் புகட்ட வேண்டும். வகுப்பறை தொடங்கி வாழ்க்கை முழுவதும் தன் நிலையில் தாழாமல் தன்னம்பிக்கையுடன் உலகைச் சந்திக்கப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

உயிரைக் காப்பாற்றும் கடமையைக் கடவுள் பெண்களுக்குக் கொடுத்ததால்தான் உலகம் இருக்கிறது.
- அரவிந்தர்

தன்னம்பிக்கையுடன் செயல்பட நமக்குத் தேவை கல்வியறிவு. நகரத்தார் சமூகத்தில் பெண்களை அதிகம் படிக்க வைப்பர், வேலைக்கு அனுப்புவர்; சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவர் என மற்றவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்படியான நிலையை உருவாக்க வேண்டும். நிறைந்த உயர்கல்வி ஒன்றுதான் மற்ற பெண்களையும் நம்மவரையும் வேறுபடுத்திக் காட்டும். நம் இனத்துப் பெண்கள் வெளிநாட்டில் திருமணமாகிச் சென்றாலும் தம் கணவனையும், பிள்ளைகளையும் பாதுகாக்கக் கல்வியறிவு அவசியம்.

தைரியம், தன்னம்பிக்கை, கல்வி இவற்றுடன் உழைப்பு மிகவும் தேவை. திலகவதியார் தம் பெற்றோரை இழந்த போதும், கணவனாக நிச்சயிக்கப்பட்டவனை இழந்த போதும் மனம் தளராமல் தம் இளவல் நாவுக்கரசரை உருவாக்கியது போல இலட்சியம் ஒன்றை வகுத்துக் கொள்ளவேண்டும். அந்த இலக்கை அடைய ஓயாமல் உழைப்பதைத் தன் திறமையாகக் கொள்ளல் வேண்டும்.

எவ்வளவுதான் நம் முயற்சி 99% எட்டிப் பிடித்தாலும் இறையருள் என்பது முழுமையாகக் கிடைத்தால்தான் 100% அடையமுடியும். மீனாட்சியம்மைக்கும், ஈசனார் கோயிலுக்கும் நம் நகரத்தார் செய்த சேவை நாடறிந்ததே. அப்பணியை வழிநடத்த அன்புத் துணைவியார்கள் அருள் உள்ளம் தேவை. படமாடுங்கோயில் பகவற்கு ஒன்று கொடுப்பதை விட, நடமாடுங்கோயில் நம்பற்கு ஈவதே சிறப்பு என்பதை உணர்ந்து ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்துப் பசிப்பிணி அகற்றி, தாம் பிறந்த குலத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

கணவனைப் பிரிந்தபோது தம் மனதைக் கட்டுப்படுத்தி, இறைவழியில் செலுத்தி, பேரியக்கமாக விளங்கிய காரைக்காலம்மையார் போன்று கொண்ட கொள்கையில் விடாது நின்று தியாக உள்ளம் கொள்ளல் வேண்டும்.

இன்று அயல் நாடுகள் சென்று பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் கணவன்மார்களுக்கு உற்ற மனைவியாகப் பெண்கள் செல்கின்றனர். தாங்களும் பணியாற்றும் பெண்களாக உள்ளனர். இவர்கள் ''நீரைத் தவிர்த்து பாலை மட்டும் உண்ணும்'' அன்னப்பறவை போன்று அங்குள்ள மேலை நாட்டுக் கலாச்சாரங்களில் நல்லனவற்றைக் எடுத்துக் கொண்டு தீயவைகளைத் தவிர்த்து அவற்றைத் தம் மக்களுக்கு புகட்டுதல் அத்தியாவசியமாகும்.

மேலும் பிறருக்குக் கொடுத்தல் என்னும் பண்பை அவர்களுக்குப் புகட்டுதல் முதற்கடமை. நம் முன்னோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு முதன் முதல் அனுப்பும் நாளன்று பிள்ளைகளின் பிஞ்சுக்கரங்களால் இனிப்பு வழங்கும் பண்பைக் கற்பித்தனர். அப்பண்பினை மேலும் ஊக்கப்படுத்த வேண்டியது தலையாய கடமை! கணவன் வீடு செல்லும் பெண்மகவுக்கு நவரத்தினங்களைப் பூட்டி அனுப்புவதுடன் அன்பு, பண்பு,

கைம்மாறு கருதாது பொறுப்பை உணர்ந்து மகளிர் செய்யும் பணியே கடமையாகும்.

- தெரசா

பாசம், ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தன்னம்பிக்கை, தைரியம், சுயநலமின்மை, பிறரை மதித்தல் ஆகிய ஒன்பது மேன்மைகளையும் ஊட்டி அனுப்புங்கள்.

பெண் கணவன் வீட்டுக் குறைகளைத் தாய் வீட்டில் கூறும் நிலையில், பெற்றோர் அதை ஊக்குவிக்காமல் ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும், வாழ்க்கை என்பது மேடுபள்ளங்கள் நிறைந்தது; உள்ளதை வைத்து நிறைவுடன் வாழக் கற்றுக் கொள்'' என்று அறிவுறுத்த வேண்டும். தான், தனது என்ற அகந்தை கொள்ளாமல் இருக்கக் கற்றுத் தரல் வேண்டும். எத்தனை செல்வங்கள் இருந்தாலும் தாயானவள் ஆண்மகனுக்கு சிறு பிராயத்திலிருந்தே தேவைக்கு அதிகமாக பணம் தருதல் பெரும் தவறாகும். தாய் தன் கணவனுக்குத் தெரியாமல் கொடுத்துத் தன் பிள்ளைகளைத் தானே கெடுப்பாள். பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் நல்ல பிள்ளைகளே, அவர்கள் வளர்க்கப்படும் விதத்தில் தான் வாழ்க்கை அமையும் என்பதை உணரவேண்டும்.

நம் முன்னோர்கள் செய்த தர்மங்களை நாம் நம்மோடு நிறுத்திக் கொள்ளாமல் நமது பிள்ளைகட்கு அவற்றை நன்முறையில் நிர்வகித்து, அவற்றைச் சரியான முறையில் பராமரித்து, அதன் பலனைப் பிறர் அடைய உண்டான வழிமுறைகளைக் கற்றுத் தர வேண்டும். அதனால் பிறர் பெற்ற நன்மை கண்டு, நம் குழந்தைகள் செயல்முறை கண்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும் விட, பழமைக்கும், புதுமைக்கும் பாலமாக விளங்க வேண்டிய பொறுப்பு நகரத்தார் பெண்களுக்கு உரியது. பழமையின் பத்தாம் பசலித்தனத்தை அணிகலனாக அணிய வேண்டாம். அதன் நல்ல கருத்துக்களை எடுத்து புதுமை என்னும் அணிகலனில் பதித்து பயன்படுத்துவது நமக்கும் நம் இனத்திற்கும் அழகு என்பதை உணருதல் வேண்டும்.

இத்தகைய பண்புகளுடன் நம் சமூகப் பெண்கள் விளங்கினால் இந்தியாவின் பண்பாட்டைக் காப்பதில் பெரும்பங்கு நகரத்தார் இனத்தைச் சாரும்.

தாயின் அன்பும் தந்தையின் கண்டிப்பும் இருந்தால் உற்றார், பெற்றோர் உலகத்தார் அனைவரும் போற்றும் வண்ணம் நம் நகரத்தார் குழந்தைகள் வாழ்வார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதை நாம் அனைவரும் உணர்ந்து நம் குழந்தைகளையும் அவ்வழியே நடத்திச் செல்ல வேண்டும்.

கடமையைப் புறக்கணிக்கும் பெண்கள் வீட்டின் நாட்டின் புண்கள்.

- காண்டேகர்



பிரச்சினைகளும் தீர்வுகளும்

- எஸ். கற்பகம் சண்முகம், கீழச்சிவல்பட்டி

கொடுப்பதும் வாங்குவதும் குறைய வேண்டும். தீபாவளி முறை, பொங்கல் முறை, பிள்ளையார் நோன்பு முறை, மருந்து குடிக்க முறை, பிள்ளைப் பெற்றால் முறை, வருஷ முறை என்று முறைகள் முறையாக செய்ய வேண்டும். இப்படிப்பட்ட முறைகள் முழுவதுமாக இல்லாவிட்டாலும் கூடச் சிறிதாவது குறைந்தால் தான் பிரச்சினைகள் நம்மை முறைக்காமல் இருக்கும்.

மேலும் பணம் படைத்தவர்கள் பணம் படைத்தவர்களுடனே சம்பந்தம் செய்வதால் பணம் ஒரே இடத்தில் சேர்கிறது. அவர்கள் பெருமைக்குச் செய்யாமல் இல்லாத வீட்டுப் பெண்களின் திருமணத்தை நடத்தி வைத்தாலும் பிரச்சினைகள் சற்று குறையும்.

கவிஞர் சொன்னதைப் போல் இந்தத் தேவையற்ற முறைகளால் எத்தனைப் பெண்கள் ''மாதமெல்லாம் மாத விலக்காகி போகிறார்கள்''.

''திருடனாகப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்பதைப் போல திருமணத்தை வியாபாரம் ஆக்கி விட்ட நம்மவர்கள் தாமாகவே திருந்தினால் தான் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

விதவை மறுமணம்

திருமணமே ஏகப்பட்ட பிரச்சனைகளிடையே நடக்கும் போது, விதவை மறுமணமா?

ஆனால் விதவை மறுமணம் அவசியம் தேவைதான். வயதான செட்டியார்கள் மறுமணம் செய்யும் போது கூடச் சிறுவயதுப் பெண்களைத்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள். இதற்கு இல்லாத வீட்டுப் பெண் என்ற சாக்கு வேறு. பொதுவாகவே மறுமணம் செய்யும் ஆண்கள் விதவைகளையோ, விவாகரத்துப் பெற்றவர்களையோ பணம் இல்லாக் கொடுமையால் வயது வந்தும் திருமணத்தை நினைக்க முடியாத முதிர் கன்னிகளையோ செய்து கொள்ளலாமே.

பெண்ணினத்தைக் காப்பாற்றும் சக்தி இல்லாத ஒரு சமூகத்திற்குக் கல்யாணம் செய்துகொள்ளவோ வம்ச விருத்தி செய்யவோ யோக்கியதை கிடையாது.

- மகாத்மா காந்தி

வாழ்வு வளம் பெறும். சமூகமும் திருந்துமே. அதிலும் இளவயது விதவைகளின் நிலையை யோசித்துப் பாருங்கள். மனதையும் உடலையும் கட்டுப் படுத்தி வாழ்க்கை நடத்த வேண்டும். அது எவ்வளவு கடினம். விதவை மறுமணம் என்பது தவறான செய்கை அல்ல. நம்மால் ஒத்துக் கொள்ள முடியவில்லை என்பதே உண்மை. (படித்தவர்கள் கூட ஒத்துக் கொள்வதில்லை என்பது வருத்தப்பட வேண்டிய விஷயம்). நமது சமூகமும் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும். ஆக இதுபோன்ற நல்ல முயற்சிகளுக்கு முழு மனதுடன் ஒத்துழைப்போம்.

சுவீகாரம்

''சுவீகாரம்'' என்பதே மற்ற இனங்களில் இல்லாத ஒரு செயல்தான். ஒரு சிறு கன்றை எடுத்துப் பிறிதொரு இடத்தில் வைத்தால் அது ஒரு காலத்தில் வளர்ந்து விடும். ஆனால் மரத்தை வேரோடு எடுப்பது என்றால் எப்படி? அதே போல்தான் வளர்ந்த பையனைச் சுவீகாரம் கொள்வதும்.

சுவீகாரம் செய்தால் சிறு குழந்தையிலேயே செய்து கொள்வது நல்லது. மேலும் வாரிசாக ஆண் குழந்தைகளை மட்டும் நினைக்காமல் பெண் குழந்தைகளையும் சுவிகாரம் செய்து கொள்ளலாமே!

துக்க வீட்டில் மாற்றங்கள்

நம்மிடையே ஒருவர் இறந்து விட்டால் அந்த வீட்டில் பலகாரங்கள் போடுவதை நிறுத்த வேண்டும். மற்றைய இனங்களில் எடுக்கும் வரை அடுப்பே மூட்ட மாட்டார்கள். மறுநாள் கூட ஆகிவிடுகிறது. வெளியூர்களில் இருந்தெல்லாம் வருகிறோம். சாப்பாடு ஏற்பாடு செய்யலாம். ஆனால் வடை, பணியாரம், அல்வா என்றெல்லாம் வகையுடன் செய்யாமல் இட்லி, பொங்கல் என்று செய்யலாமே. இருக்கிற வீடுகளில் பிரச்சினை இல்லை. இல்லாத வீடுகளில் படுகின்ற பாடு கொஞ்ச நஞ்சமில்லை.

ஆகவே இந்த மாற்றங்கள் நம் இனத்தில் அவசியம் தேவை. சிந்திப்போம்! செயல்படுவோம்! வெற்றிபெறுவோம்.

திருமணத்திலும் பிற சடங்குகளிலும் சில மாற்றங்களைச் செய்யவேண்டும்.

முதலில் சாமான் பரப்புவதை முற்றிலுமாக நிறுத்த வேண்டும். திருப்பூட்டியதும் மாப்பிள்ளைக்குத் திருப்பூட்டிய சடங்கிற்கு ரூபாயும் சாமான்களும் தேவையா? தாலி கட்டுவது மாப்பிள்ளையின் கடமைதானே. இதை அவரை விட்டால் யார் செய்வது? இதுவும் தவறு. இத்துடன் மாமியார், நாத்தனார் எல்லோருக்கும் முறைகள்! இதெல்லாம் தேவையற்றவை. ''சடங்குகளும் சம்பிரதாயங்களும் தேவைதாம்'' அர்த்தமுள்ளவைதாம். ஆனால் நம் இனத்தில் பணத்தை அடிப்படையாக வைத்துச் சடங்குகள் செய்கிறோம். பெண் பார்த்து பிடித்துப் போய்விட்டால் சாமான்கள், ரொட்டிக் கட்டு, பணத்துடன் மாப்பிள்ளை உட்பட அவர் வீட்டினருக்கும் கொடுப்பது- இதெல்லாம் மாற்றலாமே. இது போன்ற தேவையற்றவற்றைக் குறைக்கலாமே!

பெண் மீது கொள்ளும் காதல் மனித சமுதாயத்தை வாழவைக்கிறது. ஆனால் பணத்தின் மீது கொள்ளும் காதலோ அதனை அழித்தே விடுகிறது.

- பிளாட்டோ



செட்டி நாட்டின் பெருமைக்கு ஆயாள் - அப்பத்தாளின் பங்களிப்பு

- பவானி இராசகோபால், ஆத்தன்குடி

நம் அய்யாக்கள் 'கொண்டு வைக்க'த் தொண்டி முதலான துறைமுகங்களில் கப்பலேறிக் கண்டி முதலிய ஊர்களுக்கெல்லாம் சென்று, அக்கரைச் சீமையில் பாதி இக்கரையில் பாதி என்று வாழ்க்கை அமைத்துக் கொண்டு பொருளீட்டிச் செட்டி நாட்டிற்கும் சேர்த்த பெருமையில் முற்றிலும் செட்டிநாட்டிலேயே வாழ்ந்த நம் ஆயாள் - அப்பத்தாளின் பங்கு அதிகம் என்று சொன்னால் அது மிகையல்ல. செட்டிநாட்டிற்கு எதெல்லாம் பெருமையோ அதெல்லாம் அய்யாக்களின் நிழலில் நம் ஆயாள் - அப்பத்தாள் சாதித்தவையாகும்

அய்யாக்கள் பர்மாத்தேக்கு, இத்தாலி மார்பிள், ஜப்பான் பூக்கல் என்று வீடுகளை அழகுபடுத்தியபோது ஆயாள்- அப்பத்தாள், பர்மாப்பாய், ரெங்கோன் மரவை, மேல்மேன் ஜாடி, சீனத் தங்கம், ஜெர்மன் வைரம், ஜெர்மன் சிலேட்டு விளக்கு, ஜெர்மன் சட்டி, லண்டன் கெட்டில், லண்டன் கத்திரிக்கோல், காஷ்மீர் ரெத்தினக் கம்பளம், பவானி சமுக்காளம், காசிப்பட்டு, காசித்தட்டு, மைசூர்ச்சட்டி, குன்னக்குடித்தட்டு, திருவண்ணாமலைச் சூடம், மலேயா சாம்பிராணி, இராமேசுவரம் நாமக்கட்டி என்று நாட்டுப் பெயர் - ஊர்ப் பெயா சொல்லியே வெள்ளமாய்ச் சாமான் சேர்த்து மகிழ்ந்தாள். ஒரு ஆயாள் - அப்பத்தாள் வீட்டிற்கு வந்த சாமான் எல்லா ஆயாள் - அப்பத்தாள் வீட்டிலும் சேர்கின்ற போட்டி சத்தமில்லாமல் நடந்தது.

மாடு வளர்த்துப் பால், மோர் விற்றாள். தோட்டத்துப் புளியமரத்துப் புளி விற்றாள். அய்யாக்கள் கொண்டு வந்த மலேயா ரொட்டிப் பெட்டியை மக்கள், பேரப்பிள்ளை, தாய், பிள்ளை என்று கொடுத்து, இனி போதுமென்று விலைக்கும் கொடுத்துக் காசாக்கினாள். இப்படிச் சேர்ந்த சிறுவாட்டுப் பணத்தைத் தன் செல்வாக்கில் அடைத்துப் பெருக்கினாள்.

வண்டிக்காரன், மாட்டுக்காரன், தோட்டக்காரன், சமையல்காரன், மேலாள், வண்ணான் - வண்ணாத்தி, எடுபிடிக் குட்டி, கணக்கப்பிள்ளை என்று தனி அலுவலகத்தை இரண்டாங்கட்டிலிருந்தே நடத்தினாள்.

நான் சொர்க்கத்திற்குச் சென்றாலும் நரகத்திற்குச் சென்றாலும் நான் என் மனைவியுடனே இருக்க ஆசைப்படுகிறேன். ஏனெனில் என்னை மனிதனாக்கிய தெய்வம் அவள். அவளின்றி நான் எங்கும் இருக்கமுடியாது.

- ஆப்ரகாம் லிங்கன்

அய்யாக்கள் பர்மாக்காரி, சீனாக்காரி, விராலிமலை அம்மா என்று வழி தவறிச் சென்றதால் தனக்குப் பிள்ளையில்லையென்றாலும் வழி தவறாமல் குலம் வாழப் பிள்ளை கூட்டிக் குலம் வளர்த்தாள்.

புதுமை, கார்த்திகை சூப்பிடி, கல்யாணம், பொங்கல் பானை, பிள்ளையார் நோன்பு, பிள்ளைப் பேறு என்று எல்லா மங்கல நிகழ்ச்சிகளையும் மறவாது நடத்த வகை வகையாய் முறையெழுதிப் பட்டியலிட்டு மங்கலங்கள் விடுபடாது நடக்கச் செய்தாள். முறைதலையில் பணத் தொகைப் போட்டி அவள் செய்ததல்ல. வைபவங்களில் சுற்றம் விடுபடாது கூடிட விட்டுப் பிடித்து எல்லா முயற்சியும் மேற்கொண்டாள்.

கருப்பட்டிப் பணியாரம், பால்சோறு, கந்தரப்பம், வெள்ளைப் பணியாரம், பால்-தயிர்ப் பணியாரம், மசாலச் சீயம், உளுந்து வடை, கல்கண்டு வடை, இளந்தோசை, இட்லி, இடியப்பம், தேன்குழல், சீப்புச் சீடை, மணகோலம், கைமுறுக்கு, அதிரசம், தேன்குழல், வத்தல், கருவடகம் எல்லாம் ஆயாள் - அப்பத்தாள் செட்டிநாட்டிற்கு விட்டுச் சென்ற தனிச் சமையற்கலை. இக்கலை பழகிவர வைபவங்களில் முறை தலைகளில் பலகாரத்தைக் கட்டாயமாக்கினாள்.

ஆள் வைத்து அரிசி புடைத்தாள். இடியப்ப - தேன்குழல் - புட்டு மாவிடித்தாள். வேங்கரிசி மாவும் கண்டறிந்தாள். பொடியிடித்தாள். கத்தரி, அவரை, கொத்தவரை, மிளகாய், மாங்காய் எல்லாம் இரண்டாங்கட்டு வாசலில் வத்தலாகியது. வெள்ளைப்பூண்டு ஊறுகாய், எலுமிச்சை ஊறுகாய், சுண்டை - வெள்ளைப் பூண்டு - வெள்ளை மிளகாய் ஊறுகாய், கும்பகோணம் ஊறுகாய், மாங்காய்த் தொக்கு, மல்லித் தொக்கு என்று ஊறுகாய்த் தட்டில் கிண்ணம் பரப்பி இலையில் வைக்க இரண்டாங்கட்டைக் குட்டித் தொழிற்சாலையாக்கினாள்.

நெல் மூட்டையில் பூச்சி வராமலிருக்கப் புன்னை இலை பரப்பி, பாசிப் பயற்றில் வண்டு வராமலிருக்க மணல் பொட்டலம் போட்டு, வத்தல் வரலிகளை வெய்யிலில் காயப்போட்டு எடுத்துப் பாதுகாத்துச் சேர்க்கும் திறனும் உழைப்பும் பெற்றிருந்தாள்.

ஓலை சேர்த்துப் பதப்படுத்திக் கூடைமுடைந்தாள். சாயமேற்றிச் சிவப்போலைக் கொட்டான் முடைந்தாள். வெள்ளியில் கடகானும் சேர்த்தாள். வீட்டு நிலைப்படிக்குப் பாசித் தோரணமிட்டாள். அய்யா பேனா-மைக் கூட்டுக்கும் பேரப்பிள்ளை கிலிகிலிப்பைக்கும் பாசிமணி அங்கி பூட்டினாள். விதவிதமாய்த் தடுக்குப் பின்னினாள். தாயக்கட்டமும் தடுக்கி வைத்தாள். நடுவீட்டுக்குக் கோலமிட்டாள். இவையெல்லாம் அவள் வளர்த்த தனிச் செட்டிநாட்டுக் கலை.

காற்றைவிட கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்.

- சேக்ஸ்பியர்

காலையிலும் மாலையிலும் கருத்தோடும், சுத்தத்தோடும் விளக்கேற்றினாள். விளக்கேற்ற மருமகளையும் சிந்தையோடு தேடிச்சேர்த்தாள். வண்டிகட்டி வைத்தீஸ்வரன் கோயில், அழகர் மலை, குன்னக்குடி என்று சென்று வழிபட்டாள். காசிக்குச் சென்று இராமேசுவரம் செல்வது அவளுக்கு லட்சியம். திருவண்ணாமலைத் தீபம் பலமுறை கண்டு மகிழ்ந்தாள். குலதெய்வ அய்யனார், காளி, கருப்பர் கோயில்களுக்குத் தவறாது சென்று வந்தாள். குலதெய்வக் கோயிலில் குழந்தைக்குப் பேர் வைத்து மூன்று முறை முடியிறக்கிச் செவ்வாய்க்கும், தேருக்கும் சென்று வந்து தெய்வ வழிபாட்டைத் தொடர் வழிபாடாக்கினாள். கோவிலூர் பூசை, துளாவூர் பூசை என்று மடங்களுக்கும் சென்று வந்தாள். அய்யாக்கள் திருப்பணி செய்த கோயிலெல்லாம் பெருமிதமாய்ப் பட்டியலிட்டு எளிமையுடன் சென்று வந்தாள்.

எழுதப்படிக்கத் தெரியாதென்றாலும் சிவபுராணம் கேட்டுப் படிக்கச் சொல்லி மகிழ்வாள். இடியிடித்தால் சிவனையழைப்பாள். 'பொழுதெப்பப் புலரும்; பூவெப்ப மலரும்; சிவனெப்ப வருவார்; வரமெப்பத் தருவார்' என்று சொல்லி விடி வெள்ளி பார்த்திருப்பாள். தேள், பாம்பு வராதிருக்கக் கருப்பருக்கும், காளிக்கும் வேண்டுதல் செலுத்திடுவாள். தகரத்தில் கொடுத்தனுப்பும் எண்ணெய்ப் பலகாரத்தை முனி வந்து கெடுக்காமலிருக்க விளக்குமாறும் கரித்துண்டும் ஒடித்துப் போட்டு அனுப்பும் நம்பிக்கை அவளுக்குண்டு. இது மூட நம்பிக்கையென்று பேரன் பேத்திகள் பின்னாளில் விட்டுவிடுவார்கள் என்பது தெரியாதிருந்தாள்.

தன் ஆயாளுக்கும் அய்யாவுக்கும் வீட்டுப் படைப்பு, பொதுப் படைப்பு என்று வைத்துக் கூட்டுவழிபாட்டுக்கு வழிவகுத்தாள். படைப்புக்குத் தனித் தட்டுமுட்டுச் சாமான், வீட்டுக்குத் தனித் தட்டுமுட்டுச் சாமான், வைபவத்திற்குத் தனித் தட்டு முட்டுச் சாமான் என்று தனித் தனியாய் வெள்ளமாய்ச் சாமான் சேர்த்தாள். தன் மக்களுக்கும் முடையில்லாமல் சேர்த்து வைத்தாள். அவளைப்போல் சேமிக்காமல், அவள் வெள்ளமாய்ச் சேர்த்த சாமானெல்லாம் விலைபேசி விற்றுவிட்டு, அடுத்தவரிடம் சாமான் ஒசிகேட்டு, வாடகைக்கு எடுத்து ஒடிந்துபோய், அவள் தந்த சமையற்கலையை ஒதுக்கிவிட்டு, அய்யர் சமையலுக்கு ஆளாகி, அவள் பேத்தி செட்டி நாட்டுக்கு எப்படி பெருமை சேர்ப்பாள்?

ஆயாள் - அப்பத்தாள் ஏற்படுத்திய முறைதலையை அர்த்தத்தோடு பின்பற்றாமல் தேவையின்றிப் பணப்போட்டியை உண்டாக்கி, அவையெல்லாம் தொல்லையானவை என்று முறைதலைச் சடங்குகளையே விட்டுவிடுவது எப்படிச் செட்டிநாட்டிற்குப் பெருமை தரும்?

தெய்வ நம்பிக்கை, பல ஊர்த் தெய்வ வழிபாடு, தன்னம்பிக்கை, சேமிப்புத் திறன், நிர்வாகத் திறன், கலைத்திறன், உழைப்பு, வழிதவறாத வாழ்க்கை நெறிமுறைகள், சடங்குகள், குலப் பற்று, தொலைநோக்கு என்று இவையெல்லாம் நம் ஆயாள் - அப்பத்தாள் இன்றைய செட்டிநாட்டுப் பெருமைக்குத் தந்த பங்களிப்புகள். பேத்திகள் இக்குணங்களைக் கொள்வதால் நாளைய செட்டி நாட்டிற்குப் பெருமை தேடித்தர முடியும்.

பழிக்கு அஞ்சாத மனைவியை விட்டுவிட்டுத் தனியாக இருப்பதே நன்மை.

- நல்வழி

அள்ளக் குறையாத ஆச்சிமார் பண்புகள்



- உலகம்மை லோகநாதன், ஆத்தன்குடி.

நான் இந்தத் தலைப்பைத் தேர்வு செய்யக் காரணம் நான் ஒரு ஆச்சி என்பது மட்டுமல்ல. நம் குலவிளக்குகளாகத் திகழ்ந்த கண்ணகி, மணிமேகலை, காரைக்கால் அம்மையார் போன்றவர்களின் வாழ்க்கை வரலாறும் தான். ஆர்வம் காரணமாக எழுதியுள்ள இதில் உள்ள தவறான கருத்துக்களை நம் ஆச்சிமார்கள் தாய் மனதுடன் மன்னிப்பார்களாக.

நல்ல பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர்கள் நம் ஆச்சிமார்கள். ஆச்சியின் நல்லாட்சிக்கு உறுதுணைபுரிவார்கள் நம் செட்டியார்கள்.

'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' என்பதைப்போல நம் ஆச்சிகளுக்குக் குடும்ப நிர்வாகம் என்பது உடன் பிறந்த கலை. எப்படியெனில் இன்றைய வங்கிகளின் செயல்பாடுகளை ஏன் இன்னும் வங்கிகளையே ஆரம்பித்துத் திறம்படி நடத்தியது நம் இனம். வேறு எந்த சமூகத்தினரிடமும் இல்லாத சிறப்பு நம் ஆச்சிகளிடம் உள்ள சிக்கனம்.

நம் ஆச்சிகளின் நிர்வாகத் திறமை கண்டு நான் எத்தனையோ முறை வியந்திருக்கின்றேன். ஒரு வீட்டை நிர்வாகம் செய்ய இத்தனை திறமைகளைத் தன்னிடத்தில் கொண்டு உள்ளார்களே, இவர்களிடம் பெரிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டால் எவ்வளவு சிறந்து விளங்க முடியும் என்று சிந்தித்து இருக்கின்றேன்.

அடுப்படி முதல் செட்டியார் செல்லும் வரை, ஏன் அயல்நாடு சென்ற பின்னும் ஆச்சிகளின் நிர்வாகம் கவனித்து இருக்கின்றீர்களா? அறுநூறு ரூபாய் என்றாலும் ஆறு லட்சம் ரூபாய் வருமானம் என்றாலும் நிதானம் தவறாமல் குடும்பம் நடத்துவார்கள்.

உப்பு முதல் சர்க்கரை வரை பொருட்களைப் பருவ காலத்தில் வாங்கி அதனைப் பாதுகாத்துச் சிக்கனமாகச் செலவு செய்யும் ஆச்சிகளின் திறமையில் ஒரு சதவிகிதம் இன்று ஆட்சி நடத்துபவர்களிடம் இருந்தால் நம் நாட்டின் பொருளாதாரம் எவ்வளவோ உயர்ந்திருக்கும்.

நானூறு பெண்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் நாலைந்து பெண்கள்தாம் உயிரோடு இருக்கிறார்கள். என் பாட்டிக் குத்தாய் உலக்கை பிடித்து நெற்குத்தி வந்தாள். என் பாட்டி ஆட்டுக்கல்லில் மாவு அரைத்தாள். என் மனைவி கையில் கரண்டி பிடிப்பதுடன் சரி என் மகள் ஊசியும் நூலும் பிடிக்கிறாள். என் பேத்தி எதை வைத்திருப்பாளோ?

- கி.ஆ.பெ. விஸ்வநாதம்

‘ஆற்றில் போட்டாலும் அளந்து போடு’ என்பது பழமொழி மட்டுமல்ல. நமது குலமொழியும் கூட.

அன்று முதல் இன்றுவரை ஆச்சிகளின் திட்டமிடுதலும் சிக்கனமுமே செட்டியார், கொண்டு விற்கப் போன காலம் தொட்டு தற்பொழுது கொண்டு வந்ததை விற்கும் காலத்திலும் பயன்படுகின்றது. செட்டியார்கள் ஒரு காலத்தில் ரங்கூன், பர்மா என்று சென்று ஈட்டிய பொருட்களைப் பாதுகாத்து அதனைப் பிள்ளைகளுக்கும் பிற்காலத்திற்கும் உறவினர்களுக்கும் திறம்பட வகுத்து வைத்திருந்த காரணத்தினாலேயே நம் செட்டியார்கள் தொழில் செய்து திரும்பி வந்து நிம்மதியாக வாழமுடிகிறது.

சிறந்த பொருட்களைச் சீசனில் வாங்கி சேமித்துச் சிறந்த கொள்முதல் மேலாளராகவும் நாலு பேருக்குச் சமைத்ததை திடீரெனப் பத்துபேர் வந்து விட்டால் அங்கே சிறந்த உற்பத்தி மேலாளராகவும் உறவினர் திருமணம், திருவிழா இவற்றை முன்கூட்டித் தீர்மானித்து மிச்சம் பிடித்துச் சமாளிப்பதில் நீதி மேலாளராகவும், சமைக்கும் அரிசியில் பிடியரிசி எடுத்து வைத்துத் தர்மகர்த்தாக்களாகவும் சிறந்து விளங்குகின்றார்கள்.

இப்போதைய அரசாங்கம் கட்டாய விருப்ப ஓய்வை அமல்படுத்தி நமக்கு ஒரு குறிப்பிட்ட தொகையுடன் வீட்டிற்கு அனுப்புகின்றது. (அதுவும் நமது சேமிப்பிலிருந்தே) அதுவும் நம் ஆச்சிகளின் திட்டமே! ஆம் செட்டியார்கள் சம்பாதித்த காலத்தில் சேமித்ததையே வயதான காலத்திற்கு என்று சேமித்தபடியால் அவர்கள் விரும்பியபடி வயோதிகத்தில் நிம்மதியாக வாழ முடிந்தது.

ஆச்சிகளின் சேமிப்பு என்பது அளவிட முடியாத, இன்னும் சொல்லப் போனால் அவசர காலத்தில் கைகொடுப்பதாகும். அள்ள அள்ளக் குறையாதது ஆகும். இதை யாரும் மறுக்க முடியாதது.

எப்படியெனில் அன்றே கோவலன் அனைத்தையும் (ஏன் தன்னையும்) இழந்து கண்ணகியிடம் வந்த பொழுதும் தன் கணவனை ஏற்று அவனுக்கு மீண்டும் முதலீடாகத் தன் கால் சிலம்புகளை அளித்தவள் கண்ணகி.

ஆச்சிகளில் எத்துணையோ பேர் பல பெரிய பதவிகளில் (வானொலி முதல் வைரம் மதிப்பீடு வரை) பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். நல்ல பல பண்புகளைத் தன்னகத்தே கொண்ட நம் குலப் பெண்கள் அடக்கமே உருவானவர்கள் - விளம்பரத்தை விரும்பாத சமூகத்தில் வந்தவர்கள் என்பதால் ‘நிறைகுடம் தளும்பாது’ என்ற பழமொழியை நிரூபித்தவர்கள்.

தன் கணவனை வெறுக்கும் பெண் அக்கணத்திலிருந்து வாழ்க்கையையே வெறுக்கும் மூலதனத்தைப் பெற்றுவிடுகிறாள்.

- யூரிபடிஸ்

ஆச்சிமார்களின் கலைத்திறமை காண வேண்டுமா? அவர்கள் சுற்றும் முறுக்கு வடை ஒன்றே போதுமே! ஓவியத் திறமை காண வேண்டுமா? நடு வீட்டுக் கோலம் ஒன்றே போதுமே! கைத்தொழிலும் கல்வியும் இணைந்து காணவேண்டுமா? கண்துணியில் 'ABCDயும், பிள்ளையாரும், ஆலிலைக் கண்ணனையும் கண்டதில்லையா? ஆச்சிகளின் பட்டுப்புடவை முந்தானையில் கோபுர முடிச்சைப் பார்த்ததுண்டா? ஒரு பெண் பிறந்தது முதல் அவளுக்காகச் சேமிக்கத் தொடங்கி அதை அவளின் திருமணத்தில் பரப்புவதில் அன்பும் கலையுணர்வும் வெளிப்படவில்லையா?

இன்னும் ஏட்டில் எழுதாத கவிதைகள், மனத்தோட்டத்தில் பூத்த மகரந்த மலர்கள், தாலாட்டுப் பாடல்கள், காதில் கேட்ட கவினுறு ஓசைச் சத்தத்தில் கணக்குப் பிழையின்றிக் கற்பனை நயமிகு கலை நயமும் மிகுந்த பாடல்கள் ஆக்கினாள். இது அடுத்த தலைமுறைக்கு ஒரு கவிதைச் சீதனம். அதில் என் மனதைக் கவர்ந்த பெண்மை போற்றும் தாலாட்டு

'கரும்போ இனிதேனோ
கற்கண்டோ சர்க்கரையோ
சர்க்கரையோ முக்கனியோ
கொடிக்கால் மருக்கொழுந்தோ கண்ணம்மா
கோதை கையிற் பூச்சரமோ
சாதி மருக்கொழுந்தோ கண்ணம்மா
சாமி கொடுத்த பூச்சரமோ'

என்பதாகும். மேலும் நம் பெண்கள் கற்றுகொடுப்பதிலும் முன்னணியில் விளங்குகின்றனர். அது பள்ளி ஆசிரியைகள், கல்லூரி விரிவுரையாளர்கள், என்று தொடங்கித் தையல் கலை ஏன் இரண்டு, நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டக் கற்றுக் கொடுப்பது வரை எங்கும் சிறந்து விளங்குகின்றனர்.

இத்துணை துறைகளிலும் சிறந்து விளங்கினாலும் ஒருசில சிறு குறைகளும் உள்ளன. மாமியார் சாமான் கேட்பது பற்றிக் குறை கூறுவது, விதவைகள், குழந்தை இல்லாதவர்களைப் பற்றிய தவறான எண்ணம் போன்றவை. இதை நீங்கள் மனம் வைத்தால் மாற்ற முடியும்.

குழந்தை இல்லாதவர்கள், விதவைகள் என்பது அவர்கள் விரும்பிய பட்டமா? இல்லையே? அது அவர்கள் செய்யாத தவற்றுக்கு அனுபவிக்கும் தண்டனை அத்தகைய வெந்த புண்ணில் நீங்கள் மீண்டும் வேல்பாய்ச்ச வேண்டுமா? எனவே அதை விடுத்து நீங்கள் சிந்தித்தால் நீங்கள் அவர்களுக்கு கொடுக்கக் கூடியது ஏராளம். அவர்கள் வேண்டுவது பணஉதவி அல்ல! அவர்தம் குழந்தைகளின் படிப்பு, திருமணம், மற்றும் முன்னேற்றத்திற்கு, உங்களின் அன்பும் ஆதரவும் ஆலோசனையும்

உண்மையான பெண் எவள்? ஆண் மகனுடைய உயர்ந்த அம்சங்கள் எல்லாம் தட்டியெழுப்பவும் அவைகளை கிரகிக்கவும் கூடிய ஆற்றல் வாய்ந்தவளே.

- டால்ஸ்டாய்

ஏன் உங்களிடம் உள்ள விலைமதிப்பற்ற அள்ள அள்ளக் குறையாத பாசமும் அரவணைப்பும் மட்டுமே!

மாமியார் சாமானோ சீதனமோ கொடுப்பதிலோ வாங்குவதிலோ தவறொன்றும் இல்லை! அது முறையாக இருக்கும் வரை சீதனம் என்பது ஒரு பெண்ணிற்கு அவளது பிறந்த வீட்டுச் சீராக அவள் சிறப்பாக வாழக் கொடுப்பதாகும். பரப்பும் சாமான்கள் என்பது ஒரு பெண் பிறந்த அன்றிலிருந்து சேர்த்து வைத்து ஒரு தாய் அவள் வசதியாக வாழ்வதற்காக அன்போடு அளிப்பதாகும். மாமியார் சாமான் என்பதும் தவறான ஒரு முறை அல்ல. 'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் அவனைச் சான்றோன் எனக் கேட்ட தாய். இங்கு நாம் அதை மாப்பிள்ளை என்றும் கொள்ளலாம். ஒரு பெண் தான் ஒரு மாப்பிள்ளையின் தாய் என்பதில் பெருமை கொள்கின்றாள். அவளை மேலும் பெருமைப் படுத்தவும் ஒரு தாயின் சந்தோஷத்தில் தன் பெண்ணின் வாழ்வு தொடங்கப்பட்டால் அது சிறப்பாக அமையும் என்பதற்காகவும் பெண்ணின் பெற்றோர் மாமியார் சாமான் அளிக்கின்றார்கள்.

மாமியார் சாமான் பற்றித் தவறான மதிப்பீடு கொண்டுள்ள இக்காலப் பெண்களே அன்று முதல் இன்றுவரை தன் குழந்தைக்குத் தாய்வீட்டில் அதுவும் தாய்மாமன் என்ன சீர் தருவான், தந்தான் என்று தானே எதிர்பார்க்கின்றார்கள்?

மாமியார் சாமான் கொடுப்பதும் வாங்குவதும் தவறு என்று பட்டிமன்றமும் மேடைப் பேச்சுக்களும் அனல்பறந்தாலும் உண்மை என்பது வேறு. எந்த மாமியாரும் மாமியார் சாமான் வாங்கி ஒரு வைர நகையோ ஏன் ஒரு தங்க நகையோ கூடச் செய்து அணிந்து கொள்வதில்லை. அந்தப் பணம் பெண்ணின் சேலைகள் மற்றும் தாலிக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதே உண்மை. ஏன் எந்தப் பெண்ணாவது எனக்கு ஒரு சேலை போதும், அதிலும் சாதாரணப் புடவை போதும் என்று சொல்வீர்களா? எத்தனை புடவை முதல் புடவை எத்தனை ஆயிரம்? ஒரு கரையா? இரு கரையா? என்று எத்தனை கேள்விகள்? தற்போது சில காலமாகப் பல நடுத்தர வர்க்க வீடுகளில் கூட மாமியார் சாமான் பணத்தைக் கூட பெண் மாப்பிள்ளைக்கு எதிர்காலத் தேவைக்காக வைப்புத் தொகையாகக் கொடுத்து விடுகின்றார்கள். இது ஒரு சிறிய மாற்றம் தான் என்றாலும் ஒரு பெரிய சக்தியாக மாற வாய்ப்புகள் அதிகம்.

ஒரு மகன், ஒருமகள் என மாறிவிட்ட இந்தக் காலத்தில் பெரும்பாலான வீடுகளில் மருமகளை மகளாக நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். பல துறைகளிலும் முன்னேறி உள்ள இக்காலப் பெண்களே 20 முதல் 25 வருடம் வரை மட்டுமே வாழ்ந்த தாய்வீட்டு உறவினரிடம் காட்டும் அதே பாசத்தையும் அன்பையும் ஏன் 70 முதல் 75 வருடம் வரை நாமும் நம் குழந்தைகளும் வாழப் போகும் புகுந்த வீட்டில் காட்டக் கூடாது. விதைத்தது விளையும் என்பதை அறியாதவர்களா நீங்கள்?

ஆணும் பெண்ணும் வில்லும் நாணும் போல்வர். பெண் ஆணை வளைத்தாலும் அவனுக்கே கீழ்ப்படிவாள். அவனை இழுத்தாலும் அவனையே பின் தொடர்வாள்.ஒருவரை விட்டு ஒருவர் உபயோகமிலர்.

- லாங்பெல்லோ

சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நம் செட்டியார்கள். இருப்பினும் அதை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆச்சிகளின் அனைத்துத் திறமைகளையும் அறிந்த நம் செட்டியார்கள் சிறுதொழில் முதல் பெரிய நிறுவனங்கள் வரை நிர்வாகப் பொறுப்புக்களை அவர்களிடம் அளித்துப் பாருங்களேன்.

ஆச்சிகள் அனைவரும் பட்டை தீட்டப்படாத வைரங்கள். அவற்றைப் பட்டை தீட்டி உங்களது மணி மகுடங்களில் பதித்தால் ஜொலிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய கோவிலூர் தலைமை ஆதீன பீடகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப சுவாமிகளின் நல்லாசியுடன் நிறைவு செய்கின்றேன்.

அயல்நாடுகளில் சொத்து பற்றிய அறிக்கை

திரைகடல் ஓடி திரவியம் தேடிய நகரத்தார் சமூகம் பர்மாவில் எத்தகைய இழப்புகளை இழந்தார்கள் என்பது எழுதிமாளாது. அயல் நாடுகளில் சொத்துகளை இழந்த நகரத்தார்கள் மீண்டும் அச் சொத்துகளைப் பெற வேண்டும் என்பதற்காக காரைக்குடியில் பார்த்திப வருசம் வைகாசி மாதம் 10ஆம் தேதி (23.5.1994) அன்று அயல்நாடுகளில் சொத்துரிமை பெற மாநாடு கூட்டியுள்ளார்கள். இம்மாநாட்டில் சங்கப் பொதுக் காரியதரிசி சு. சோமசுந்தரம் செட்டியார் 20 பக்க அறிக்கை ஒன்றை தாக்கல்படுத்தியுள்ளார்.

அறிக்கையில் ஒரு பகுதி

செட்டியார் அயல்நாட்டுச் சங்கம் மூலம் பர்மாவில் சொத்துரிமையுள்ளவர்களில் 446 நபர்கள் தங்கள் சொத்துக்களை அரசாங்கத்திடம் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சுமார் 200 நபர்கள் பர்மாவில் கடைகள் உள்ளவர்கள். மற்றவர்களுக்கு விவசாய நிலங்கள் மட்டும் இருக்கிறது. சுமார் 146 நபர்கள் நேரில் அரசாங்கங்களுக்கு லிஸ்ட்டு அனுப்பித் தங்கள் சொத்துக்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சுமார் 1800 நபர்கள் வரை தங்கள் சொத்துக்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை. மலேயா சம்பந்தமாக 56 நபர்கள் செட்டியார் அயல்நாட்டுச் சங்கம் மூலம் பதிவு செய்திருக்கிறார்கள்.

பெண்களே சரியான துணைவனைத் தேர்ந்தெடுப்பதுமட்டுமல்ல. திருமணம் செய்து கொள்வதற்குச் சரியான சமயத்தையும் தேர்ந்தெடுங்கள்.

- இந்திரா காந்தி



ஆச்சிமார்களின் தலைசிறந்த பண்புகள்

- அழ. அழகம்மை,

தலைவர், ஊராட்சி மன்றம், ஓ. சிறுவயல்

மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா - கவிமணி

மங்கையராகப் பிறக்க மாதவம் செய்திட வேண்டும். ஆச்சிமார்களாகப் பிறக்க அருந்தவம் செய்திட வேண்டும் என்று நான் உறுதியாகக் கூறுவேன். ஆச்சிமார்கள் என்றாலே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரமும் இவர்களுக்குச் சாலப் பொருந்தும் என்பதும் மிகையில்லை. ஆச்சிமார்கள் தமது கடமையில் தலைசிறந்து விளங்குவார்கள். கணவன்மார் செய்திடும் எல்லாப் பணிகளிலும் உறுதுணையாக இருந்து தம் கடமையைச் செவ்வனே நிறைவேற்றிடுவர். கணவன் மார் ஈட்டி வரும் பொருளில் குடும்பத்தைச் செவ்வனே வழிநடத்திச் செல்வர். அனாவசியமாகச் செலவழிக்காமல் சிக்கனமாகச் செலவு செய்து குடும்பத்தைச் சீரோடும் சிறப்போடும் வழிநடத்திச் செல்வர். ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்பது நமது செட்டிப் பெண்களுக்கு கைவந்தகலை! ஆச்சிமார்களின் கண்ணியத்தை அவர்களது நடையிலே செயலிலே சொல்லிலே நன்கு காணலாம்.

சொல் தவறாத பேச்சு வன்மையும் கண்டிப்புக் கலந்த சொல்வீச்சம், பிறர்மனம் கோணாத சொல் வளமும் இரக்கம் கலந்த அன்பும் கணவன்மார்கள், பிள்ளைகள், உறவினர்கள், வேலைக்காரர்கள் இவர்கள் அனைவரிடத்தில் காண்பிப்பதைக் காணலாம்.

தனக்கென ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொண்டிருப்பர். இன்னஇன்ன வேலைகள் தாம் தான் செய்யவேண்டும்; இந்த இடங்களுக்குத்தாம் செல்லவேண்டும்; இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரைமுறையுடன் வாழ்வார்கள்.

பிறந்த வீட்டுப் பெருமை சிறக்கப் புகுந்த வீட்டில் வாழ்வார்கள். புகுந்த வீட்டுப் பெருமை சிறக்க ஊரில் வாழ் வார்கள். மாமனார் மாமியார் மனம் கோணாதபடி நடந்து கொள்வார்கள். இல்லறம் சிறக்கத் தம் கணவன்மார் மனம் கோணாதவாறு நடந்து

அமுது தருபவள் அன்னை வாழ்வு தருபவள் மனைவி.


- தாகூர்

கொள்வார்கள். சமூகத்தில் தமக்கென ஓர் அந்தஸ்துடன் வாழ்வார்கள். வெளி வேலையிலும் வீட்டு வேலையிலும் தமது முழுக்கவனம் செலுத்திப் பெயர் பெற்று வாழ்வார்கள். ஒரு வேலை என்று எடுத்தால் தமது முழு கவனத்தையும் அதில் செலுத்திச் சிறப்பாகவும் சீக்கிரமாகவும் அதை முடித்து விடுவர்.

இறைவழிபாட்டில் அதிகக் கவனம் செலுத்துவர். சதுர்த்தி, கார்த்திகை, சஷ்டி, பிரதோஷம், பௌர்ணமி என்று விரதங்களைப் பரிபூர்ணமாக அனுஷ்டிப்பார்கள். அந்தக் காலத்திய எழுத்தறிவில்லாத ஆச்சிமார்களில் இருந்து இன்றைய தினம் கம்ப்யூட்டர் பயின்ற ஆச்சிமார்கள் வரை கணக்கு விஷயத்தில் கவனமுடன் இருப்பார்கள். கூடை பின்னுதல், பூவேலைப்பாடு, கோலம் போடுதல் என்ற விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

வீட்டுச் சாமான்கள் வாங்குவதாக இருந்தாலும் எந்த மாதத்தில் எந்தச் சாமான்கள் வாங்கிச் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும் என்று நன்கு அறிந்தவர்கள். அதிகமாகச் சாமான்கள் தேவைப்பட்டால் எங்கு மொத்தமாகக் கிடைக்குமோ அங்கு சென்று மொத்தமாகவும் தரமாகவும் விலை குறைவாகவும் வாங்கும் சாமர்த்தியம் ஆச்சிமார்களுக்கு மட்டுமே உண்டு என்று நான் அடித்துச் சொல்வேன்.

அந்தக் காலத்தில் இருந்தே கணவன்மார்கள் வெளிநாட்டில் வேலை பார்த்தபொழுது ஆச்சிமார்கள் இங்கேயிருந்து கொண்டு பிள்ளைகளைச் சீராட்டி வளர்த்து உறவினர்கள் மனம் கோணாமல் நடந்து வீட்டுக் காரியங்களை ஒருவராகவே இருந்து சிறப்பாக நடத்தி வந்தார்கள் என்பது உலகமே அறிந்த உண்மை.



திறமுடைய பெண்ணின் சிறந்த பண்பு சமயோசித அறிவாகும்.

- சேக்ஸ்பியர்



மேலும் நகரத்தார் பெண்குலம் செழிப்படைய

- அழ. வள்ளியம்மை, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,

கோட்டையூர்

கற்றறிந்தோர் பெண்களைக் காலங்காலமாக மதித்துப் போற்றி வந்திருக்கிறார்கள். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' - என்பார் வள்ளுவர். சங்கரரும் மற்றொரு சமயவாதியும் (மண்டன மிசிரர்) விவாதங்கள் செய்தபோது 'சரஸவாணி' - என்ற பெண்தான் நீதிபதியாக இருந்தாள். 'பெண் கிளையே பெரிய கிளை' - என்பது நகரத்தார் கூறும் பழமொழி. வேறு எச்சாதியினரையும் விட நகரத்தார் சமூகத்தில் அந்த நாள் செட்டியார்கள் ஆச்சிமார்களைக் கேட்டே அவர்கள் சம்மதத்தோடு எதையும் செய்தனர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை இது நடைமுறையில் இருந்தது. இது இன்று தொடர்ந்து உள்ளதா என்பதுதான் பெரிய கேள்வி. பெண்கள் மேலும் செழிப்படைய இன்னும் என்ன செய்யவேண்டும் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்!

சமபார்வையில்லை

பெண் பிறந்துவிட்டாலே எல்லாச் சமுதாயத்திலும் இன்று அச்சப்படுகிறார்கள். காரணம் திருமணச் செலவு. முறைதலைகள், நகைகள் வாங்குவது என்ற பொருளாதாரப் பிரச்சினைகள்தாம். நகரத்தார் சமூகத்தில் அடுத்தடுத்துப் பெண் பிறந்தாலோ அக்குடும்பமே நடுங்கிச் சோகத்தில் மூழ்கிவிடுகிறது. ஆணையும் பெண்ணையும் சமநிலையில் வைத்து வளர்ப்பதில்லை. ஆணைப்போற்றி வளர்ப்பதைவிடப் பெண்ணை மட்டம் தட்டிக் குறைவாகவே நடத்தி வளர்க்கிறார்கள்.

குறைந்த வாய்ப்பு

பெண் குழந்தையின் திறமைக்கு ஏற்ப அவளுக்கு நல்வாய்ப்பு கொடுப்பதில்லை. பெண்ணுக்கு உயர்கல்வி வழங்கவோ வேறு திறமைகளை வளர்க்கவோ அவளுடைய முன்னேற்றத்திற்குப் பெருஞ்செலவு செய்யவோ செல்வந்தர்கள் கூட முன்வருவதில்லை. காரணம் திருமணப் பிரச்சனைதான். இந்தக் குறுகிய மனப்பான்மை மாறி ஆண் - பெண் இருவரையும் சமமாக வளர்க்க வேண்டும்.

குடும்பத்தில் இக்கட்டுகள்

கணவன் - மனைவி உறவு பழைய காலம்போல் உள்ளதா? இன்று வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால், அவளுக்குக் கணவர் எந்த அளவு துணை நிற்கிறார்?

சந்தர்ப்பச் சூழ்நிலை ஏற்படும்போது பூனையான பெண்ணும் புலியாக மாறிவிடுவாள். கோழைத் தன்மை பெண்மைக் குரியதல்ல.

- டோடின்லாஸ்

அவள் கொண்டுவரும் ஊதியத்தைக் கணவரும் பிறரும் அனுபவிக்கும் அளவிற்கு, அவளுக்கு உரிமையும் உதவியும் வழங்குகிறார்களா? வெளியில் வேலை செய்யும் அவள், வீட்டிற்கு வந்தபின் அங்கேயும் உடல் உழைப்பைக் கொடுக்க வேண்டியுள்ளது. அவள் சோர்ந்து அலமலந்து போகிறாள். சில அசௌகரியமான நாட்களிலோ நோய்வாய்ப்பட்ட நாட்களிலோ கிழிந்தநாராய்க் கிடக்கின்றாள். இப்படிப்பட்ட நாட்களில் உடல், மனச் சோர்வுகளைப் புரிந்துகொண்டு குடும்ப உறுப்பினர்கள் அவளுக்கு உதவியாக இருக்கவேண்டுமல்லவா? அவளுக்கு ஆதரவு தருவதற்குப் பதிலாக ஆதங்கப்பட்டு வசைமாறி பொழியக் கூடாதல்லவா?

ஒரு பெண் உழைத்து, தான் கொண்டுவரும் ஊதியத்தில் தான் ஆசைப்படும் செலவைச் செய்வதற்குக் கூட கணவன் அல்லது அவரது பெற்றோரின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. அவளது நியாயமான ஆசைகளுக்குப் பெரியவர்கள் இசைவு தரவேண்டாமா? மனைவியிடம் கணவன் நம்பிக்கை வைக்க வேண்டும்.

தன்னினும் தன் மனைவி உயர்பதவியோ செல்வாக்கோ பெறுவதைச் சில கணவர்மார் தாழ்வு மனப்பான்மையாலும் குறுகிய நோக்கத்தாலும் அனுமதிப்பதில்லை. டாக்டராக, இன்ஜினியராக வேலைபார்க்கும் பெண்களைக் கூடச் சில கணவன்மார்கள் அடக்கி அழுத்திவைக்கவே எண்ணுகிறார்கள்; முயல்கிறார்கள். இதுவும் ஆண் ஆதிக்கந்தானே? இந்த முறை மாறவேண்டாமா? பெண்களுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் கணவன் வழங்க வேண்டும்.

இந்த இடத்தில் வேறு ஒன்றையும் நினைக்க வேண்டும். மிகுந்த ஊதியம் பெறும் பெண்கள் அதன் காரணமாகக் கர்வம் கொண்டு கணவனையும் அவர் உறவினரையும் துச்சமாக எண்ணுகின்றார்கள். இது மிகப்பெரிய குற்றம்! கணவனைக் கீழாக நினைக்கின்றபோது இவர்களது அன்பில் பிளவு ஏற்பட்டுச் சிறு சச்சரவு முதல் அடிதடி வரை வளர்ந்து குடும்ப ஒற்றுமை குலைகிறது. இந்நிலையும் மாற வேண்டும்.

பிற உறவுகளின் நிலை

அன்று அண்ணன் - தம்பியர் தம் உடன்பிறந்த பெண்ணிடம் பேரன்பு செலுத்தினர். தம்மால் முடிந்த அளவு முறைதலைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர். இதுபோல் பெண்ணும் தன் அண்ணன் தம்பியர் பொருளாதாரத்தில் சுமாராக இருந்தால் அவர்களுக்குத் தொழிலில் பங்குபலன் வைத்து அவர்களை மேலாக்கினர். ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து இரு குடும்பங்களும் முன்னுக்கு வர முனைந்து நின்றனர். ஆச்சி - தங்கச்சியரும் பிரியமாகவும் குடும்பப் பெருமைகளைப் பாதுகாத்தும் ஒழுகி வந்தனர். ஆனால் இன்றோ அண்ணன் - தம்பி; ஆச்சி - தங்கச்சி; நாத்தனார் - கொழுந்தனார் ஆகியோரின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மனதில் கொண்டு அதற்குத்தக அவர்களிடத்தில் அன்புகாட்டுவதில் - உறவு வைத்துக் கொள்வதில் தராதரம் காட்டுகிறார்கள். உறவைவிடப் பணத்திற்கு முதன்மை கொடுத்து அவர்களை அருகிலோ தூரத்திலோ வைத்து அன்பு செலுத்துகிறார்கள். இது மனிதப் பண்பிற்குச் சற்றும் பொருந்தாதது.

தன்னம்பிக்கையே பெண்மையின் வளர்ப்புத் தாய்.

- சிட்னி

பெற்றோர் - பிள்ளை உறவு

பண்டைய நாட்களில் செட்டியார் வியாபார நிமித்தம் அயலூருக்கோ, அயல் நாட்டிற்கோ செல்வது நம்குல வழக்கமாக இருந்தது. ஆகவே வீட்டுப் பொறுப்பு முழுவதும் ஆச்சியே ஏற்றுக் கொண்டாள். அவளது பரந்துபட்ட உலக அனுபவம், வழிவழியாக அவள் கற்றுவந்த பழக்கவழக்கம், குழந்தைகள் வளர்ப்புமுறை இவையெல்லாம் மிகச் சரியாக இருந்தன. இன்று பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்கிறார்கள். தனிக்குடித்தனம் காரணமாகச் சிறு குழந்தைகளை வளர்க்க முதியோர் யாரும் உடன் இல்லை. ஆகவே சிறு குழந்தைகளைக் 'காப்பு இல்லங்களில்' விடுகிறார்கள். குழந்தைகள் பெரியவரானதும் அவர்களுக்கு நண்பர்கள் அதிகமாகின்றனர். பல பழக்கவழக்கங்கள் உள்ள நண்பர்களோடு பழகுகிறார்கள். ஆகவே அவர்களைச் சீரான ஒரு கட்டுக்குள் வைப்பதற்கான சூழ்நிலை இன்று மாறிவிட்டது. குழந்தைக்குக் கிடைக்கும் அன்பும் அளவு பட்டுப் போனது. நல்ல - கெட்ட பழக்கங்கள் வருகின்றன. ஆகவே குழந்தைகளுக்குப் பெற்றோரிடம் மதிப்பு, மரியாதை, பயபக்தி இவை குறைகின்றன. பெற்றோரிடம் நண்பரைப் போல் பழகித் தான் தோன்றியாக நடக்கின்றனர். இதனால் குழந்தைகளின் எதிர்காலம் சிக்கலாகிவிடுகிறது. இவை வாராதிருக்க வேண்டுமானால் பெற்றோரின் கண்காணிப்பும், கட்டுப்பாடும் சரிவர இருக்கவேண்டும். கணிப்பொறி, அறிவியல் பற்றித் தெரிந்திருக்கும் அளவிற்கு மனித மனம் பற்றிய அறிவோ, உலகியல் அனுபவமோ கிடைக்காததால் ஏமாற்றமும், தடுமாற்றமும் ஏற்பட்டு அல்லல்படுகின்றனர்.

தொழில் வகையில் முன்னேற்றமா?

நம்மில் பெருந்தொழில், சிறுதொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு வங்கிகள் உதவி செய்யும் அளவு செல்வந்தர்கள் உதவுவதில்லை. அதாவது அரசியல் ரீதியாகப் பெறவேண்டிய உதவிகளையோ சந்தைப்படுத்தச் (மார்க்கெட்டிங்) செய்வதிலோ பெரியவர்கள் தம் செல்வாக்கைத் தந்து உதவுவதில்லை. இந்நிலை மாற வேண்டும்.

நகரத்தார் நிறுவனங்களில் வேலை பார்க்கும் நம்குலப் பெண்களுக்கு நிர்வாகத்தார், மற்ற இனத்தார் தரும் ஆதரவைப் போல நம்மவர்கள் முழு ஆதரவும் உதவி;ும் ஏனோ செய்வதில்லை. இந்நிலை சரியாகுமா?

சமுதாய இடையூறுகள்

அன்று அக்கம் பக்கம் இருப்பவர் வேற்றுச் சாதியினராக இருந்தாலும் சண்டை வம்பு இல்லாமல் இருந்தனர். மனித நேயத்தோடு உறவாகப் பழகினர். இன்று அடுக்குமாடி குடியிருப்பில் இருப்பதால் பல இனத்தாரோடு ஒன்றாக இருக்க வேண்டிய கட்டாயம்! ஆகவே நாம் நட்பைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்,

பெண் ஆணோடு சேர்ந்து நின்றால் எந்தப் பகையையும் வீழ்த்துவிப்பாள்.

- மாண்டெயன்

சண்டையிடக் கூடாது. அருகில் இருக்கும் பிறர் நம் மேன்மைகளைக் கண்டு அக்கப்போர் செய்தாலும் பொறுமையைக் கடைப்பிடித்து, விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும்.

முடிவுரை

விலக்கத்தக்கவை

1. குழந்தை வளர்ப்பிலேயே ஆண் - பெண் என்ற வேறுபாட்டுடன் வளர்க்கக் கூடாது.
2. கணவன் - மனைவி, உற்றார் - உறவினர் அதிகாரமனப்பான்மையோடு நடக்கக் கூடாது.
3. செல்வம் - செல்வாக்கு உள்ள பெண் திமிராகவும் உதாசீனப்படுத்தியும் நடக்கக் கூடாது.
4. உறவினர்கள் பொருளாதார ஏற்ற தாழ்வை முன்நிறுத்தி சண்டையிடக் கூடாது.
5. கணவன் - மனைவி இருவரும் மேல் - கீழ் என்ற போலி மனப்பான்மையோடு இருக்கக் கூடாது.
6. சுற்றமும், அக்கம்பக்கத்தாரும் பொறாமையோடும் விரோதத்தோடும் இருக்கக் கூடாது

வேண்டத்தக்கவை

1. யாவரும் மனித நேயத்தோடு நடக்க வேண்டும்.
2. சுயநல மறுப்பு, தியாகம் இப்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
3. நம்மவர்க்குப் பெரியவர்கள் இனப்பற்றோடு எல்லா நிலையிலும் எப்போதும் உதவ வேண்டும்.
4. குற்றம் கண்டவிடத்துப் பெரிய அளவில் தண்டிக்காமல் புத்திகூறித் திருத்த வேண்டும்.
5. ஒருவரை ஒருவர் மதித்து தரும நீதிப்படி நடக்க வேண்டும்.
6. எல்லோரிடமும் நட்பைப் பெருக்கிப் பொறுமையோடும் சகிப்புத் தன்மையோடும் நடக்க வேண்டும்.
7. ஆடம்பரத்தை விடுத்துச் சிக்கனமாக இருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் நடந்தால் நகரத்தார் பெண்குலம் மேலும் செழிப்படையும் என்பது உறுதி.

கைம்பெண் பாலைவனம்; அவள் மறுமணம் கொண்டால் சோலைவனம்.

- ந.சி. கந்தையா

சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! கூட்டுக் குடித்தனம் சிறந்தது!

மு. அண. மீனாட்சி, வலையபட்டி

நகரத்தார் சமூகத்தைப் பொறுத்தவரை கூட்டுக் குடித்தனமே சிறந்தது. சிக்கனமானது, அன்பானது. பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரை நீக்கிப் பாலை அருந்துமாப் போல் இக்கட்டுரையில் நல்லனவற்றைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு குற்றம் குறைகளை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு என்ற காலம் மாறி, 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்ற பாரதியின் கனவை நனவாக்கிய பெருமையில் நம் நகரத்தார் மக்களுக்கும் பங்கு உண்டு என்றெண்ணி மகிழ்ச்சி அடையலாம்.

இந்திய நாட்டில் மட்டும் அல்லாது நம் நகரத்தார் திரைகடலோடித் திரவியம் தேடிய பர்மா, இலங்கை, மலேசியா மட்டுமன்றி, இன்று நம் சகோதர சகோதரிகள் அமெரிக்கா, லண்டன், ரஷ்யா, கனடா, ஈரான், ஈராக், துபாய் போன்ற தொலை தூர நாடுகளிலேயும் டாக்டர், இன்ஜினியர் இன்னும் பல துறைகளில் பணியாற்றி நம் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித் தருவது போற்றத்தக்கது.

பண்டைக்காலப் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்ட நாம் ஏன் நம் சமூகப் பழக்கவழக்கங்களை மாற்றிக் காலத்துக்கேற்றாற் போல் வாழக் கூடாது? கூட்டுக் குடித்தனம் நம் சமூகத்திற்குச் சாலச் சிறந்தது. கூட்டுக் குடித்தனத்தால் நடைமுறைச் செலவுகள் குறையும், மாமியார் மருமகள் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும், மருமகள் கணவன் வீட்டார் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளலாம், மாமியார், நாத்தனார், கொழுந்தனுடன் தன் தாய் வீட்டுப் பழக்கங்களைப் பற்றிப் பேசி நல்லனவற்றை ஏற்றுக் குடும்பம் நடத்தலாம். ஒன்றாக வாழ்வதால் அன்பு, பாசம் உண்டாகும். குழந்தைகள் பிறந்ததும் ஒன்றாக இருப்பதால் அப்பத்தாள், ஐயா, சிற்றப்பார், அத்தை என்று பரிவும் பாசமும், பிணைப்பும் அன்பும் ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால் வீட்டுக்கு வந்ததும் வீட்டு வேலைகளை அவசர அவசரமாகச் செய்யாமல் குடும்பத்தாருடன் அலுவலகத்தில்

உனக்கு அமைதி அளிப்பது மனைவியன்றி வேறு எவரும் இல்லை.

- எமர்சன்

நடந்த நல்லது கெட்டது பற்றிப் பேசி மகிழலாம். சினிமா, கோயில் குளம் என்று போகமுடியும். தனிக்குடித்தனம் செய்வதால், கணவன் மனைவி இருவரும் சம்பாதிக்கும் திறமையுடையவர்களாகவோ, அல்லது தாய்வீடு, மாமியார் வீடு பொருள் உதவி செய்பவர்களாகவோ இருந்தால் தான் நிம்மதியாகக் குடும்பம் நடத்தமுடியும். நம் சமூகத்தார் மகளைப் போல் மகனைப் பாவிப்பது இல்லை.

கடைகளில் சம்பளத்திற்கு இருக்கும் பையன்கள் திருமணம் முடிந்த கையோடு தனிக்குடித்தனம் செய்யும் நிலை ஏற்படும் போது சம்பளப்பற்றாக்குறையினால் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். முதலில் புதுமனைவியின் ஆசைகளைத் தவிர்க்க முடியாமல் கடன் வாங்கியும், சீதனப் பணத்தை வாங்கியும் ஆசையைப் பூர்த்தி செய்கிறார்கள். அது முடிந்தபின் மனைவியின் வெள்ளிப் பாத்திரம், நகைகளை அடகு வைத்தோ, விற்றோ குடும்பம் சிலகாலம் நடத்தி பின் அதுவும் முடியாமல் ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக் கொண்டு தாயகம் திரும்புகிறார்கள். தாயகம் திரும்பும் மகனையோ, மருமகளையோ மாமன் மாமி கண்டு கொள்வதில்லை. ஆகவே அவர்கள் நிலையை எண்ணி மகளைப் பெற்றவர்கள் நெஞ்சு பொறுக்காமல் சிறு உதவிகளைச் செய்தாலும் பெரும்பாலும் முன்னேற முடிவதில்லை. நாம் இருவர் நமக்கிருவர் என்றெண்ணி வாழ்கின்ற காலத்தில் குழந்தைகளின் வளர்ப்புச் செலவும் கல்விச் செலவும், பெற்றோர், குழந்தைகளின் வைத்தியச் செலவும் நினைத்துப் பார்க்க முடியாத அளவு உயர்ந்துள்ளது. மலையத்தனை செல்வம் இருந்தாலும் வருமானம் இன்றி இருப்பின் குந்தி இருந்து உண்டால் குன்றும் குறையும் என்பது போல் சீக்கிரம் குறைந்து போகும். கூட்டுக் குடித்தனம் இருந்தால் ஒருவர் வருமானம் குறைவாக இருப்பின் மற்றொருவர் வருமானம் கூடுதலாக இருந்தால் நிரவி வாழலாம்''.

சிந்தியுங்கள்

குழந்தையே இல்லாமலும், குறைவற்ற செல்வமும், மற்றவர்களிடம் அன்பும் பாசமும் செலுத்தும் மனப்பக்குவம் உள்ளவர்கள் சுவீகாரம் எடுக்கலாம். அதுவும் பாலப்பருவக் குழந்தை 5 முதல் 7 வயதுக்குட்பட்ட மகனை எடுத்து பாசமும் படிப்பும் ஊட்டி வளர்க்க வேண்டும். மணம் முடிக்கும் வயதில் சுவீகாரம் எடுப்பதனால் பையனுக்கோ, பெற்றோருக்கோ மன ஒருமைப்பாடு ஏற்படாது. பெற்றோரிடம் பாசம், பரிவு, அன்புகாட்ட இயலாது. பெற்றெடுத்த தாய்வீட்டாரிடமும், மனைவியிடமும், மாமியார் வீட்டு வழியிலும் தான் உறவுவலுக்கும். சுவீகாரப் பெற்றோரிடம் இருக்கும் செல்வத்திற்குத் தக்கபடியும், அவர்கள் அதனை அந்த மகனுக்கு கொடுக்கும் அளவிலும் தான் எல்லாம் இருக்கும். எங்களைப் போல் நடுத்தரக் குடும்பத்தார் சுவீகாரம் எடுப்பது அறியாமை என்று நான் கற்றுக் கொண்டபாடம். நாம் செய்ய வேண்டியது நாம் இருக்கும் வரை அனுபவித்து மீதியை வீட்டுத் தலைவன் தலைவி பெயரால் அறக்கட்டளை ஏற்படுத்தி நம் சமூக ஏழைக் குழந்தைகள் கல்விக்கும், பெண்கள் திருமணத்திற்கும் பயன்படச் செய்யலாம்.

புரட்சிகள் என்றும் எங்கேயும் பெண் இன்றி நடந்ததில்லை.

\- மாஓ

மறுமணம் - மணமாற்றம் தேவை

மறுமணம், மனைவியை இழந்த நிலையிலும், வயது வந்த பெண் குழந்தை இல்லாதிருக்கும் பட்சத்திலும், தன்னைக் கட்டுப்படுத்தி வாழமுடியாத நிலையிருப்பின் செய்யலாம். மறுமணம் செய்துகொள்வோர் முதல் மனைவியின் குழந்தைகளை மறந்துவிடாது தாய் செய்வதைக் காட்டிலும் அதிகப்படியாகவே செய்ய வேண்டும். விவாகரத்து மனவேறுபாடு காரணமாகப் பிரிந்து வாழ முற்படும் தம்பதியர் விவாகரத்துச் செய்யக் கூடாது. ஊடலும் கூடலும் உலக இயல்பு. சிலகாலம் பிரிந்து இருந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ முற்படவேண்டும். அப்படியே விவாகரத்துச் செய்தாலும் அந்தப் பெண்ணுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளை அவரவர் தகுதிக்கேற்பச் செய்ய வேண்டும். அமெரிக்கா, லண்டன் சென்று வந்த நம் இனத்தார் இக்காலத்தில் கற்றுக் கொண்ட பாடம் விவாகரத்து. விவாகரத்து வேண்டாம். கணவன் மனைவி இருவரும் நீதி மன்றம் சென்று நம் குலப் பெருமையைக் கெடுக்க வேண்டாம். நம் ஆயாள் அப்பத்தாள் வாழ்ந்த காலம் போல் அடக்கமாய் வாழ்வோம்.

சீர்வரிசை

வரதட்சணை, சீர்வரிசைப் பொருட்கள், தங்க வைர நகைகள் அவரவர் தகுதிக்கேற்பப் பெண்வீட்டாரைச் சிரமத்திற்கு (கடனுக்கு) ஆளாக்காமல் வாங்கலாம். மாமியார் சாமானுக்கு இட்லிச் சட்டி, ஐஸ்பெட்டி, 3வருட முறை முறுக்கு, அதிரசம், இடியாப்பமா, அரிசி மூட்டை வாங்காமல் மற்ற இனத்தாரைப் போல் வரதட்சணை மட்டும் வாங்கி, ஒரு நாளில் திருமணத்தை நடத்தி முடித்துச் சீரும் சிறப்புமாக வாழ்வோமாக. வசதி அற்றவர்கள் அவரவர் நகரக்கோயில்களில் சிக்கனமாக திருமணத்தை நடத்தலாம்.

நம் சமூகத்தார் பெண்ணுக்குச் செய்வது போல் எல்லா வழிகளிலும் ஆணுக்கும் செய்து பெண்வீட்டார் கொடுக்கும் வரதட்சணையில் பங்கு போடாமல் திருமணச் செலவைத் தாங்களே ஏற்றுத் திருமண விழாவினை ஒரே நாளில் நடத்திச் சிக்கன முறையைக் கடைப்பிடித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கற்றுக் கொள்வோமாக.



அன்னை எப்பொழுதும் அன்னைதான். உலகில் புனிதத்திலும் புனிதமான பொருள் அவளே.

- கோல்ரிட்ஜ்

வாழ்வில் எளிமை என்றென்றும் இனிமை



ஷீலா சந்திரசேகரன், ஆத்தன்குடி

'நாட்டுக்கோட்டை செட்டியார்கள் வழக்கத்தில் கெட்டிமார்கள்' என்ற உண்மை நிலை மாறி தற்பொழுது 'செட்டி என்றால் போட்டி' என்ற நிலை உருவாகி உள்ளது. செட்டியார்களுடைய குடும்ப நிலையும், கொடுக்கல் வாங்கலும், கல்யாணம் மற்றும் இதர சடங்குகளும், அவர்களை மேம்படுத்தும் வகையிலும் ஒற்றுமையாக வாழத்துடிக்கும் வகையிலும் அமைந்திருந்தன. ஆனால் இன்று காலத்தின் கட்டாயத்தால் 'பணமே வாழ்க்கை' என்று உருவாகி உள்ள இந்த நிலை செட்டியார்களுடைய பழக்க வழக்கங்களை பாதிப்பிற்கு உள்ளாக்கி, அவர்களை விபரீதமான எதிர்காலத்திற்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

வராகன்களைக் கொண்டு அன்று நடத்தப்பட்ட கல்யாணங்கள் இன்று லட்சங்களை அடிப்படையாகக் கொண்டு வியாபாரமாக நடத்தப்படுகிறது. இன்று கல்யாணம் செய்து கொள்ளவிருக்கும் தம்பதியினருக்கு மனப் பொருத்தம் இருக்கிறதா என்று பார்ப்பதைவிட பணப்பொருத்தம் இருக்கிறதா என்று பார்ப்பதற்குத்தான் கல்யாணம் பேசிவிடுபவர்களுக்கு நேரம் சரியாக உள்ளது.

தங்கள் பண பலத்தையும் கௌரவத்தையும் காட்டுவதற்காக, கல்யாண வீடுகளில் பசிக்கு உணவு பாறிமாறுவதற்க்கு பதில் பெருமைக்கு உணவு பறிமாறும் நிலை உருவாகி உள்ளது. இதனால் பண்டங்கள் மட்டுமே வீணாகிறதே தவிர யாரும் பசியாறியதாகத் தெரியவில்லை.

திருமணம் போன்ற பெரிய விழாக்களுக்கு கொடுக்கல் வாங்கல் போல, இன்று, பிறந்த நாள் போன்ற சாதரண விழாக்களுக்குக்கூட கொடுக்கல் வாங்கல் நடக்கிறது. இது நம்மிடையே பாசத்தையும், பிணைப்பையும் உருவாக்குவதைவிட எதிர்பார்ப்பையும் அதனால் ஏற்படும் ஏமாற்றத்தையும், சச்சரவுகளையுமே பெரிது படுத்துகிறது.

அவரவர் வாழ்க்கையில் ஏற்படும் முன்னேற்றங்கள் அவர்கள் குடும்பத்தில் நிம்மதியை ஏற்படுத்துவதைவிட ஒவ்வொருவருக்குமிடையே போட்டியையும் பொறாமையையுமே ஏற்படுத்துகிறது.

மற்ற இனத்தவர்கள் இன்று பாசப் பிணைப்பாலும் ஒற்றுமையாலும் சொத்துகளும், அடிப்படை வசதிகளும் இல்லாத போதிலும் இன்று வாழ்க்கையில்

நன்றாக முன்னேறி உயர்ந்த நிலையில் உள்ளனர். பணவசதியும் நல்ல பழக்க வழக்கங்களும், தர்மம் செய்யும் கொடைத்திறனும் கோயில்கள் மேல் கொண்டுள்ள ஈடுபாடும் செட்டியார்களிடையே இருந்தபோதிலும் பணம் என்கிற சாதரணக் காகிதம் நம்முடைய வாழ்க்கைதடத்தையே மாற்றிக் கொண்டு வருகிறது. எளிமையைப் பற்றிப் பேசவும் எழுதவும் நாம் தயங்குவதில்லை. ஆனால் அப்படி வாழத்தான் தயங்குகிறோம். இந்த நிலையை மாற்றி நம் முன்னோர்களுடைய பெருமையைக் காப்பாற்றி வாழ்க்கையை சீர்படுத்தி கொண்டு செல்வது நம் கையில்தான் உள்ளது. நம்முடைய செல்வத்தை நற்பணிகளுக்கு பயன்படுத்தி மன நிறைவு அடைந்து கொள்ளலாமே. இதுவே நாம் வாழும் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கும்.

நகரத்தார் நிதி உதவி அறக்கட்டளைகள்

1. இராமசாமி விசாலாட்சி அறநிலை, விசாலம், சிட்பண்ட்ஸ் பள்ளத்தூர்.
2. ஏ.எம். எம் சாரிட்டிஸ் அறநிலை, சென்னை.
3. சிங்கப்பூர் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 451 செக்காலைச் சாலை, காரைக்குடி.
4. தைப்பிங் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், ஐந்தாம் எண் சாலை வலையபட்டி - 622411.
5. நகரத்தார் ஐக்கிய சங்கம், 68, பவளக்காரத் தெரு, சென்னை - 600 001.
6. பத்துபாகட் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகம், மெய்யப்பன் அம்பலம் தெரு, காரைக்குடி.
7. பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர் கோவில் நகரத்தார் அறநிலை, பிள்ளையார்பட்டி- 630 207.
8. பினாங்கு நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 450, செக்காலைச் சாலை, காரைக்குடி.
9. போரா நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம், 450, செக்காலைச் சாலை, காரைக்குடி.
10. மூவார் நாட்டுக் கோட்டைச் செட்டியார் அறப்பணிக் கழகம், 15, மார்த்தாண்டபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை - 622 001.
11. வைரவன் கோவில் நகரத்தார் சங்கம், வைரவன்பட்டி - 630 315.
12. ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிக்கழகம், சிவன் கோயில் மேற்கு வடம் போக்கித் தெரு, காரைக்குடி 630 001.
13. சிரம்பான் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அறப்பணிக்கழகம் கருதா ஊருணி வடக்கு, தேவகோட்டை - 630 302.

பொன்னுக்குச் சோதனை நெருப்பு; பெண்ணுக்குச் சோதனை பொன்; மனிதனுக்குச் சோதனை பெண்.
- அமெரிக்க பொன்மொழி



பெண்களுக்கு கல்வியும் வேலைவாய்ப்பும்

- கோமதி கண்ணப்பன், பாகனேரி

நகரத்தார் பெண்களின் கல்வி என்பது ஆரம்பக் கல்வியைத் தாண்டி உயர் நிலைப் பள்ளி, பட்டப்படிப்பு, தொழில் கல்வி என்பது ஒரு சில ஆயிரம் பேர்களிடையே இருந்தாலே அதிகம். ஏனெனில் நம்மவர் பெண் அதிகம் படித்தால் அதற்கேற்ற படிப்புள்ள மணமகனைத் தேடி அதிகமான மாமியார் சாமான் கொடுக்க வேண்டுமே என்பதிலும், கல்லூரிப் படிப்புக்குத் தேவையான பொருளுதவி செய்ய முடியாதவர்கள் என்ற நிலையிலும் ஆர்வமிருந்தும் படிக்க முடியாமலும் தகுந்த வேலை கிடைக்காமலும் இருந்து வருகின்றனர். பெண்கள் பல்வேறு துறைகளில் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்களின் கல்வித் தொழிலைச் சார்ந்ததாக இருக்குமாறு அமைத்து அதன் மூலம் பெண்களைத் தன் சொந்தக் காலில் நின்று தன்னுடைய குடும்பத்தையே காத்துக் கொள்ளச் செய்ய முடியும். 50 ஆண்டுகளுக்கு முன்பு கல்வியறிவற்ற, பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பப் பெண்கள், இளம் விதவைகள், பலவிதமான வீட்டுக்கு உபயோகமான பெட்டிகள், தடுக்குகள் முடைந்தும் பின்னல் வேலை செய்தும் பொருள் ஈட்டினார்கள் என்பது நடை முறையில் கண்ட ஒன்று. ஆனால் இன்றைய கால மாறுதலில் பெண்கள் தங்கள் சுயதேவைக்கு ஏற்பச் செய்யும் தொழில்களை முன் பணம் கொடுத்து ஊக்குவிக்கும் எண்ணமும், ஆதரிக்கும் போக்கும் நகரத்தார்களிடையே மறைந்து வருகிறது. எதையும் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களில் வாங்கி உபயோகித்தால் கௌரவம் மிக்கதாக நினைக்கிறார்கள்.

படித்திருந்தும் வேலை வாய்ப்பு இல்லாத பெண்களின் - திருமணம் இன்று மாமியார் சாமான் கொடுப்பதில் ஆரம்பித்துப் பலவிதமான சோதனைகளில் பெண்கள் முடங்கிப் போயிருக்கிறார்கள். பெண்களைத் தள்ளி வைப்பது என்பது அன்று நடைமுறை. இன்று பெண்கள் மிகக் கேவலமான முறையில் சித்தரித்துக் காட்டி அவளிடம் விவாகரத்துப் பெறும் அவலம் நிறைய உண்டாயிருக்கிறது. பெண்கள் கல்வியில், சமூக அக்கறையுள்ள அனைவரும் முனைப்புடன் செயல்பட்டு நடுத்தரக் குடும்ப, எளிய குடும்பப் பெண்கள் அனைவரும் உயர் கல்வி, ஏற்ற தொழிற் கல்வி சிறிய தொழில்கள் நடத்தப் பயிற்சிகள் அனைத்தும் பெறச் செய்யவேண்டும்.

பெண் கடவுளின் ஓர் ஒளிக்கதிர்

- உத்தின்ருமி

பெண்கள் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் பொருளீட்டும் வகையில் கல்வி, தொழில் அறிவு பெற்ற பின்னர்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையை மகளிர் மனதில் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். பெண்ணுக்கு ஏற்ற பையனைத் தேடித் திருமணம் செய்ய வேண்டும். மிகச் சிறிய எண்ணிக்கையிலான பெண்கள் அவர்கள் படிப்பை அளவுகோலாக உபயோகப்படுத்த எண்ணியுள்ள பையன்களின் ஆசை வார்த்தையில் மயங்கிக் கலப்புத் திருமணம் செய்து கொண்டு இரு குடும்பத்தினரின் ஆதரவும் இல்லாமல் வாழும் நிலைக்கும் ஆளாகியிருக்கிறார்கள். இவை தவிர்க்கப்பட வேண்டும்

நகரத்தார் சமூகம், பிற்படுத்தப்பட்ட சமூகம் என்ற பட்டியலில் கல்வி, வேலை வாய்ப்புக்காக அரசாங்கத்திடம் கோரவேண்டியதில்லை. நகரத்தார் சமூகமும், நமது **தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள்** போன்றோரும் முயன்றால் கோவில் சார்ந்த இடங்களையெல்லாம் தொழில் கல்விக் கூடங்களாக்கிப் பயிற்சி தந்து, பொருளாதாரத்தில் மகளிரை உயர்ந்தவர்களாக ஆக்க முடியும். உள்ளாட்சித் துறைகளில் பொறுப்பேற்று 96 ஊர்களிலும் நாட்டுக்கு நன்மை புரியும் அரசியல் வாதிகளாக ஆச்சிகள் ஆட்சி புரியும் நாள் வரவேண்டும்.



பொன்னுக்குச் சோதனை நெருப்பு; பெண்ணுக்குச் சோதனை பொன்; மனிதனுக்குச் சோதனை பெண்.
- அமெரிக்க பொன்மொழி

மறையும் உறவுப் பெயர்கள்



– உலகம்மை லோகநாதன், ஆத்தன்குடி.

அண்ணமுண்டி

செட்டிநாட்டுப் பெண்களைப் 'பெண்டுகள்' என்றும் மனைவியை பெண்டிர் என்றும் அழைப்பர். அண்ணன் மனைவி என்று பொருள்தரும் அண்ணன் பெண்டிர் என்பதே 'அண்ணமுண்டி' என்ற வழக்காகிவிட்டது.

சின்னத்தாள் – சித்தியாகிறது

சித்தப்பா மனைவியைப் பெண்டிர் என்ற சொல்லுடன் சேர்க்காமல் ஆத்தாள் என்ற சொல்லைச் சேர்த்து சின்னத்தாள் என்று விளிப்பர். இன்றையப் பெண் பிள்ளைகள் 'சித்தி' என்ற சொல்லுக்கு மாறிவிட்டார்கள்.

அயித்தியாண்டி

அத்தைமகள், அம்மான் மகள் வயதில் மூத்த நாத்தனார் என்று கணவனுக்கு ஆச்சி முறை உடைய அனைவரையும் அயித்தியாண்டி என்று விளிப்பர். அத்தன் என்றால் தலைவன். இச் சொல்லின் அடிப்படையில் ஆளுமை உடையவள் என்ற ஆண்டி என்ற சொல்லையும் இணைத்து இச் சொல் பிறந்திருக்கலாம்.

புதுமைப் பெண்கள் 'ஆன்டி' என்று பெண்மக்களை உறவு, இனப் பாகுபாடின்றி கூப்பிடத் தொடங்கிவிட்டனர்.

அயித்தை

அப்பச்சியுடன் பிறந்த பெண்ணையும், மாமியாரையும் 'அத்தை' என்ற சொல்லாலும், சில வேளைகளில் மருவிய சொல்லாக அயித்தை என்றும் அழைக்கின்றனர்.

அப்பச்சி வண்டி

தந்தை இரண்டாவது திருமணம் செய்து கொண்டால் முதல் தார மக்கள் இன்று 'சித்தி' என்றழைக்கின்றனர். பொது நிலையில் அம்மக்கள் 'அப்பச்சி பெண்டிர்' என்றழைப்பது மருவி அப்பச்சி வண்டி என்றாகிவிட்டது.

இருபது ஆண்டுகளாக ஒரு பெண் ஒரு ஆணை உருவாக்குகின்றாள். இரண்டு வினாடிகளில் ஒரு பெண் அவனை மாற்றிவிடுகிறாள்.

- கதே

அப்பத்தாள்

அப்பச்சியின் ஆத்தாளைக் குறிக்கும் சொல். அப்பன் - ஆத்தாள் கூட்டுச் சொல் அப்பத்தாள்.

அம்மா முண்டி

அம்மான் பெண்டிர் - அம்மாமுண்டி என்று திரிந்து விட்டது.

ஆச்சி

உடன் பிறந்தவர்களில் மூத்தவர்களைக் கூப்பிடப் பயன்படுத்தப்பட்ட இச்சொல் பெண்களில் பல வகையினரையும் (மூத்தவர், சித்தப்பா மனைவி) கூப்பிடும் பொதுச் சொல்லாக விளங்குகிறது. பிற இனத்தவரும் இச் சொல்லை விரும்பிப் புழங்கி வருகின்றனர்.

ஆத்தாள்

சிதையாமல் வழக்கில் அன்னையைக் குறிக்கும் சொல். இன்றையப் பிள்ளைகள் 'மம்மி' என்ற சொல்லைப் பயன்படுத்தி ஆத்தாள் என்ற சொல்லைப் போக்கடித்து விடுகின்றனர்.

ஆயாள்

ஆத்தாளுக்கு ஆத்தாளை ஆயாள் என்று கூப்பிடுகின்றனர். இச்சொல்லும் சிதையாமல் இருந்து வருகிறது.

கொழுதுனாமுண்டி

கொழுதுணார் பெண்டிர் என்ற சொல்லே இப்படி வழங்குகிறது. பெண்டிர் என்ற சொல்லே ஆண்டி, முண்டி என்றும் வழங்குகிறது.

கொழுந்தியாள்

மனைவியின் உடன் பிறந்த பெண்ணுக்குரிய சொல்.

சம்பந்தியாள்

உற்ற முறையில் புதிய தொடர்பான சம்பந்தம் வருவதால் மகன் மாமியாரும், மகள் மாமியாரும் சம்பந்தியார் என்றழைக்கப்பட்டனர்.

சின்னத்தாள்

சிதையாமல் வழங்கும் இச்சொல் தந்தையின் தம்பி மனைவியைக் குறிப்பதாகும்.

தங்கச்சி

தங்கமான தமிழ்ச்சொல். உடன் பிறந்த பெண்களுக்கும் வயதில் குறைந்த புதிய

அழகான பெண் கண்களுக்கு ஆனந்தத்தைத் தருகிறாள். பண்புள்ள பெண் இதயத்திற்கு ஆனந்தத்தை அளிக்கிறாள்.

- நெப்போலியன்

பெண்களையும், 'ஆச்சி' என்ற சொல்லைப் பயன்படுத்துவது போல பெரும் புழக்கத்தில் பயன்படுத்தும் சொல்லாகும்.

தம்பிவண்டி

தம்பியின் மனைவி என்ற பொருள். பெண்டிர் - வண்டியானது.

நாத்தனார்.

கணவன் உடன் பிறந்தவரை விளிப்பது. சிலப்பதிகாரத்தில் இச் சொல் 'நாத்தூண்' என்று வருகிறது.

பொண்டாட்டி

மனைவி, இல்லாள் என்ற சொல்லுக்குரிய பொருளுடைய சொல். பொருளறிய வேண்டிய சொல்லாக உள்ளது.

மகமுண்டி

மகனுடைய மனைவியே மகமுண்டி ஆகிவிட்டது. இச்சொற்களைத் தவிர பிற பெண்கள் உறவுமுறைப் பெயர்கள் பொருள் தெளிவாக உள்ளன. உதாரணம் மருமகள், சின்னப்பத்தாள், சின்னாயாள் போன்ற சொற்கள். உறவு, பாசம், என்னும் பண்புகளோடு இணைந்த சொற்களைப் போக்கிவிட்டு, சிஸ்டர், ஆன்டி, டாடி, மம்மி - முதலிய சொற்களைப் பயன்படுத்துவது மறையவேண்டும். பெற்றோர்கள் அவர்களைத் திருத்த வேண்டும்.

சொல்லில் அழகு தமிழ்ச் சொல்லே!

வெல்லத் தமிழ்ச் சொல் இருக்க வேண்டாத ஆங்கிலச் சொல் ஏனோ?

பூவுலகில் நரகமும், சொர்க்கமும் பெண்கள் வசமே அடங்கியுள்ளன.

- டென்னிசன்



அவநம்பிக்கையும், அதீத நம்பிக்கையும்

- கா. வள்ளியம்மை, கானாடுகாத்தான்

என் மனம் முழுதும் கேள்விக் குறிகள். இன்று இளைஞர்களுக்கு இருக்கும் முக்கியப் பிரச்சினை தன்னம்பிக்கையின்மையா? அல்லது தங்கள் மீது கொண்டிருக்கும் அதீத நம்பிக்கையா? (over confidence)

முதலில் நாம் தெளிவாக உணர வேண்டிய உண்மை ஒன்று உள்ளது. நம்முடைய குறைகளை நாம் தெள்ளத் தெளிவாக அலசி ஆராய்ந்து சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். நம்முடைய குறைகள் நமக்குத் தெரிந்தால் தான், அவற்றை நாம் ஏற்றுக் கொண்டால் தான், நாம் அவற்றிலிருந்து மீள முடியும்.

நம்பிக்கை இருப்பவர்ளே மகத்தான மனிதர்களாக மாறியிருக்கிறார்கள். 'என்னால் முடியும்' என எண்ணுவது நம்பிக்கை என்றால், 'என்னைத் தவிர எவனாலும் முடியாது' என்று எண்ணுவது அதீத நம்பிக்கையாகும்.

அதீத நம்பிக்கையுடையவர்கள், அடுத்தவர்கள் தான் தங்களுடைய வீழ்ச்சிக்குக் காரணம் என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வார்கள்.

நாம் நம்முடைய உண்மையான ஆற்றலை மட்டுமல்ல; பலவீனங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். ஆற்றல்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வது செலவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் வரவுகளை மட்டும் நினைத்து மகிழ்வதைப் போலத் தவறானதாகும்.

வாழ்க்கையில் எத்தனை முறை 'விழுந்தீர்கள்' என்பது முக்கியமில்லை; வாழ்க்கையில் எத்தனை முறை 'எழுந்தீர்கள்' என்பது தான் முக்கியம்.

'வெற்றி மீது வெறி கொண்டு, தன்னம்பிக்கையுடன் போராடு! ஒரு நாள் வாழ்க்கையின் வெற்றிப் படிகளில் நீ இருப்பாய்.'

பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள்; எல்லாவற்றுக்கும் விளக்கு; அவனுடைய எண்ணங்கள்; ஆற்றல்கள்; தைரியம் என்பன அவளுடைய அன்பு என்னும் ஆற்றிலிருந்து தோன்றியவை.

- ஜேம்ஸ் எல்லிஸ்

உவகையுடன் உறுதி கொள்வோம்.

- வள்ளியம்மை சுப்பிரமணியன், புதுக்கோட்டை




''பாருக்குள்ளே பிறந்த பதுமை - இவள்
பாரதி கண்ட புதுமை - என்றும்
எமக்கு இனிமை - இவளை
நினைத்தால் நமக்குப் பெருமை''

விந்தை மனிதர் தலைகவிழ வித்திட்டோம் நாமெல்லாம்
புதுமைகள் படைப்பதற்குப் புறப்படுவோம் - ஆம்
பெண்குலம் தழைத்தோங்கப் பெருமுயற்சி கொண்டிடுவோம்
செட்டாக வாழ்பவராம் செட்டித் திருமக்கள்
சீரெல்லாம் காக்கின்ற சிறப்புகள் பெற்றவராம்
நகரத்தார் குலம்சிறக்க வந்தவராம் நங்கையர் நாம்!
சீர்வரிசை அதில்நாமோர் சீர்திருத்தம் கண்டிடுவோம்
நம்முடைய திறத்தாலே புதுமைகளைப் படைத்திடுவோம்
முறைதலைகள் வாங்கிடாது தலைமுறையை வென்றிடுவோம்
வறுமை நிலை அகல வழிகள் பல செய்திடுவோம்
வெளிநாடு முழுவதிலும் வெற்றிக்கொடி நாட்டிடுவோம்
பல்வேறு துறையினிலும் பதவிகள் தாம் பெற்று
சாதனை புரிந்துநாம் சரித்திரம் படைத்திடுவோம்
விஞ்ஞான உலகிதனில் சான்றிதழ்கள் பலகாண
அணுகுமுறை கொண்டிடுவோம் ஆக்கங்கள் படைத்திடுவோம்
கணக்கியலில் கலை தேர்ந்தோர் நம்மினத்தார் என்றிடினும்
புதுயுகத்தார் எனும் அளவில் புதுமைகளைக் கண்டிடுவோம்
கடல் கடந்த பாசமதோ கடுகளவும் குன்றாது
நொடிப்பொழுதும் நேசத்தை நோகாமல் காத்திடுவோம்
தீஞ்சுவை குன்றிடாமல் செந்தமிழைக் காப்பதுபோல்
செம்மையுடன் எந்நாளும் நம்மினத்தை உயர்த்திடுவோம்
பண்பாட்டில் எந்நாளும் மேம்பாட்டைக் கண்டிடவே
உறுதிதனைக் கொண்டிடுவோம் வாழ்வினிலே உயர்ந்திடுவோம்
நம்குலம் தழைத்தோங்க நாட்டமுடன் நங்கையரே!
ஒற்றுமைக்கரம் தந்திடவே விரைவினிலே வந்திடுக!

பெண்ணின் மடியிலே இறையன்பு வளர்கிறது.

- அல்லாமா இக்பால்

செட்டிநாட்டில் இராமாயணம் படித்தல்



நகரத்தார்கள் சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்து வருபவர்கள் என்பது வரலாற்று உண்மை. அதே நேரத்தில் ஆழமான சைவப்பற்றுடைய நகரத்தார்கள் பிறசமய வெறுப்பாளர்கள் அல்லர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். எனவேதான் நகரத்தார் இடையே வைணவத்தின் தாக்கம் ஊடாடியிருக்கிறது.

தென் திருப்பதி எனப் போற்றப்படும் அரியக்குடிப் பெருமாள் கோவிலுக்கும் திருமயம் கொங்கரத்தி ஆகிய வைணவத் தலங்கட்கும் நகரத்தார் குடும்பத்தினர் பலர் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் சனிக்கிழமை சென்று வழிபடுவதும் கருதத் தக்கது.

இந்த வைணவத் தாக்கத்தின் மற்றொரு வெளிப்பாடாக, மிக முக்கியமான வெளிப்பாடாக அமைவது 'இராமாயணம் படித்தல்' எனும் பழக்கமாகும். இராமனுடைய வரலாற்றை எளிய உரை நடையும், இடையிடையே நாட்டுப் பாடல் அமைப்பில் பாடல்களும் ஆங்காங்கே கம்பராமாணயச்

பெண்களால் அன்பைப் பிரிக்க முடியாது. பெருக்கத்தான் முடியும்.

- காந்திஜி

செய்யுள்களும் கலந்த தமிழில் எழுதி வைத்த ஓலைச் சுவடிகள். செட்டிநாட்டில் பல குடும்பங்களில் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் கூடியிருக்கும் அவையில் இந்த ஓலைச்சுவடி, ஆசிரியர் ஒருவரால் அல்லது குடும்பத்தினர் ஒருவரால் படிக்கப்படும்.

இவ்வாறு முதல் தேதி தொடங்கி முப்பது நாட்கள் படிப்பதும் உண்டு; அல்லது ஒரு வாரமோ, பதினைந்து நாட்களோ படிப்பதும் உண்டு.


இவ்வாறு படிக்கும் குடும்பத்திற்குக் குழந்தைச் செல்வமும் பிற நலங்களும் பெருகும் என்ற நம்பிக்கை நகரத்தாரிடையில் நிலவுகிறது. கால மாற்றத்திற்கேற்ப ஓலைச் சுவடிகள் காகிதங்களில் கையெழுத்துப் படியாகவோ அச்சுப் புத்தகங்களாகவோ மாற்றம் பெற்றுவிட்டன.

இந்த இராமாயணம் புத்தக வடிவில் இருந்தாலும் இன்னும் 'ஏடு' என்றே வழங்கப்பெறுகிறது. படைப்பு வீடுகளில் படைப்புக்குரிய பேழையை எவ்வாறு புனிதமாகப் பாதுகாத்து வைத்திருப்பரோ அவ்வாறே இந்த இராமாயண ஏடும் புனிதமாக இராமாயணம் படிப்போர் இல்லங்களில் பாதுகாக்கப்படுகிறது. புரட்டாசி மாதம் ஒன்றாம் தேதியோ, முதல் சனிக்கிழமையோ 'ஏடு எடுப்பது' என்பது ஒரு புனிதச் சடங்கு போலவே நிகழ்த்தப்படுகிறது. எவ்வளவு காலமாக இது நிகழ்ந்து வருகிறது எனத் திட்டமாகக் கூற இயலவில்லை.

ஆயினும் நற்சாந்து பட்டியில் சாமியாடிச் செட்டியார் என்ற பெயர் பெற்ற ஆண்டியப்ப செட்டியார் வீட்டில் 1843 முதல் இராமாயணம் படிக்கப்படுகிறது என்பது ஆதாரத்துடன் கூடிய உண்மை. அவர்கள் 1993இல் 150ஆம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

கம்பனடிப்பொடி சா. கணேசன் அவர்கள், தம் இல்லத்தில் தாம் சிறுவனாக இருக்கும் பொழுது புரட்டாசி மாதம் தோறும் இராமாயணம் படிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றமையே. அவரது கம்பராமாயண ஆர்வத்திற்கு அடித்தளமாக அமைந்தது.

இது சைவம் போற்றும் நகரத்தாரிடையே படிந்திருக்கும் ஒரு வைணவப் பண்பாட்டுக் கூறு.



பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை.

- *பாலஸ்தீனப் பழமொழி*



வள்ளி ஆச்சி பாடும் வள்ளிக்கதை தாலாட்டு

- க. காவேரி, காரைக்குடி

தாலாட்டுப் பாடத் தெரியுமா என்று இன்றைய நகரத்தார் கல்லூரிப் பெண்களைக் கேட்டால் கம்ப்யூட்டரும், பொறியியல் கல்லூரிக்கும், மருத்துவக் கல்லூரிக்கும் போகும் நாங்கள் ஏன் இதனை பாட நினைக்க வேண்டும் என்று பளார் என்று பதிலுரைப்பர். இன்றைக்கு வாழும் மூத்த சமுதாயத்தினர் அனைவரும் தாயார் தாலாட்டிசைக்க வளர்ந்தவர்கள்.

செட்டிநாட்டுத் தாலாட்டு என்ற சொல் இலக்கிய வரலாற்றில் ஏறிவிட்டது. இத் தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்தவர்கள், பாடியவர்கள் அதிகமாக ஆண்களே. இம் முயற்சியில் ஆச்சிமார்கள் பாடிவரும் தாலாட்டுக்களை முனைவர் தமிழண்ணல் மாவட்ட வாரியாகத் தொகுத்து தாலாட்டுக்கள் என்ற நூலாகவும், பொருள் வாரியாகத் தொகுத்து 'தாலாட்டுகள் ஐநூறு' என்ற நூலாகவும் வெளியிட்டனர். இப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டே இருந்ததால் தாலாட்டு அழகப்பன், தாலாட்டு குமரப்பன் என்ற அடைமொழிகளாலும் அழைக்கப்பட்டனர்.

ஆறு. அழகப்பன் தொகுத்த பாடல்களிலிருந்து எம்.எல். வசந்தகுமாரி ஒலிநாடாவாகப் பாடியுள்ளார். மேடைகளில் ஆத்தன்குடி காசிச்செட்டியார், வானதி திருநாவுக்கரசு முதலியோர் தாலாட்டுப் பாடல்களைப் பாடி மகிழ்விப்பர். இராய. சொ. தாலாட்டு அமைப்பில் தாலாட்டுக்கு இலக்கிய வடிவம் கொடுத்துள்ளார்.

ஆச்சிமார்கள் சிறிய தாலாட்டுப் பாடல்களைப் பாடிவந்தாலும் குழந்தையைத் தூங்கச் செய்ய நீண்ட தாலாட்டுப் பாடல்களையும் பாடி வந்திருக்கின்றனர். குறிப்பாக இராமர்கதை, சொக்கர் கதை, வள்ளி கதை இம்மூன்று கதைகளையும் பாடியுள்ளனர். தாய்ப்பாலுடன் குழந்தையின் காதுகளில் இதிகாசங்கள், புராணங்கள், தெய்வ வரலாறு முதலியவைகளையும் பாடியிருக்கிறார்கள். இதோ வள்ளித் திருமணம் கூத்து பார்த்து மகிழும் நகரத்தார் பெண்கள் வள்ளி ஆச்சி பாடும் வள்ளி வரலாற்றை இனிய நீலாம்பரி ராகத்தில் பாடுவது கீழே தரப்பட்டுள்ளது.

பெண்களால் அன்பைப் பிரிக்க முடியாது. பெருக்கத்தான் முடியும்.

- காந்திஜி

வள்ளித் தாலாட்டு

வள்ளிக் கொடியருகே
மான்கன்று போட்டதென்று
கானக் குறவரெல்லாம்
கண்டெடுத்து மண்துடைத்து
மண்துடைத்து மடியில் வைத்து
வள்ளியென்ற பேருமிட்டு
வடிவேல் துணையுமென்று
வளர்த்தார் வனந்தனிலே!
உழக்குத் தினைவிதைத்து - வள்ளி
உத்தமியைக் காவல்வைக்க - வள்ளி
ஓடிக் கிளிவிரட்டி
நாழித் தினைவிதைத்து - வள்ளி
நடந்து கிளிவிரட்டி
பதக்குத் தினைவிதைத்து - வள்ளி
பத்தினியைக் காவல்வைக்க - வள்ளி
பறந்து கிளிவிரட்டி
குறுணித் தினைவிதைத்து - வள்ளி
கொம்பனையைக் காவல்வைக்க - வள்ளி
கூவிக் கிளிவிரட்டி
எய்கக் கிளிவிரட்டி - வள்ளி
இருந்தாள் பரண்மீது!
கேசரிய நாரதரும் - வள்ளி
கிட்டவந்து குத்தவச்சார்
பேர்பெரிய நாரதரும் - வள்ளி
பெண்மயிலே என்று சொன்னார்
திட்டென்று கீழ்க்குதிச்சு
தெண்டனிட்டாள் நாரதரை!
''வாருமையா நாரதரே
வந்ததென்ன சேதி'' யென்றாள்!
''எங்கிருந்து எங்கு வந்தீர்?''
எனக்கறியக் கூறுமென்றாள்!
''பூலோகம் சென்று - வள்ளி
பூத்த மலரெடுத்துக்
தனிலோகம் சென்று - வள்ளி
தனித்த மலரெடுத்துக்
கந்தனுக்கு வள்ளியை - நான்
கல்யாணம் செய்யவந்தேன்
வேலவர்க்கு வள்ளியை - நான்
விவாகம் முடிக்கவந்தேன்!''
என்று சொல்லக் கேட்டு
எடுத்துரைத்தாள் வள்ளியவள்
''இல்லாத வார்த்தைகளை
எடுத்துரைத்தீர் நாரதரே!
அண்ணன்மார் ஏழுபேரும்
பொல்லாத கோபமுள்ளார்
கண்தப்பிப் போவதென்றால்
காற்றாய்ப் பறந்துவிடும்
உயிர்தப்பிப் போவதென்றால்
ஓடிவிடும் நாரதரே!''
என்று சொல்லக் கேட்டு
எடுத்துரைப்பார் நாரதரும்
''கந்தனுக்கு வள்ளியை - நான்
கல்யாணம் செய்யாவிட்டால்
வேலவர்க்கு வள்ளியை - நான்
விவாகம் முடிக்காவிட்டால்
நாரதரும் இல்லை'' யென்று
நல்ல சபதமிட்டார்!
பூணூலைக் காட்டிப்
பெரிய சபதமிட்டார்!
''நல்லதம்மா பெண்மயிலே
நான்வாரேன்?'' என்று சொல்லி
வேலவர்க்கு முன்பாக
வெகுவிரைவாய் வந்துநின்றார்
''வாருமையா நாரதரே!
வந்ததென்ன சேதியென்றார்
எங்கிருந்து எங்குவந்தீர்
எனக்கறியக் கூறு'' மென்றார்!
''வெள்ளிமலை தெற்கே

பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை.

- பாலஸ்தீனப் பழமொழி

வேடர் தினைப்புனத்தில்
வள்ளியென்றால் வள்ளி!
கொடிமேல் படரும்வள்ளி!
சுப்பையா உந்தனுக்குத்
தோதான வள்ளி அவள்!
சண்முகா உந்தனுக்குச்
சரியான வள்ளி அவள்!
கொடிபிறந்த வள்ளிக்குக்
கொண்டுவந்தார் வெள்ளானை
ஆனையைக் கண்டவுடன் - வள்ளி
அஞ்சிப் பயந்தொடுங்கி
ஆம் என்று சம்மதித்தாள்!
அடுக்கு வளையலிட்டு
ஆரணங்கை மாலையிட்டார்!
பச்சை வளையலிட்டுப்
பசுங்கிளியை மாலையிட்டார்!
சிவப்பு வளையலிட்டுச்
சீதையரை மாலையிட்டார்!
கறுப்பு வளையலிட்டுக்
காரிகையை மாலையிட்டார்!
கீழ்ச்சாதி என்னாமல்
கிளிமொழியை மாலையிட்டார்!
குறச்சாதி என்னாமல்
கொம்பனையை மாலையிட்டார்!
மறுச்சாதி என்னாமல்
வள்ளிதனை மாலையிட்டார்!



சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண்தான்.

- காந்திஜி

நகரத்தார் மகளிர் வாழ்க!



- ஏ.ஆர். சாரதா அருணாசலம், காரைக்குடி

ஆயிரம் பேர் கூடி அழகுமணி மண்டபத்தில்
தோரணம் பல கட்டித் தொங்குவாழை மரம் நட்டு!
முப்பத்து முக்கோடி தேவர்களின் சாட்சியாக
மூச்சைப் பிடித்தபடி முன்னூறு வேதம் ஓதி!
அக்கினி சாட்சிவைத்து அருந்ததி பார்க்க வைத்து!
அழகுமயிலை ஒருவனுக்கு அரிப்பணமாய் ஆக்கிவிட்டு!
முன்னூறு நாள் சுமந்து முழுதாகப் பார்த்த பெண்ணை!
தொண்ணூறு பவுன் போட்டு தொலைதூரம் அனுப்பிடுவார்!
கண்ணேறு பட்டதுபோல கைப்பிடித்துச் சென்ற மகள்!
காலமெல்லாம் போராடிக் கண்ணீரில் நீராடி!
முன்னேற வழியின்றி முக்காடுபோட்டு இன்று
மூலையிலேய கிடக்கின்ற 'பெண் ஒருத்தி'- நிலைபோல!
நகரத்தார் மகளிருக்கும் நிலைமைவர வேண்டாமென
நல்வாழ்வு பெற்றிடவே நாமின்று கூடுகிறோம்!
நகரத்தார் இனம்கண்ட நாடுபோற்றும் கண்ணகியும்
நகரத்தார் புகழ் பெற்ற காரைக்கால் அம்மையும்
நகரத்தார் பேர்பெற்ற பெண்குலத்துச் சின்னங்களாய்!
காலத்தால் அழியாமல் கண்ணெதிரே நிற்கின்றார்!
அடுப்படி தன்னில் இடுப்பொடிந்து இன்னல்படுவதை நிறுத்திடுவோம்!
படிப்படியாக முன்னேறப் பூட்டிய சிறையை உடைத்திடுவோம்!
நகரத்தார் மகளிர் 'தலைவி'யென நகரத்தார் மகளிர் 'தியாகி' என
நகரத்தார் மகளிர் 'எம்பி' என நகரத்தார் மகளிர் அமைச்சர் என
நகரத்தார் மகளிர் மேம்பாடுகான நிச்சயமாய் இனி வழிஉண்டு!
நானிலமும் நான் மறையும் வாழ்த்திடுமே நின்று!

அழகான பெண் - ஆண் மகனைச் சாந்தமாக்கவே படைத்திருக்கிறான் இறைவன். பெண்கள் இல்லாவிடில் ஆண்கள் வெறும் மிருகங்களே.

- தாமஸ் ஆட்வே

சேலத்தில் மகளிர் மாநாடு

- ஒரு கண்ணோட்டம்

சேலத்தில் நகரத்தார் மகளிர் மாநாடு 16.9.2001 அன்று சிறப்பாக நடைபெற்றது. சேலம் நகரத்தார் மகளிர் மன்றம் நடத்திய இம்மாநாட்டில் புதுக்கோட்டை, திருப்பூர் நகரத்தார், மகளிர் மன்றங்களைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். மேலும் சென்னை, மதுரை, கோவை, கரூர், தஞ்சாவூர் உட்பட்ட பல ஊர்களிலிருந்தும் நகரத்தார் மகளிர் ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டனர்.

தியாகராசர் தொழில் நுட்ப கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இம்மாநாட்டைத் திருமதி. சீதா வள்ளியப்பா குத்துவிளக்கேற்றித் துவக்கி வைத்தார்கள். வள்ளி சுப்ரமணியம், சிகப்பி ராமசாமி ஆகியோர் இறைவணக்கம் பாட விழா இனிதே துவங்கியது.

சேலம் நகரத்தார் மன்றத் தலைவி திருமதி. உமா பழனியப்பன் வரவேற்றும் பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளுக்கு இணையாக வளர்க்க வேண்டும். குழந்தைக்கு பொதுவான நல்ல பண்புகளைக் கற்றுத்தர வேண்டும் என்று தம் கருத்தினைக் கூறினார்கள்.

சிறப்பு விருந்தினராக சின்னத்திரைப் புகழ் திருமதி ரேவதி சங்கரன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கோட்டையூர் KVALRM வீட்டைச் சேர்ந்த திருமதி வள்ளி முத்தையாவின் உயிர் தோழியான இவர் நம் நகரத்தார்கள் குறித்து அனைத்துச் செய்திகளையும் அறிந்தவர் கொசுவச் சேலையுடன் தன்னை நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த கண்ணாத்தாள் ஆச்சி என்று கூறிக் கொண்டு மேடையேறினார். தாமும் வள்ளி முத்தையாவும் ஜாடியும் மூடியும் போல எனக் கூறி அவரோடு இணைந்து நிகழ்ச்சியை வழங்கினார் திருமதி. ரேவதி சங்கரன்.

நம் நகரத்தார் பெண்கள் மற்றும் சமூகத்தின் கடந்த காலப் பெருமைகளை நகைச்சுவையாகப் பாடல்கள் மூலம் கூறிய ரேவதி சங்கரன் 5 ரூபாய் 5 நகை என்று

மதப்பற்று இல்லாத அழகிய பெண்கள், நறுமணம் இல்லாத மலர்களைப் போன்றவர்.

- ஹூஸ்

கேட்பதையும் மூன்று வருஷ முறைகளை முதலிலேயே வாங்கிக் கொள்வதையும், சாமான் பரப்பிக் காட்டுவதையும் ஆயிரம் முறுக்குகள் மாவுருண்டை என்று கேட்பதையும் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் கதையாகப் பெண்ணைப் பெற்றவரிடம் பணம் வாங்கி டாம்பிகச் செலவுகள் செய்தும் சேலைகள் வாங்கியும் விரயம் செய்வதையும் U Turn எடுத்து நாம் வந்த வழியை திரும்பிப் பார்த்து இழந்த பெருமைகளை மீட்டிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஓர் அரிய நிகழ்ச்சியாக இது அமைந்தது சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த அவர் இது போன்ற நிகழ்ச்சிகளைச் செட்டிநாடு முழுவதும் நடத்தத் தயாரென்றும் இவற்றின் மூலம் ஒரு சிலரேனும் திருந்தினால் கூட அது அவருக்கு வெற்றியாக அமையும் என்றும் கூறினார்கள். பின்னர் மன்றச் செயலர் திருமதி. லட்சுமி சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

அடுத்ததாக மகளிர் நேரம் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இதில் மதுரை மீனாட்சி கல்லூரி பேராசிரியை திருமதி. அன்பு மீனாள் முதலில் பேசினார். அவர் நகரத்தார் சமூகத்தில் தான் பெண்ணாகப் பிறந்தது குறித்துப் பெருமைப்படுவதாகக் கூறினார். நம் செட்டியார்கள் ஈட்டும் பொருளை ஆச்சிகள் அழகாக வகுத்துக், காக்கும் பாங்கினையும், கணவன்மார்கள் கொண்டு விற்கச் சென்ற போது தனியொருவராக வீடு / குடும்பம் ஆகியவற்றை செவ்வனே பேணிய விதத்தையும் அவர்களது தமிழறிவு, சொல்லாட்சி, எளிமை, கலைத்திறன் ஆகியவற்றையும் நினைவு கூர்ந்து பெருமைப்பட்டார்கள்.

இன்று இடைப்பட்ட காலத்தில் பொருளாதாரத் தொய்வு ஏற்பட்ட நிலையில் முதிர் கன்னிகள் உருவாகி வருவதையும் ''முறை'' என்ற பெயரில் முறையற்ற செயல்கள் நடப்பதையும் சொல்லி வருந்தினார். பெருமைக்காகவும், பணத்துக்காகவும் பெண் எடுக்காது பண்புக்காகவும் படிப்பிற்காகவும் தரமான குடும்பங்களிலிருந்து பெண்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்றார்.

இன்று மீண்டும் நம் இளைஞர்கள் அயல்நாடுகள் சென்று பொருளீட்டுகின்றனர். பழைய பொற்காலம் திரும்பும் காலம் வந்து விட்டது. நமது பெண்களுக்கு முறை தலைகள் கேட்பதில் உள்ள தீங்கினை உணர்ந்துவிட்டனர். இனி அவற்றை ஒழிக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறினார்.

அடுத்ததாக வள்ளி முத்தையா ரேவதி சங்கரனோடு வந்து நம்மினத்துப் பெருமைகளையும், நமக்கிருக்கும் கடமைகளையும் குறைகளை விடுத்து நிறைகளைப் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் பற்றி அழகிய தமிழில் ஒரு கவிதை வாசித்தார்.

பெண் நன்றாக இருக்கும் இடம்தான் செழிப்பாக இருக்கும். ஒரு நாட்டின் நலம் அந்நாட்டுப் பெண்களின் நிலையைப் பொறுத்ததே.

- திரு.வி.க.

அடுத்ததாக மூன்று மன்றங்களின் செயல்பாடுகள் குறித்தும் அம்மன்றங்கள் தங்கள் அறிக்கைகளைச் சமர்பித்தன. இறுதியாக சேலம் நகரத்தார் மகளிர் மன்றத்தின் சார்பில் இரு உறுதிமொழிகள் எடுப்பதற்கான பொருள்கள் குறித்து சிறு குறிப்புகள் வாசிக்கப்பட்டன. சுற்றுப்புறச்சூழலுக்கு ஊறு விளைவிக்கும். மக்காத தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதை இயன்றவரை தடுப்பது முதல் உறுதிமொழி.

இறந்தவுடன் அக்னிக்கு இரையாகி வீணாகும் கண்களைத் தானம் செய்வது இரண்டாவது உறுதிமொழி.

இவ்விரண்டுமே ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மதிய உணவுக்குப் பிறகு மூன்று சங்கங்களும் கலை நிகழ்ச்சிகள் அளித்தன. புதுக்கோட்டை மகளிர் பாடல் மற்றும் சிறப்புரை அளித்தனர். திருப்பூர் மகளிர் ஒரு பாடல் பாடியதுடன் ''நம்ம வீட்டுக் கல்யாணம்'' என்ற புதுமையான நாடகத்தையும் அளித்தனர். இறுதியாக சேலத்து மகளிர் 16 பேர் ''செட்டிநாட்டு விடுதலைக்கும்மி'' என்ற பாடலுக்குக் கும்மி அடித்து அனைவரையும் மகிழ்வித்தனர்.

பின்னர் அனைவரும் பங்கு கொண்ட நூதனமான விளையாட்டுகள் நடைபெற்று அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா இனிதே நிறைவுற்றது. விழாவிற்கு வந்த அனைவருக்கும் சேலம் மகளிர் சார்பில் பல பரிசுப் பொருட்கள் கொண்ட ஒரு பை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மாநாட்டில் பங்கு பெற்றோர் அனைவரும் மாநாட்டைச் சிறப்புற நடத்தியமைக்குத் திருமதி. உமா பழனியப்பன், திருமதி. லெட்சுமி சுப்பிரமணியம், திருமதி. மீனா சேது, திருமதி. மீனா நாராயணன் மற்றும் அனைத்து உறுப்பினர்களையும் பாராட்டினார்.

நன்றி. நகரத்தார் மலர்.

உலகிலேயே மிக உன்னதமான பொருள் பரிபூரணமடைந்த பெண்ணே.

- லவல்

இரங்கூனில் வீரப்பிரசங்கம்

இரங்கூனில் பிரபவ ஆண்டு தைத்திங்கள் 23, 24 ஆம் நாள்கள் தன வணிக வாலிபர் மாநாடு நடைபெற்றது.

சா. அ. ச. கடை அதிபர் சித. இராமன் செட்டியார் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து வரவேற்புப் பிரசங்கம் நிகழ்த்தினார். அமெரிக்காவில் விவேகானந்தர் ஆற்றிய பொழிவோடு ஒப்பிடத்தக்க அவர் பிரசங்கத்தில் சில பகுதிகளைத் தருகிறோம்:

உங்களது மகா நாட்டிற்கு ஓர் அரிய தலைவரைத் தெரிந்தெடுத்திருக்கிறீர்கள். திருவாளர் தியாக ராஜ செட்டியாரவர்கள் ஓர் நல்லிளைஞர். ஊக்கமும், மனோவலியும் மிகுந்தவர். ஆங்கிலங்கற்று இங்கிலாந்து சென்று வந்தவர். அவரது தாய்மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் அளவிடற்கரியன.

சமூக முன்னேற்றத்தில் சலிப்பற்ற உறுதியுடையவர். கதர்த் தொண்டைக் கனவிலுங் கருதுபவர். அவரது அறிவு தேங்கிக் கிடக்கும் குளத்தண்ணீரைப் போன்றதன்று. நம்மவரனைவரும் போகும் அதே பாதையிற் செல்லாது, புதுத் துறையிற் புகுந்து வேலை செய்பவர். அவர் ஒரு யந்திர சாஸ்திரி((Mechanical Engineer). மனம் வாக்கு செயல் ஒருமைப்பட்டவர்.

உங்களது சார்பாகவும் எனது சார்பாகவும் திருவாளர் தியாகராஜ செட்டியார் அவர்களின் தர்மபத்தினிக்கும், செட்டியாரவர்கட்கும், முகமன்கூறிப் பேரன்புடன் வரவேற்கிறேன். தியாகராஜர் அவர்கள் இல்லக் கிழத்தியோடு இவண் போந்ததை மிக மிகப் போற்றுகிறேன். பொருளற்ற பொய்ம்மைப் பழக்கத்தை உதறித் தள்ளிப் பத்தினியோடும் மரக்கலமேறிக் கடல் கடந்து, நம்மவரில் முதன் முதல் பர்மா வந்த பெருமை தியாகராஜர்க்கே உரியது. தியாகராஜரின் தியாகம் செப்புந் தரத்ததன்று. கண்மூடிப் பழக்கத்திற் கட்டுண்டிருப்போரின் வாதமும், வசவும், சுயநலப் புலிகளின் போலி உபதேசமும், தாம் கொண்ட நற்கொள்கையினின்றும் தியாகராஜரைத் திருப்பக்கூடவில்லை. அவ்வீரர் காட்டிய வழியை வாலிபர்கள் பின்பற்றுவார்களாக.

பெண்ணின் வாழ்வு அன்பின் சரித்திரம்

- துவிஜேந்திரலால்

நமது பழம் பெருமக்களின் குலப்பற்று மிகவும் போற்றற்குரியது. அவர்கள் ஏற்படுத்திய கட்டுப்பாடும் சட்டதிட்டங்களும் என்றும் மறக்கற் பாலவன்று. ஒவ்வொருவரும் தமது நன்மைக்கென வாழாது, சமூக நன்மைக்கென வாழ்ந்துவந்தனர். அக்கட்டுப்பாடு தளர்ந்து வருகின்றது. சட்ட திட்டங்களைப் பயபக்தியோடு போற்றிவந்த நம்மக்கள் தாங்களே கூடி, சகலரின் சம்மதத்தின் பேரில் செய்த தொண்ணூற்றாறூர்க் கூட்டத் தீர்மானங்களை யெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக்கி விட்டனர். அதனால் சமூகத்தில் பல இடுக்கண்கள் மறுபடியும் புகுந்துவிட்டன. சுபா சுப காலங்களில் வேடிக்கைச் செலவும், விநோதச் செலவும், ஆடம்பரச் செலவும் மிகுந்து போயின. மணப்பெண்களின் கிராக்கி குறையவில்லை. ஜாதீயத்

தலைவர்களெல்லாம் நம்பிக்கை இழந்து இரத்தக் கண்ணீர் சொரிகின்றனர். நான் வாலிபர்களை நம்பியிருக்கின்றேன். நீங்கள் உறுதிகொண்டால் சமூக சீர்திருத்தம் வெகுவிரைவில் நடக்கும்.

நமது சமூகத்தில் இளைஞர் மணமும் கிழமணமும் களையற்பாலது. எப்பொழுதும் மணமகனைவிட மணமகள் இரண்டு மூன்று வயது வரை இளையவளாயிருத்தல் வேண்டும். எக்காரணங்கொண்டும், தன்னின் மூத்த பெண்ணை மணத்தல் கூடாது. அடுத்த இந்திய சட்டசபைக் கூட்டத்தின் ஆலோசனைக்கு வரும் சம்மத வயது மசோதா நம் ஆதரவிற்குரியது. ஆண்மகனுக்குச் சம்மத வயது இருபத்தொன்று என்றும் பெண் மகளுக்கு பதினாறென்றும் சட்டம் செய்வது எவ்விதத்திலும் விரும்பத் தக்கது. முதலாவது வாலிபர் மகாநாட்டில் தீர்மானித்தபடி, வாலிப விதவைகளை மணப்பதற்கு உங்களில் சிலர் முன்வரல் வேண்டும். இளங் கைம்பெண்களின் நிலை அந்தோ! பரிதாபம்! அவர்களை மணப்பதற்கு முற்படுபவர்கள் நமது குலத்து வீரர்களாவார்கள். ''இப்பாழும் குலத்தில் ஏன் பிறந்தோம்'' என்று நினைந்து நினைந்து அவர்கள் உள்ளங் குழையாமற் செய்வது உங்கள் கடன், சாத்திரம் மீதும் கர்மம் மீதும் பழிசுமத்திவிட்டு வாளாவிருத்தல் கூடாது.

மற்றொரு பெரும் பிரச்சனை மனைவியை வெளிநாட்டிற்கு உடனழைத்துச் செல்லல். மனைவியுடன் கூட வாழல் வேண்டுமென வாலிபர்களாகிய நீங்கள் கொண்டுள்ள பேரவா பளிங்குக்கற்போலத் தெளிவாய் விளங்குகிறது. அவ்வுணர்ச்சி இயற்கையுணர்ச்சி; தெய்வீக உணர்ச்சி. ஆணும் பெண்ணும் கலந்து வாழலே வாழ்க்கை. ஆண்கள் தனித்து வாழ்கின்ற விடத்து ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் குன்றியிருத்தல் கண்கூடு. பெண்கொடிகள் ஆண்கொம்புகளைவிட்டுத் தனித்து நிற்றலும் இயலாது. அம்மையும் அப்பனும் ஆய அர்த்தநாரீசுவரர் உலகை ஆண்வடிவும் பெண் வடிவுமாக அமைத்து இருவரும் கூடிவாழ்வதற்கெனச் சமைத்தார். அக்கூட்டத்தைக் குலைப்பது கொடுமை, கொடுமை, மிகவும் கொடுமை.

நீ நல்ல பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாயா? தன் பெற்றோருக்கு நல்ல மகளாக வாழ்பவளையே நீ திருமணம் செய்துகொள்.

- புல்லர்

வாழ்க்கையின் நோக்கம் முக்தியடைதல். முக்திக்குச் சாதனம் இல்லறம். இல்லறத்திற்குறு பொருள் மாண்புடை மனைவி. மாண்புடை மனைவியைப் பிரிந்து, வெளிநாடேகி, வாலிபத்தைப் போக்குவது இல்லறமாகுமா? முக்திக்குரிய சாதனமாகுமா? அறிஞர்கள் விரும்பத் தகுந்ததா? அன்பர்களே! சிந்தியுங்கள்.

கேவலம் பொருளே நமது குறிக்கோளன்று. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லையெனினும். பொருளுறுபய னறியார் பெற்ற பொருளினாலும் உலகத்தில் இன்பமில்லையல்லவா? பொருள் பெருக்குவது மனைவி, மக்கள், சுற்றத்தார், நாட்டார், இன்புறுவதற்குத் தானே! பொருள் பெருக்குவதிலேயே நம்மவர்கள் தங்கள் காலமெல்லாம் போக்கின், மனைவி மக்களுடன் இல்லறம் நடத்தி இன்புறுவது எக்காலம்?

நம்மவர்களிற் பெரும்பாலோர் வெளிநாட்டில் தங்கள் வாலிபமெல்லாம் தனித்துக் கழிக்கின்றனர். இல்லாளின் பிரிவினையால் அவர்கள் படுந்துயர் இறைவனே அறிவர் அப்பிரிவை அநுபவித்தவர்க்கே அவ்வருத்தம் தெரியும்.

எனக்கு இப்பொழுது வயது நாற்பத்தெட்டாகிறது. இதில் 27 வருடம் பர்மாவிலும், மலேயாவிலும் கழித்துள்ளேன். எஞ்சி நின்ற 21 ஆண்டில், இளமைப் பருவத்தில் 15 நீக்கி, ஊரில் தங்காது நம் தாய்நாட்டில் சுற்றிய காலமெல்லாம் தள்ளிக் கணக்குப் பார்க்கின், எனது

இல்லத்தில் எவ்வளவு காலம் தங்கியிருத்தல் கூடுமென்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். இது நம்மவர்களிற் பெரும்பாலோர் அனுபவம். இவ்விதமிருப்போர் மணத்தலின் மணவாமை நன்று.

உடனழைத்து வருதலை எதிர்ப்போர் இங்குள்ளாரின் நிலையைச் சரிவர உயர்ந்தாரில்லை. சமூகக் கட்டுப்பாட்டைக் குலைத்துவிடவேண்டுமென்ற நோக்கங் கொண்டு உடனழைத்து வருதலை ஆதரிக்கின்றோமில்லை. உடனழைத்துவருதலை மறுப்போர்க்குச் சமூகத்தில் எவ்வளவு அபிமானமுள்ளதோ, அதைவிடப் பன்மடங்கு அதனை ஆதரிப்போர்மாட்டுமுள்ளது. சுருங்கக் கூறின் நமது குலநன்மையை உத்தேசித்தே உடனழைத்து வருதலை ஆதரிக்கின்றோம்.

பொறுப்பற்ற நிலையில் இக்கொள்கையைக் கூறவில்லை. மனைவியுடன் வசிப்பதால் வாணிபங்கெட்டுவிடும் என்று கூறுவோர் கூற்று வாதத்திற்கு நில்லாது.நம் தொழிலினும் அதிகக் கஷ்டமானதும், கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டியதுமான தொழில்களைச் செய்யும் குஜராத்தியர்களும் மார்வாரிகளும் ஆங்கிலேயர்களும் மனைவி மக்களுடன் வாழ்ந்து அதிக உற்சாகமாயிருப்பதால் தம் தொழிலை மிகக் கவனமாகப் பார்க்கிறார்கள். மனைவியைப் பிரிந்திருப்பவன், துக்கமுற்று, சோர்வுற்று,

அடக்கம், பொறுமை, புத்திக் கூர்மை, திறமை, தியாகம், பிறர் நலம் பேணுதல், எளிமை, அழகு இவையே, பெண்களின் மொத்த வடிவம்.


- திரு.வி.க

உலக வேலைகளில் இன்பமற்று, யந்திரத்தைப் போல 'செய்து தீரவேண்டுமே' என்ற எண்ணத்தால் வேலைகளைச் செய்துவருகிறான்.

இல்லறத்திலிருந்துகொண்டு இவ்விதம் துறவிகள் வாழ்வை நம்மனோர் பலர் மேற்கொள்ளுவதால் நமது குலம் விருத்தியடையாது, க்ஷீணித்து வருகின்றது. இயற்கையுணர்ச்சியைத் தடுத்தற் கறியாத இருதிறத்தாரும் அவ்வழிச் சென்று, உடல் நலனையும் உயிர் நலனையும் கெடுத்துக் கொண்டு நமது குலத்திற்குப் பெருந்தீமைசெய்து வருகின்றனர். இத்தீமைகட்கெல்லாம் காரணம் நமது குருட்டுப் பழக்கமே. இப்பழக்கத்தைப் போக்குவது உங்கள் பொறுப்பாகும்.

இக்கொள்கையை எதிர்ப்போரின் ஒவ்வொரு வாதத்திற்கும் அறிஞர்கள் ஒப்பச் சமாதானங் கூறமுடியும். மனைவியைச் சதா பிரிந்து வாழ்தலால் விளையும் தீமைகளும் எண்ணில. விரிவு அஞ்சி விடுக்கிறேன். இக்கொள்கைக்கு முரண்படுபவர்கள் தயை கூர்ந்து திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள் இயற்றியுள்ள 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்ற நூலைவாசிக்கக் கோருகிறேன்.

மனைவியுடன் இல்லறம் நடத்துவது நமது முதல் தர்மம். அதனால் நன்மை விளையினும் விளைக, தீமை விளையினும் விளைக. நமது வாணிபம் பெருகினும் சரி? கைவிட முடியாது. ஆதலால் உங்களில் இடம் பொருள் ஏவலுள்ளவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், மனைவி மக்களுடனிருந்து கொண்டு நமது குலத் தொழிலையும் செவ்வையாய்க் கவனித்துக் கொள்ளலாம் என்ற உறுதிவாய்ந்தவர்கள் தங்கள் மனைவிமக்களை உடனழைத்து வருவீர்களாக.



நன்றி கெட்ட நாய் கூட நம் வீட்டில் இருக்கலாம். ஆனால் நாவடக்கம் இல்லாத பெண் நம் வீட்டில் இருக்கவே கூடாது.

- நொஸலின்



சீர்வரிசை

– மீனாள் - சிதம்பரம், ஆ. முத்துப்பட்டணம்

நம் பெருமை மிக்க இந்த நகரத்தார் சமூகத்தில் ''சீர்வரிசை'' என்னும் சொல் ஏற்படுத்தும் பாதிப்புகளும், விளைவுகளும் ஏராளம். சீர்வரிசை என்று சொல்லப்படும் சாமான்கள், நகைகள் ஏனைய பொருள்கள் அனைத்துமே ஒரு பெண்ணுக்கு பெற்றோர் மணமுவந்து திருமணத்திற்காகக் கொடுக்கும் அன்புப் பரிசுகள் தாம். இவற்றில் அவர்களின் இனிய இல்லறத்திற்குத் தேவையான அளவு பயன்படுத்தக் கூடிய பொருள்கள் இன்றியமையாதவை. இதைத் தவிர, கொடுக்கப்படும் அல்லது கட்டாயமாகக் கேட்கப்படும் அளவுக்கதிகமான பொருட்களும், நகைகளுமே நம்முடைய பலவிதமான இன்னல்களுக்குக் காரணமாகின்றன.

வசதியுள்ள பலர் தங்களின் சமுதாய அந்தஸ்தைப் பறைசாற்றுவதற்காக அதிக அளவில் சாமான்களையும், நகைகளையும், சீர்வரிசையாகக் கொடுக்கின்றனர். இதன் விளைவாக வசதியில் குறைந்தவர்களும் கூட தங்கள் தகுதிக்கு மீறிய அளவில் சீர்வரிசை கொடுக்கும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இதனால் பல பெண்களின் வாழ்வு கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

மாறிவரும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் நம் செட்டிநாட்டுப் பகுதிகளில் சாமான்களைப் பாதுகாக்கப் போதிய இட வசதியில்லாதவர்கள் வாடகைக்கு அறை பிடிக்கிறார்கள். இப்போது சாமான் போடும் அறைகளின் வாடகையும் கணிசமாக உயர்ந்துள்ளது. என்றோ ஒருநாள் உபயோகிக்கக்கூடிய சாமான்களுக்கு நாம் வருடா வருடம் வாடகை கொடுக்கின்றோம். இப்போது அவைகளின் பராமரிப்புச்சிரமம் காரணமாக பல இடங்களில் விசேடங்களில் புழங்கத் தேவையான சாமான்களை வாடகைக்கு எடுக்கும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

சீர்வரிசைச் சாமான்களில் பெரும்பகுதி அப்படியே பாதுகாக்கப்பட்டு அவர்களுடைய பெண் பிள்ளைக்குத் திருமணத்தில் கொடுக்கப்பட்டு, இப்படியே வழிவழியாகக் கைமாறிக் கொண்டேயிருக்கின்றனவே தவிர, உபயோகம் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் இதில் மிகக் குறைந்த சதவிகிதமே தேறும்.

தங்களுக்குத் தெரிந்தவையெல்லாம் ஆண்கள் பேசுவார்கள். ஆனால் பெண்கள் தங்கள் மனதுக்கு பிடித்தமானதை மட்டுமே பேசுவார்கள்.

- ருஸோ

அந்தக் காலத்தில் நம் முன்னோர்கள் கடல் கடந்து பர்மா, செய்கோன், மலேயா போன்ற நாடுகளுக்குத் தொழில் செய்யச் சென்றதனால் மங்குச் சாமான்கள் போன்ற சாமான்களை எளிதாக வாங்கிவர முடிந்தது. எனவே அதைச் சீர்வரிசையாகக் கொடுத்தனர். இப்போது அவ்வாறாகச் செல்லும் பழக்கமே அரிதாகிவிட்ட நிலையில் மங்குச் சாமான்களை சேகரித்துப் பாதுகாப்பதும், சீர் வரிசைக்காக அதிக விலை கொடுத்து வாங்குவதும் தேவையில்லாத ஒன்று. இந்நாட்களில் மங்குச் சாமான்களின் புழக்கமே மிக அரிதாகிவிட்டது.

இப்போது நம் நகரத்தார்களில் பெரும்பான்மையோர் வேலை மற்றும் தொழில் நிமித்தம் காரணமாகப் பல ஊர்களுக்குச் சென்று வசிக்கினற காரணத்தால் நம் ஊர்களில் உள்ள பெரிய வீடுகளில் எல்லாம் மிகக் குறைந்த எண்ணிக்கையில் தான் நகரத்தார் வசிக்கிறார்கள். அல்லது பெரும்பான்மையான வீடுகள் பூட்டியே இருக்கின்றன. ஊரில் திருமணம், திருவிழா போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே வருகின்றனர். இதனால் திருட்டுப் பயமும் அதிகமாக உள்ளது. ஆளில்லாத வீடுகளில் வாடகைக்குச் சாமான்களைப் போட்டு வைப்பதனால் அனைத்துப் பொருள்களுமே களவுபோகும் நிலையும் பல இடங்களில் ஏற்படுகிறது.

நாம் தேவைக்கு அதிகமாக சாமான்களிலும், நகைகளிலும் பணத்தை முடக்குவதின் மூலம் அவற்றில் பெரும்பகுதி வருவாய் வாராப் பொருளாக முடக்கப்படுகின்றது. அவற்றின் சொத்து மதிப்பும் கணிசமான அளவு அதிகரிப்பதில் லை.

ஒருநாள் கல்யாணத்துக்குக் கொடுக்கப் போகும் சீர் வரிசைக்காக நம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சேமிப்பிலும், சிக்கனத்திலும் செலவிடுவதால் பல நல்ல விஷயங்களை அனுபவிக்க முடியாமல் இழக்க நேரிடுகிறது.

இவ்வாறு பல பாதிப்புகளை ஏற்படுத்தும் சீர்வரிசை பற்றி நாமும் கொஞ்சம் சிந்திக்கலாமே.



பெண் தனியாக இருக்கவும், வாழவும் பிறக்கவில்லை. முதலில் பெற்றோர்களுடனும் பிறகு கணவனுடனும் பிற்காலத்தில் தன் பிள்ளைகளுடனும் வாழவேண்டும்.

- அனுத்தம்மா

பெருமைக்குரிய ஆச்சிமார்கள் யார்?

1. 1995இல் இவரது கல்விப் பணிக்காக அழகப்பா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்தது? யார் அவர்.
2. அபிராமி அந்தாதியைப் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்.பில். ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர் யார்?
3. அமெரிக்காவில் மிச்சிகன் தமிழ்ச் சங்கம் டெட்ராய்ட் நகரில் நடத்திய விழாவில் 'சொல்லின் செல்வி' எனும் பட்டம் கொடுத்துப் பாராட்டப் பெற்ற நகரத்தார் பெண்மணி யார்?
4. தஞ்சாவூர் ஓவியத்தைப் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர் யார்?
5. நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் பெங்களூரில் மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்துகொண்டு மருத்துவமனையும் நடத்திப் பெயர் பெற்றுள்ளார். யார்?
6. செட்டிநாட்டுப் பெண் பெயரால் தமிழில் ஓர் அகராதி வந்துள்ளது. யார் அவர்?
7. சமூக சேவகி அல்லதுபெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் தொண்டு நிறுவனத்திற்கும் பாடுபடுபவர்களுக்கும் செட்டிநாட்டுப் பெருமாட்டி ஒருவர் பெயரால் ஆண்டுதோறும் ஒரு பரிசு அளிக்கப்படுகிறது. யார் அவர்?
8. செட்டிநாட்டுச் சூழலில் ஆச்சிகளை மையமாக வைத்து நகரத்தார் எழுத்தாளர்கள் சில இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவை எவை?
9. 'மாசாத்தியார்' என்ற பெண் சங்கப்புலவர் செட்டி நாட்டில் பிறந்தவர். இவர் பாடிய 'கெடுக சிந்தை' என்ற பாடல் 1982 ஆம் ஆண்டு கல்வெட்டாகத் திறக்கப்பட்டுள்ளது. அப் பெண் புலவர் பிறந்த ஊர் எது?
10. சென்னையில் பேருந்து நிறுத்தத்தில் முக்கியமான ஒரு பேருந்து நிறுத்தம் இராங்கியம் ஆச்சியின் பெயரால் பல இலட்சம் பேர்கள் சொல்லும் வகையில் திகழ்ந்து வருகிறது. அந்த ஆச்சி பெயரால் அமைந்த பேருந்து நிறுத்தத்தின் பெயர் என்ன?
11. 63 நாயன்மார்களில் நகரத்தார் மங்கை யார்?
12. தினமலர் நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வரும் நகரத்தார் பெண் யார்?
13. நகரத்தார் நடத்திவரும் ஒரு மகளிர் கல்லூரி எங்குள்ளது? பெயர் என்ன?
14. முருகு சுப்பிரமணியனும், அரு. பெரியண்ணனும் 1947ல் பெண் பெயர் கொண்ட ஓர் இதழை வெற்றிகரமாக நடத்தினர். அவ்விதழின் பெயர் என்ன?

இரண்டு ஆண்கள் இணைந்தும் செய்ய முடியாததை ஒரு பெண் தனியாகச் சுலபமாகச் செய்து காட்டுவாள்.
- காண்டேகர்

15. அமெரிக்காவில் வைரம் பற்றிய ஆய்வில் பட்டம் பெற்று நவரத்தினக் கற்கள் ஆய்வில் டிப்ளமா பட்டம் பெற்று வைர வணிகத்தில் முன்னோடியாக உள்ள நகரத்தார் பெண்ணின் பெயர் என்ன?

16. சட்டப் படிப்புகள் படித்து, வழக்கறிஞராகப் பணிபுரிந்து இப்பொழுது நீதித் துறையில் கோவையில் மாவட்ட நீதி மன்றத்தில் இரண்டாவது கூடுதல் நீதிபதியாகப் பணிபுரியம் பெருமைக்குரிய முதல் நகரத்தார் பெண்மணியார்?

17. சென்னையில் பல்லாவரத்தில் அ.தி.மு.க. சார்பில் 21-வது வார்டில் நின்று வெற்றி பெற்ற பெண்மணி யார்?

18. அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் டிராஸ் என்ற ஊரில் தமிழ் வானொலி நிலையம் வைத்துள்ள நகரத்தார் பெண்மணி யார்?

19. இண்டர்நேஷனல் சப் ஜூனியரான செஸ் சாம்பியன், ஐந்து முறை தேசிய அளவில் சாம்பியன் பட்டம் பெற்றவர். 1999 ஸ்பெயினில் நடைபெற்ற 53 நாடுகள் போட்டியில் உலகச் சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர் யார்?

20. மூதாட்டி ஔவையார் போல - இளம் வயதிலேயே தமிழ் அறிவு நிரம்பப் பெற்று 10 விருதுகள் பெற்று, பல்வேறு பத்திரிக்கைகள் பாராட்டிடத் தன் தமிழ்த் திறனை வெளிப்படுத்திச் செட்டிநாடு வித்யாஷ்ரமப் பள்ளியில் இறுதிப் படிப்புவரை ஸ்காலர்ஷிப் பெற்றுள்ள சிறுமியின் பெயர் என்ன?

21. ஆராவயலில் உள்ள ஊருணிக்கரைப் பிள்ளையார் கோயிலில் தான் வாழ்ந்த 80 வயதுவரை பிள்ளையார் கோயிலை தினம் கூட்டி, சாணமிட்டு, கோலமிட்டு, வெல்லம் வைத்து இறைத்தொண்டு செய்த ஆச்சியின் பெயர் என்ன?

22. கானாடுகாத்தான் பேரூராட்சித் தலைவராக போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி யார்?

23. சென்னையில் கார், இருசக்கர வண்டி ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி வைத்து நடத்திவரும் பெண்மணி யார்?

விடைகள் : கடைசிப் பக்கம்



புத்திசாலித்தனமன்று; இதயம்தான் பெண்களோடு விவாதம் செய்கிறது.

\- மாத்யூ ஆர்னால்டு

நகரத்தார் பெண்கள் பெயர்கள்

நகரத்தார் சமூகத்தில் பிள்ளைகளுக்குப் பெயரிடுவதில் ஒரு மரபு பின்பற்றப்படுகிறது. பிள்ளையின் ஐயா அல்லது அப்பத்தாள் பெயர், ஆயாள் பெயர் எனக் குடும்ப முன்னோர் பெயரை இடுவர். அல்லது குலதெய்வத்தின் பெயரை இடுவர். இதுவே மரபு. அண்மைக் காலமாகப் பிற நாகரிகத் தாக்கங்களின் விளைவாக தங்கள் நோக்குக்கும், போக்குக்கும் ஏற்ப, பல புதிய பெயர்களைச் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகட்கு வழங்கி வருகின்றனர். அவை சுரேஷ், ரமேஷ், ராஜா, பூஜா, பானு, பஞ்சு, மஞ்சு, நிம்மி, பப்பி, இந்து, ரவி. கங்கா, ராஜேஷ், பாலு, சரண், திவ்யா, நிவ்யா, சந்தியா, ரிஷி, ஸ்வப்னா, குமார், மாலினி, கிஷோர், பாபு. ஆனால் அவர்களும் கூடத் தங்கள் குடும்ப மரபுப்படியான ஒரு பெயரைப் பிள்ளைக்கு இட்டுவிட்டு, கூப்பிடுவதற்கு மட்டுமே தங்கள் விருப்பப்படியான பெயரைப் பயன்படுத்துகின்றனர்.

இப்படிப் புதிதாகப் பயன்படுத்தப் பெறும் பெயர்களை நீக்கிவிட்டு நகரத்தார் சமூகத்தினர் மரபாகப் பயன்படுத்தும் ஆண் பெண் பெயர்களைத் தொகுத்துப் பட்டியலிட்டால் இரு செய்திகள் சிறப்பாகத் தெரிய வருகின்றன. ஒன்று, நகரத்தார் பயன்படுத்தும் பெயர்கள் அனைத்தும் இறைத் தொடர்புடையவை. மற்றொன்று, அவற்றுள் மிகப் பெரும்பாலானவை தனித் தமிழில், நல்ல தமிழில் அமைந்தவை. பெண் பெயர்கள் பட்டியலைக் கீழே காணலாம்.

பெண் பெயர்கள்

அகிலா
அகிலாண்டேசுவரி (அகிலாண்டேஸ்வரி)
அங்கையற்கண்ணி
அடைக்கம்மை
அரங்கநாயகி (ரெங்கநாயகி)
அலமேலு (அலர்மேலு)
அழகம்மை
அன்னபூரணி
அன்னம்
ஆண்டாத்தாள் (ஆண்டாள்)
ஆதம்மை
இந்திரா
இராக்காயி (ராக்காயி)
இராசாமணி (ராஜாமணி)
இராமாயி (ராமாயி)
இலட்சுமி (லெக்ஷ்மி)
இன்பவல்லி
உடையம்மை
உண்ணாமலை
உமா
உமாமகேசுவரி (உமாமகேஸ்வரி)
உமையாள்
உருக்குமணி (ருக்குமணி)
உலகம்மை
உலகநாயகி (லோகநாயகி)

மனித வாழ்க்கையை நமக்குத் தந்தவர்களும் அதை மணம் பெறச் செய்தவர்களும் பெண்களே.

- போளி

ஏகம்மை
ஒப்பிலாள்
கண்ணபுரம்
கண்ணம்மை
கண்ணாத்தாள்
கத்தூரி (கஸ்தூரி)
கமலா
கமலி
கருப்பாயி
கல்யாணி
கற்பகம்
கற்பகவல்லி
கனகம்
கனகவல்லி
காந்தி
காந்திமதி
காவேரி
காளியம்மை
குப்பாயி
குப்பி
கோகிலாம்பாள்
கோதை
கோமதி
கௌசல்யா
சகுந்தலா
சரசுவதி (சரஸ்வதி)
சரோசா (சரோஜா)
சாத்தம்மை
சாரதா
சானகி (ஜானகி)
சிகப்பி
சிட்டாள்
சிந்தாமணி
சிவகாமி
சீதாலட்சுமி (சீதாலெக்ஷ்மி)
சீதை
சுலோசனா
சூடிக்கொடுத்தாள்
செல்லம்மை
சேதுக்கரசி
சேவாள்
சொர்ணம் (ஸ்வர்ணம்)
சொர்ணலட்சுமி (ஸ்வர்ணலெக்ஷ்மி)
சொர்ணவல்லி (ஸ்வர்ணவல்லி)
சோகி
சோலை
சோலைச்சி
சௌந்தரம்
சௌந்தரநாயகி
சௌந்தரவல்லி
ஞானம்
ஞானாம்பாள்
தமயந்தி
தருமாம்பாள்
தனலெட்சுமி (தனலெக்ஷ்மி)
திருநெல்லை
தில்லை
தெய்வானை
தேனம்மை
தையல்நாயகி
நல்லம்மை
நாகம்மை
நாச்சம்மை
நாச்சாள்
நீலா
பஞ்சவர்ணம்
பஞ்சு
பாகம்பரியாள் (பாதம்பரியாள்) (பாதம் பெரியாள்)
பாப்பா
பார்வதி
பாலாம்பாள்
பிச்சம்மை
பெத்தாள்
பெரிச்சி
பெரியநாயகி
பெரியாள்
பொற்கொடியாள்
பொன்னம்மாள்
பொன்னழகி
பொன்னழகு
பொன்னி
மங்கை
மங்கையர்கரசி
மணி
மணிமேகலை
மாசிலாமணி
மாணிக்கம்
மாணிக்கவல்லி
மீனாள்
மீனாட்சி (மீனாக்ஷி)
மீனாம்பாள்
முத்து
முத்தாத்தாள்
முத்தாயி
முத்துக்கருப்பி
மெய்யம்மை
மேனகா
வசந்தாள்
வடிவு
வடிவுக்கரசி
வடிவாம்பாள்
வள்ளி
வள்ளியம்மை
விசாலாட்சி (விசாலாக்ஷி)
வினைதீர்த்தாள்

ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைக் காட்டிலும் ஒரு ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம்தான்.

- செர்பியா பழமொழி

செட்டிமார் குடும்பங்கள் எல்லாம் காலங்காலமாகப் பண்பாட்டைக் காப்பாற்றி வரும் குடும்பங்கள்! நாம் சங்க காலத்திலிருந்தே தமிழக வரலாற்றில் கால் ஊன்றியவர்கள்! இறையுணர்வில் மனம் பதித்து, சமயமாகிய கோட்டைக்கு முதன்மை அரண் காவலர்களாய் நாம் இருப்பதைக் காஞ்சி சங்கராச்சாரிய மகா பெரியவர் சமயம் வாய்க்கும் போதெல்லாம் பாராட்டிப் பேசியுள்ளார்கள். பண்பாட்டின் - பாரம்பரியத்தின் தொடக்கம் நனி நாகரிகமுடைய நகரத்தார் பெயர்களில் உள்ளன. எனவே நகரத்தார் எல்லோரும் நமது நல் தமிழ்ப்பெயர்களைப் பிள்ளைகளுக்கு இட்டு எப்போதும் போல் பண்பாடு பேணுவோம்.

நகரத்தார் பெண்கள் சங்கம்

(ஆச்சிமார்கள் சங்கம்)

இன்று நமது சமூகத்தில் பெரும் பிரச்சினையாக இருப்பது பெண்கள் திருமணப் பிரச்சினையாகும். ஆச்சிமார்களே இந்த பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். ஆச்சிமார்கள் நினைத்தால் முடியாது எதுவுமில்லை. இன்றைக்கு நமது இனத்தில் படித்த பெண்களின் எண்ணிக்கை கூடி வருகின்றது. மாமியார் சாமான், சீதனம் வாங்குபவர்களை மடையர்கள் என்று எழுதினாலும், நாளுக்கு நாள் இந்த பிரச்சினை கூடுகின்றதே தவிரக் குறையவில்லை. இந்தப் பிரச்சினை தீர வழி என்ன? ஆச்சிமார்கள் நினைத்தால் தான் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆச்சிமார்கள் சொன்னால் செட்டியார்களும் தலையாட்டுவார்கள். புதுக்கோட்டையில் நகரத்தார் பெண்கள் சங்கம் உருவாகப் போகின்றது என்ற செய்தியை அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். இந்த நகரத்தார் பெண்கள் சங்கம் உதவித் தொகை வழங்கும் சங்கமாக இருக்காமல் அதன் முதல் பணியாக நமது சமுதாயத்தில் இன்றைக்குப் பெரும் பிரச்சினையாக உள்ள, பெண்கள் விலை பேசப்படுகின்ற அநியாயத்தை (மாமியார் சாமான், சீதனம்) தடுத்து நிறுத்த வழிகளை உருவாக்கி அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். இதுபோன்று சென்னை, மதுரை, காரைக்குடி போன்ற இடங்களில் நகரத்தார் பெண்கள் சங்கம் அமைக்கப்படவேண்டும். மாமியார் சாமான் சீதனம் கேட்பவர்களைச் சமுதாயம் கேவலமாகப் பார்க்கும்படியான நிலையை நகரத்தார் பெண்கள் சங்கம் உருவாக்க வேண்டும். உங்கள் வாழ்வும், தாழ்வும் உங்கள் கையிலேயே உள்ளது.

– நகரத்தார் இதழ் தலையங்கம்
மார்ச் 1994

பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அறிவாளிகள். காரணம் அவர்கள் அறிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும் சற்று அதிகம்.

- ஜேப்ஸ் ஸ்டீபன்ஸ்

குலம் காக்க நலம் சேர்க்கும் திருமகளே வருக!

(பெண்கள் பின் பற்றத் தக்கன)

பெண்கள் வீட்டின் கண்கள் என்பார்கள். அந்தப் பெண்கள் லட்சுமிகரமாகத் திகழ எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பெண்கள் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். எழுந்தவுடன் சுவாமி படங்களைப் பார்க்க வேண்டும்.

அதிகாலையில் எழுந்து முதலில் வீட்டின் தலைவாசலைத் திறக்கும் போது லட்சுமியின் பெயரைச் சொல்லித் திறக்க வேண்டும்.

காலையில் எழுந்து குளித்துவிட்டு நெற்றிக்குக் குங்குமம் இட்டுக் கொள்ள வேண்டும். ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொள்ளக் கூடாது.

சமையல் வேலையைத் தொடங்கும்முன் இறைவனையோ, துளசியையோ வணங்கிய பின்புதான் மற்ற வேலையைத் தொடங்க வேண்டும். காலையில் விளக்கேற்றிச் சுவாமி கும்பிடுவது சகல சௌபாக்கியத்தையும் தரும்.

தலையை விரித்துப் போட்டுக் கொண்டு திரியக் கூடாது.

காலையில் பேசும் வார்த்தைகளை மங்களகரமான நல்ல வார்த்தைகளாகப் பேசுதல் வேண்டும்.

பாலை அடுப்பில் பொங்கி வழியவோ தீயவோ விடக்கூடாது.

வீட்டின் முன்பு கோலம் போடவேண்டும். கோலத்தில் ஆங்கில வார்த்தைகள் உபயோகிக்கக் கூடாது. எடுத்துக்காட்டு Welcome, Happy போன்றவை.

பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டும். புதன், சனிக்கிழமைகளில் எண்ணெய் ஸ்நானம் செய்யக்கூடாது.

வெள்ளிக் கிழமைகளில் வீட்டிற்கு உப்பு வாங்குவது அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்.

வீட்டின் உள்ளே நகத்தைக் கடித்தோ வெட்டியோ போடக்கூடாது.

அம்மனுக்கு உகந்த ஆடி, தை மாத வெள்ளிக்கிழமைகளில் அருகிலிருக்கும் அம்மன் கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வழிபடவேண்டும். மாவிளக்கும், நெய்விளக்கும் ஏற்றி வழிபட லட்சுமியின் அருள் கிடைக்கும்.

கடவுளைக் காட்டு என்கிறவர்களுக்கு அவன் படைத்த பெண்ணைக் காட்டினாலே போதும்.

- கிரீஸ் பழமொழி

இருட்டிய பின்னர் குப்பையை வெளியே போடக்கூடாது; பேன் எடுத்தல், தயிர் கடைவது, தயிர் சாப்பிடுவது, காய்கறி நறுக்குவது, அரிசி களைவது போன்றவற்றைச் செய்யக்கூடாது.

பால், தயிர், காய், தண்ணீர்க்குடம் போன்றவற்றை விளக்கு வைத்த பின்னர் வீட்டிலிருந்து மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுக்கக் கூடாது.

மாலையில் தீபம் வைத்தவுடன் வீட்டைப் பூட்டக்கூடாது. திறந்து வைக்கவேண்டும். லட்சுமி வீட்டிற்குள்ளே வரும் நேரம் அது.

வீட்டிற்கு வரும் பெண்களுக்கு (சுமங்கலிகளுக்கு) குங்குமம், பூ ஆகியவை கொடுக்க வேண்டும்.

முதலில் பெண்கள் தங்கள் நெற்றியில் இட்டுக் கொண்டு பின்னர் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

– நன்றி. நகரத்தார் மலர்



ஆணும் பெண்ணும் சமத்துவம் பெறாத இடம் நாகரிகம் காணாத இடம்.

- விஜயலக்ஷ்மி பண்டிட்

பெண்களாலும் முடியும்

பெண் இனத்துக்கு பெருமை தேடித் தந்தவர்கள்

செ. அங்கையற்கண்ணி, செ. நிலவு

1. அல்பேனியாவில் பிறந்த அன்னை தெரசா தன்னுடைய சேவைகளால் உலகப் புகழ் பெற்றார்.

2. எவரெஸ்ட்டில் முதலில் ஏறிய இந்திய பெண் மணிபச்சேந்திரபால் 1984 மே25.

3. கொடிக்காத்துப் புகழ்பெற்றார் பிரெஞ்சு வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க்.

4. இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற பெண்மணி பியர்க்.

5. மல்யுத்தத்தில்புகழ் பெற்றவர் ஆந்திராவைச் சேர்ந்த மல்லேஸ்வரி.

6. ஆங்கிலக் கால்வாயை கடந்த முதல் பெண்மணி ஆர்த்தியர்ஷா

7. உலகில் புகழ் பெற்ற பெண் தலைமை அமைச்சர்கள்
   1. அன்னை இந்திராகாந்தி (இந்தியா), 2. பிரிட்டிசு தலைமை அமைச்சர் மார்க்ரட் தாட்சர் (இங்கிலாந்து), 3. கோல்டா மேயர் (இசுரேல்), 4. சிரிமாவோ பண்டாரநாயகா (இலங்கை), 5. பெனாசீர் புட்டோ (பாகிஸ்தான்), 6.களிதாசீயா,ஷேக்அசீனா (வங்காளதேசம்).

8. விளையாட்டில் சாதனைகள் பல புரிந்தவர் கேரளா நங்கை பி.டி. உஷா.

9. இந்தியாவின் முதல் பெண் விமானி 1994- ஹரிதா போஸ்.

10. இந்தியக்காவல் துறையில் தனியிடம் பெற்றவர் பெண் இனத்துக்கு வழிகாட்டியாக இருப்பவர் கிரண்பேடி.

11. தமிழகத்தில் இரண்டு மாநகராட்சிகளின் மேயராக இருப்பவர்கள்
    1. புனிதவல்லி பழனியாண்டி - திருச்சி
    2. உமாமகேசுவரி - நெல்லை.

ஒரு இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண்ணால் மட்டுமே முடியும்.

- *சீனப்பழமொழி*

12. இந்தியாவை இந்தியர்களே ஆளவேண்டுமென்ற நோக்கத்துடன் ஹோம்ரூல் லீக் என்ற இயக்கத்தை லண்டனில் பிறந்த அன்னிபெசண்ட் அம்மையார் தொடங்கினார்.

13. 1917ல் இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவராக அன்னிபெசண்ட் அம்மையார் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

14. உலகில் பெண்களுக்கு முதன் முதலாக வாக்குரிமை அளித்த நாடு நியூசிலாந்து ஆகும்.

15. உலகிலேயே முதன் முதலாக மருத்துவப்படிப்பு படித்து டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணி காரட் ஆண்டர்ச்ன்.

16. தமிழ்நாட்டில் 1996 செப்டம்பரில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் உள்ள மொத்த பதவிகள் ஒரு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்தில் 45 ஆயிரம் பதவிகளை மகளிர் பெற்றுள்ளார்கள்.

17. தில்லியின் முதல் பெண் மேயர் அருணா ஆசப் அலி. இவர் ஒருவிடுதலைப் போராட்ட வீராங்கனை.

18. பஞ்சாபின் முதல் பெண் முதல்வராக இருந்தவர் ராஜிந்தர்கௌல் பட்டாள். உ.பியின் முதன் பெண் முதல்வர் - சுசேதாகிருபாளனி.

19. நிலவில் முதலில் காலடி எடுத்து வைத்த பெண்மணி வாலென்டினா.

20. இந்தியாவில் முதல் பெண்கள் பள்ளியை ஆரம்பித்தவர் சாவித்திரி (1831 - 1897). இவர் ஒரு கவிஞர். இவரே இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர்



பிரம்மன் பெண்களின் உள்ளத்தை மலர்களாக ஆக்கியிருக்கிறான்.

- காண்டேகர்

விடைகள்

1. விடை : திருமதி உமையாள் இராமநாதன் - கோட்டையூர்

2. விடை : திருமதி தேவகி முத்தையா - கானாடுகாத்தான்

3. விடை : திருமதி உமையாள் முத்து - புதுவயல்

4. விடை : திருமதி குமாரராணி முத்தையா- கானாடுகாத்தான்

5. விடை : டாக்டர் நாச்சாள் அண்ணாமலை - கண்டவராயன்பட்டி

6. விடை : மணிமேகலை அகராதி - தமிழ்வாணன் துணைவியார் - தேவகோட்டை

7. விடை : ராணி மெய்யம்மை ஆச்சி பரிசு- கானாடுகாத்தான்

8. விடை : கவிஞர் கண்ணதாசனின் 'ஆச்சி', எஸ்.ஏ.பி. அண்ணாமலையின் - 'சின்னம்மா', முனைவர் ஆறு. அழகப்பனின் 'கறிவேப்பலை நாடகம்', முனைவர் தமிழண்ணலின் 'பழநிமலைக் காவடி' முதலிய பல நூல்களாகும்

9. விடை : ஒக்கூர்

10. விடை : 'கமலா' ஸ்டாப். மீனாட்சி மைந்தர் வி.என். சிதம்பரத்தின் துணைவியார் பெயர் - ராங்கியம்

11. விடை : காரைக்கால் அம்மையார்.

12. விடை : சேஷ. கல்யாணி (காரைக்குடி)

13. விடை : பள்ளத்தூர் சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி

14. விடை : பொன்னி

15. விடை : மீனு சுப்பையா - பள்ளத்தூர்

16. விடை : மீனாள் பழநியப்பன் - விரையாச்சிலை

17. விடை : சீதா தியாகராசன்-கீழச்சீவல்பட்டி

18. விடை : சிவகாமி சொக்கலிங்கம் மாணிக்கம்

19. விடை : செல்வி ஆர்த்தி இராமசாமி

20. விடை : க. ஆதிரை -காரைக்குடி


21. விடை : வங்காளத்தார் வீட்டைச் சேர்ந்த மெய்யப்ப செட்டியார் துணைவியார் முத்துக் கருப்பி ஆச்சி - ஆராவயல்

22. விடை : வசந்தா சிதம்பரம்-நேமத்தான் பட்டி

23. விடை : வள்ளி வள்ளியப்பன் - கொத்தமங்கலம்

தாயின் இதயம்தான் குழந்தையின் முதற் பள்ளிக்கூடம்.

- பீச்சர்


சனாதன தர்ம செந்நெறி
பரப்பிடும் திருமேனி போற்றி!
நாடெல்லாம் நற்செயல்கள் புரிந்திட
நடந்திடும் பாதமலர்கள் போற்றி!
நானிலம் போற்றும் நகரத்தார் குருபீடம்
தருமமிகு நாச்சியப்ப சுவாமிகள் போற்றி! போற்றி!

தெய்வம்

பேசுகிறது

பரவசமூட்டும் தெய்விக மாத இதழ்

மகான்களின் அருளாசிகள்

தெய்விக மணங்கமழும் அற்புதக் கட்டுரைகள்

புண்ணியத் தல வரலாறுகள்

பிரபல எழுத்தாளர்களின் தொடர்கள்

வாசகர் பங்குபெறும் ஆன்மிகப் போட்டி



ஒவ்வோர் இதழுடனும் பத்மவாசன் கைவண்ணத்தில் உங்கள் பூஜையறையை அலங்கரிக்கும் வண்ணப்படங்கள் அன்பளிப்பு...